THINAMURASU
16A, NELSON PLACE,
WELLAWATTE,
COLOMBO - 06.

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් செப். 14 - 20, 2006

# வாரமலர்
# தினமுரசு

THE ... NATIONAL TAMIL WEEKLY முரசு 679





## சம நிலையை கேள்விக்குட்படுத்திய சம்பூர் மோதல்!

## புலிகள் வகுக்கும் புதிய போர் வியூகங்கள்!



## ஆபாசமா? ஐஸ்வர்யா ராய்!



## ஐம்பது அழகிகளுடன் அஜித்!

## தத்துவம் பேசுகிறார் சினேகா!

## போவோம்! ரசிப்போம்! தேநீர் கோப்பை





## உலகை வென்றவர் வாழ்க்கையில் தோற்றுப்போனார்!

-அகாசியின் மறுபக்கம்

# ஆன்மீகம்

## 'என்னையாள் சற்குருவே!'

உலகில் பிறந்து வாழ்ந்து, மடிந்த, மடிகின்ற அனைத்து உயிர்களுள்ளும் மனித உயிரின் தன்மை மற்றவைகளைவிட வேறுபட்டது என்ற கூற்று புராதன காலந்தொட்டு இன்றுவரை பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும், அதற்கான ஆதாரங்கள் சரியாக அமையவில்லை. அதற்கான வாதப்பிரதி வாதங்களும் இருக்கத்தான் செய்கின்றன. எது எப்படியிருந்தபோதிலும் மனித இனத்தின் உயிர் 'ஆன்மா' என்னும் பெயர் பெற்றிருப்பதில் ஒரு அசாதாரணத்தன்மை இழையோடி இருப்பது கவனிக்கத்தக்கது.


இதற்குச் சான்று பகர்வது போல் மனித உயிருக்கு மறுபிறவி உண்டு என்ற கருத்து அநேகமாக சைவ சித்தாந்தத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை இதனை வலியுறுத்தி நிற்கின்றது. மனிதர்களின் ஆசைக்கேற்ப ஆன்மா திரும்பத் திரும்ப பிறந்து பிறந்து உழன்று மறைகிறது என்பதை -

"இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி"

என்னும் திருப்புகழ் வரிகள் மேற்கூறப்பட்ட கருத்தை வலியுறுத்தி இருப்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வுலகில் நான் இறந்தாலும், இறவாமையாகிய புகழை அடைய வேண்டும். அப்படிப் புகழை அடைந்தாலும், மீண்டும் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து துன்பத்தை அடையாதிருக்க என்னை ஆட்கொள்வாயாக என்றார் போலும்.

-என். எஸ். ராஜா, தம்பலகாமம்.



## இருளுக்குப் பின்தான் ஒளி

'நான் அல்லும் பகலும் ஆண்டவரை வேண்டுகிறேன். என் வேதனைகள் அகலவில்லை. சோதனைகள் தீரவில்லை. எனக்கு ஏன் தான் இப்படிச் சோதனையும் வேதனையும். அந்த ஆண்டவருக்கு கண் இல்லையா?' என்று நம்மில் பலர் புலம்பிக் கொண்டிருக்கிறோம். ஒரு வகையில் பார்த்தால் அவரவருக்குரிய வேதனையும் வலியும் அவரவருக்குத்தான் தெரியும்.

தனக்கு வந்தால் தான் தலைவலி தெரியும். அவனுக்கு வந்தால் எனக்கு எப்படித் தெரியும், அந்த வேதனையும் அதன் விளைவும்? இப்படியும் சிலர் கேட்கலாம்.

ஆம், பிரியமான சகோதர, சகோதரிகளே! வேதனையைக் கண்டு வெம்பி விடாதீர்கள். சோதனையைக் கண்டு சோர்ந்து விடாதீர்கள். எல்லாம் தேவனின் சித்தம். நல்ல உள்ளம் கொண்டவர்களை தூய - எண்ணம் கொண்டவர்களை கர்த்தர் சோதனை செய்து பார்க்கிறார். தங்கம் ஒளிர் விட புடம் போடப்படுவதைப் போல, வாழ்வில் நீங்கள் பிரகாசிக்க சோதனைகள் கர்த்தர் மூலம் வருகிறது. இது எதற்காக? உண்மையான தேவ விசுவாசம் உண்டா என்று பரீட்சித்துப் பார்ப்பதற்கே. இருள் வந்தால் ஒளி பிறக்கும். சோதனைக்குப் பின் வருவதோ சுக வாழ்வு. திடம் கொள்வோம். தேவன் தன் பிள்ளைகளைக் கைவிடுவதில்லை.

-எம். ஏ. எஸ். சண்முகம், வத்தளை

## அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள்!

மு..மின்களே! அல்லாஹ் உங்களுக்கு ஹலாலாக்கி ஆகுமாக்கியுள்ள பரிசுத்தமான பொருட்களை ஹறாமான வையாக விலக்கப்பட்டவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். இன்னும் வரம்பு மீறியும் செல்லாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை.


அல்லாஹ் உங்களுக்கு அனுமதியளித்துள்ள ஹலாலான நல்ல பொருட்களையே புசியுங்கள். நீங்கள் ஈமான் கொண்டிருக்கும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.

அத்தியாயம் - 05 வசனம் - 87,88

-மனாப் மனாஸிர், புதிய காத்தான்குடி.

---

## கவிதைப் போட்டி இல.676



பரிசுக்குரிய கவிதை

### நிலை

பாய்ந்த நதியும்
காய்ந்து கிடக்குது
பசித்த வயிறும்
பட்டினி கிடக்குது
பச்சை வயலில்
குண்டு வெடிக்குது
பாவிச் சமாதானம்
யுத்தம் நாடுது.

–கே. புவனேந்திரன்,
சந்திவெளி

### சமாதானம்

வற்றிய குளம் போல்
இந்நாட்டில்
சமாதானமும் வறண்டு
விடுமோ?

–எஸ்.எம்.நஜ்மால்,
புத்தளம்.

### தரிசனம்

வற்றிக் கிடப்பது
நீர் மட்டுமா?
என்
நம்பிக்கையும்
அவர்களின்
வாக்குறுதிகளும்
கூடத்தான்.

–மா.மோகனா,
மஸ்கெலியா.

### ஏ(தா)க்கம்

வற்றாத அருவி
வறண்டு விட்டது...!
வழி பார்த்து விழியும்
இருண்டு விட்டது...
காத்திருந்து காலமும்
உருண்டு விட்டது - இனி
கருணையற்றவர்களின்
கணைகளால்
அணை திறபடுமா...?

–அ.ரவி,
மட்டக்களப்பு.

### அந்தோ பரிதாபம்!

வற்றிய நீர் நிலையிலே
வற்றாத நினைவுகள் நித்தமும்!
வயிற்றுப் பசியைப் போக்கிய
வயல் காடு
இன்று பிணம் தின்னும்
சுடுகாடாக!
இந்த வழியே போன மகனும்,
மகளும்
சடலமாக திரும்ப!
பாவி மனம் பதறுகிறது!

–எஸ்.நஸ்மியா,
கபல்கஸ்தென்னை.

### நீர் வராது...

நீர், விரும்பினாலும்
விரும்பாவிடினும்
நீர் வராது - கோரப்
போர்தான் வரும்,
இனங்களைக்
கூறுபோட...!
கண்களில் கண்ணீரும்,
அங்கங்களில் குருதியும்
நிச்சயம் வரும்...!
நீர் வரவே வராது...

–பை.யூசுப்,
கிராண்ட்பாஸ்.

### நீர்

கழனி காய்ந்ததென
நீர் கேட்டோம்
வந்ததோ வயலுக்கு
மனித இரத்தமும்
துப்பாக்கி ரவைகளும்.

–சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### மாவிலாறு

மாவிலாறு பிரச்சினையால்
மாண்டவர் பொது மக்களே...
மானிடர்க்கு தண்ணீர் கேட்டு
மாறி மாறி தினம் அடிபாடு.
மானிடரே இல்லா இடத்தில்
மாவிலாறு தண்ணீர் எதற்கு?...

–அலாவுடீன் ஏ.எல்.ஏ.பாபு,
திருகோணமலை.


### இன்று

நீ உறைந்து விட்டாய்
என் உறக்கத்தைக்
கெடுத்து விட்டு
நீ பாய்ந்த இடமெல்லாம்
பச்சை வெளி

நான் நடந்த இடமெல்லாம்
குண்டு வெடி
விமானக் குண்டு வெடி.

–கே.இந்திரன்,
கொழும்பு – 13.

## கவிதைப் போட்டி இல.679



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.09.2006.

கவிதைப் போட்டி இல.679
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.




# உங்கள் பக்கம்

## ஏமாற்றப்படும் மாணவ சமூகம்.

புத்தளம், கல்பிட்டி வீதி, நாவற்காடு அ.றோ.கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு அமைச்சர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கணனியில், அதிலுள்ள பாகங்கள் சிலவற்றைக் கழற்றிவிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது கணனியின் 'ஹாட் டிஸ்க்' கழற்றப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. கணனியின் 'ஹாட் டிஸ்க்' இல்லாவிட்டால் கணனி எவ்வாறு வேலை செய்யும்? தயவு செய்து ஒரு கண்துடைப்புக்காக பாடசாலைகளுக்கு இப்படியான கணனிகளைக் கொடுத்து மாணவர்களை ஏமாற்ற வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோன்.

–டிக்சன்,
நாவற்காடு

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

## எதற்கும் துணிந்த முரசு!

பத்திரிகைச் சுதந்திரம் இல்லை, கருத்துச் சுதந்திரம் இல்லை, வாயைத் திறந்தால் தலையில் சூடு - இப்படியான சூழ்நிலையில் நீங்கள் உங்கள் உயிரைத் துச்சமாக மதித்து, உள்ள தவறுகளை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதால் இப்பத்திரிகை பல கோடி ஆண்டு காலம் நிலைத்து நிற்க வேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறேன். இப்பத்திரிகை கிடைத்ததும் பசிக் களையும் இருக்காது. மிகவும் உற்சாகமாக இருக்கிறது. ஒவ்வொரு வாரமும் மரக்கறி வகைகள், பழவகைகள் அதில் உள்ள மருத்துவ குணங்கள் என பிரசுரித்தால் நன்றாக இருக்கும். மற்றும் தானிய குணங்கள், இதில் உள்ள விசேஷ குணங்கள் பலருக்குத் தெரியாதபடியால் பத்திரிகைகளில் பார்த்து புரிந்து கொள்ளலாம்.

–எஸ்.ஜெயகுமார்,
நோர்வே.

## முரசுக்கு நன்றி!

தினமுரசின் அபிமானிகளான நாம் அனுப்பும் ஆக்கங்களை குறிப்பாக ஆன்மீகம் போன்றவற்றை மூலையில் முடக்கி விடாமல், அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்து மாதங்கள் பல கடந்தாலும் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து, எம்மை மகிழ்விக்கும் தினமுரசுக்கு எமது நன்றிகள்.

தரமான ஆக்கங்களுக்கு தினமுரசில் தகுந்த இடம் உண்டு என்பதே எமது அசையாத நம்பிக்கை.

–முஹம்மது ஹஸனி,
199/C, புதிய வீதி,
கல்முனை – 07

## சிறப்புற வாழ்த்துக்கள்!

மதிப்புக்குரிய இதழ் ஆசிரியருக்கு, ஆகஸ்ட் 24 - 30 வரையான மலரைப் பெற்றேன். 'பட்டாம் பூச்சி' தொடர் நன்றாக இருக்கிறது. வானத்தில் வட்டமிட்டுப் பறக்க வாழ்த்துக்கள் மனதுக்கு நிம்மதி பகுதி, மன நிறைவைத் தந்தது. சிறப்பு மேம்பட வாழ்த்துக்கள்.

-ஆ. சந்திரமோகன்,
புஸ்ஸல்லாவ.

## சமய சமத்துவம்!

ஆன்மீகம் பகுதியில் மூன்று முக்கிய மதங்களையும், கருத்துக் களையும் சரிசமமாக மதிப்பளித்து வெளியிட்டு வருகிறீர்கள். அருமையிலும் அருமை. பாராட்டுக்கள் பல.

–முகமட் ஜபார்கான்,
துபாய்.

# பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சமூகப் பராமரிப்பு நிலையங்கள் நிறுவத் திட்டம்



கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது



இலங்கையில் சமூகப் பராமரிப்புப் பணிகளைப் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித கதியில் ஆரம்பிக்கப்படவுள்ள சமூகப் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். கடந்த 8ஆம் திகதி காலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். எமது நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்திலிருந்து நாம் மீட்சி பெறுவதற்கு சர்வதேச சமூகம் பொருள் ரீதியாகவும், மனிதாபிமான மற்றும் தொழில்நுட்ப ரீதியாகவும் பாரிய உதவிகளை வழங்கியுள்ளமையைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், கனடா அரசு இதற்கென அளப்பரிய உதவிகளை வழங்கியுள்ளமைக்காக அந்நாட்டிற்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். சமூகப் பராமரிப்பு நிலையங் களை நிறுவும் வேலைத் திட்டத்தை பிரதேச செயலாளர்கள் பிரிவு மட்டத்தில் இலங்கை முழுவதும் செயற்படுத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், இதன் முதற்கட்டமாக பாணந்துறையிலிருந்து, யாழ்ப்பாணம் வரையிலான கடற் கரையோரப் பகுதிகளிலும், இரண்டாவது கட்டமாக, கிளிநொச்சியிலிருந்து மொனறாகலை வரையிலான கடற் கரையோரப் பகுதிகளிலும் சமூகப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கிணங்க இலங்கையில் 28 சமூகப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ஐந்து நிலையங்களுக்கான வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, மகளிர் மேம்பாடு மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். இந்த இரு அமைச்சுக்களின் கீழ் சமூக சேவைகள் சார்ந்த அதிகாரிகளாகப் பணியாற்றி வருகின்ற பல்வேறு தராதரங்களைக் கொண்ட அனைவரும் மேற்படி பராமரிப்பு நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, அவர்களுக்குரிய பயிற்சிகளும் அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படுமென்றும் அமைச்சர் சொன்னார்.

சமூகப் பராமரிப்பு நிலையங்களுக்கான நிர்வாக விடயங்களைக் கனடிய க்வீன்ஸ் பல்கலைக்கழகம் வழங்குவதுடன், இதற்கான நிதியுதவிகளை கனடிய சீடா நிறுவனம் வழங்குகின்றது. இது யுனிசெப் மற்றும் சேவ்த சில்ரன் போன்ற நிறுவனங்களால் இனங்காணப்பட்டுள்ள மூன்று வருட வேலைத் திட்டம் என்றும் இத்திட்டம் மஹிந்த சிந்தனையை வலுப்படுத்துவதாக அமைகின்றது என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி மாநாட்டில் அமைச்சின் செயலாளர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், மேலதிகச் செயலாளர் திரு.சொய்ஸா மற்றும் அரசாங்க அதிபர்கள், சமூக சேவைகள் அதிகாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வைகோ கைது செய்யப்படலாம்

இந்தியாவில் தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியமைக்காக அவரைக் கைது செய்ய வேண்டுமென்று தமிழக காங்கிரஸ் எம்.பி.க்கள் வலியுறுத்தி வருகின்றனர். முன்னாள் இந்தியப் பிரதமரும் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராஜிவ் காந்தியின் கொலை வழக்கில் முக்கிய எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த, புலி இயக்கத் தலைவர் பிரபாகரனையும், அதன் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானையும் கைது செய்வதற்கு 'இன்டர்போல்' என்ற சர்வதேசப் பொலிஸாரின் உதவியை ஏற்கனவே இந்தியா நாடியுள்ளது. இந்த நிலையில் அவ்வாறான பயங்கரவாத இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசிவரும் வைகோ கைது செய்யப்பட வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

## அமைச்சர் அநுரா மீது ஒழுக்காற்று நடவடிக்கை

இலங்கையின் உள்விவகாரங்களில் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ் தலையிடுகிறாரென்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்துத் தொடர்பாக அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக சுதந்திரக் கட்சியின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியாவோடு இலங்கை நெருங்கிய உறவைக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் அநுரா பண்டார நாயக்கா பேசியுள்ளாரென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறியமைக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல அமைச்சர்கள் வலியுறுத்தியி ருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# பிரஸல்ஸ் இணைத் தலைமைக் கூட்டத்தில் சர்ச்சை; நோர்வே – ஐரோப்பிய ஒன்றியம் முரண்பாடு

இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் தற்போது நடத்திவரும் யுத்தத்தை உடனடியாகக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பி இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்திய டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத்தலைமை நாடுகள், இன்று இலங்கையில் நிலைமை மிக மோசமாகச் சீர்குலைந்திருப்பதற்கு இரு தரப்புகளுமே காரணமென்று குற்றஞ்சாட்டியுள்ளன. பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸில் 12ஆம் திகதி நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், முன்னாள் இலங்கைக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதியுமான எரிக் சொல்ஹெய்மின் வழிகாட்டலில் நடைபெற்றது. அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தமை தவறு என்றும் இதனால் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டதாகவும் நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹென்சன் போவர் அங்கு தெரிவித்த கருத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியான ஜூலியஸ் வில்சன் வன்மையாக எதிர்த்தாரென்று ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி முடக்கப்பட்டமையை நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்து இன்று மீண்டும் நோர்வே தரப்பினரால் கிளப்பப்பட்டதாகவும் அதற்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தாரென்றும் மாநாட்டு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் மேற்படி இரு விடயங்களும் கடந்த வாரம் முன்வைக்கப்பட்ட போது 50 வாக்குகள் எதிராகவும் 30 வாக்குகள் சாதகமாகவும் கிடைத்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. கடந்த ஜூன் மாதம் பிரஸல்ஸ் இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெற்றபோது இலங்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையைச் சீர் செய்வதற்கு அரசும் - புலிகளும் உடனடியாகவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திய அதே கருத்தினையே கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

சொல்லிலும் செயலிலும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் வன்செயல்களையும் புலிகள் இயக்கம் கைவிட்டு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டுமென்று பிரதிநிதி கள் வற்புறுத்தினர். ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்றே முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மக்களின் சட்டபூர்வ அபிலாஷைகளுக்கு தீர்வுகாணும் முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும் இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், மிரட்டல்கள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது. நாடெங்கும் இருக்கக் கூடிய தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டென்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய



நோர்வே தரப் பில் எரிக் சொல்ஹெய்ம், ஜொன ஹென சன் ஆகியோரும் ஜப்பான் சார்பில் யசூசி அகாசியும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜூலியஸ் வில்சனும், அமெரிக்காவின் சார்பில் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் பௌசர்

ஒன்றிய நாடுகள் விலகியுள்ளதால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களுக்கு மேலதிகக் கண்காணிப்பாளர்களை நியமிப்பது சம்பந்தமாகவும் அங்கு ஆராயப்பட்டது. நோர்வே தரப்பில் எரிக் சொல்ஹெய்ம், ஜோன் ஹென்சன் ஆகியோரும் ஜப்பான் சார்பில் யசூசி அகாசியும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜூலியஸ் வில்சனும், அமெரிக்காவின் சார்பில் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் பௌசர் உட்பட நான்கு தரப்புகளையும் சேர்ந்த மேலும் பல பிரதிநிதிகளும் பங்கு பற்றினர்.

யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் இரு தரப்புகளுமே சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் கடுமையான செயற்பாடுகளை இணைத் தலைமை நாடுகள் எடுக்க வேண்டுமென்று பல பிரதிநிதிகள் வலியுறுத்தியதாகவும் கூட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்தியப் பிரதமரையும் தமிழக முதல்வரையும் சந்திக்கச் சென்ற எம்.பி.க்கள் ஏமாற்றம்!

சம்பூரைப் படையினர் கைப்பற்றிய பின்னர் இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்துவதற்கு இந்தியா வற்புறுத்த வேண்டும் என்று கோருவதற்காக தமிழகத்துக்குச் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் குழு, முக்கிய தலைவர்கள் எவரையும் சந்திக்க முடியாமல் இன்னமும் அங்கேயே காத்திருக்கிறது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஆகியோரைச் சந்தித்துப் பேசும் நோக்கில் இந்தக் குழு இருவாரங்களுக்கு முன்னர் தமிழகம் சென்றது. ஆர்.சம்பந்தன் தலைமையில் சென்ற இக்குழுவில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதி ராஜா, சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கூட்டமைப்புக் குழு கேட்ட போதும், அதற்கான சந்தர்ப்பம் இதுவரை வழங்கப்படவில்லை. புலிகளின் முகவரமைப்பாகச் செயற்படும் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்தித்துப் பேசினால் தனக்கு புலி ஆதரவாளரென்ற முத்திரை குத்தப்படலாமென்று கருணாநிதி அஞ்சுவதாக தமிழக ஆளுந் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புலிச்சார்பு நிலைப்பாட்டை எடுத்திருப்பதாலேயே கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திப்பதற்கு பிரதமர் மன்மோகன்சிங் தயங்குகிறாரென்றும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவை மட்டுமே இவர்கள் இதுவரை சந்தித்துப் பேசியிருக்கின்றனர். வைகோ ஊடாகவும் இந்தியப் பிரதமருக்கும் தமிழக முதல்வருக்கும் சந்திப்புக்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதற்கிடையில் இனியும் இந்தியாவில் தங்கியிருப்பதில் அர்த்தமில்லை என்று கருதும் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி., மீள இலங்கைக்குத் திரும்பவேண்டுமென்று வற்புறுத்தி வருவதாகவும் அநேகமாக இந்தக் குழு அடுத்த வாரமளவில் கொழும்பு திரும்பலாமென்றும் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தீவகத்தில் மீன்பிடிக்க அனுமதி

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தீவகப் பகுதிகளில் கடற்றொழில் செய்யத் தடை விதிக்கப்பட்டிருந்த கடற்றொழிலாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சி காரணமாக, கடற்றொழில் செய்ய அனுமதி கிடைத்துள்ளது. ஏற்கனவே அப்பகுதி கடற்றொழிலாளர்கள் வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. பணிமனை ஊடாக அமைச்சரிடம் தமது வேண்டுகோளை விடுத்திருந்தனர். இதனையடுத்து அமைச்சர் மேற்கொண்ட முயற்சி காரணமாக 10.09. 2006 முதல், காலை 8 மணிளிலிருந்து மாலை 3 மணி வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடற்றொழில் செய்யத் தீவக கடற்படைத் தளபதி அனுமதி வழங்கியுள்ளார். இதன் காரணமாக வேலணை துறையூர், செட்டிபுலம், அம்பிகை நகர் கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மீளவும் ஆரம்பித்துள்ளனர். இதேவேளை தீவக மீன்பிடி அனுமதியை அடுத்து அப்பகுதிகளிலிருந்து பெருமளவு மீன்கள் யாழ் சந்தைகளுக்கு வரத்தொடங்கியுள்ளன.

## யுத்தத்தில் தோல்வியுற்ற புலிகள் சரணடைய வேண்டிய நிலை ஏற்படலாம்

### -ஆனந்தசங்கரி, பிரபாகரனுக்குக் கடிதம்

தற்போதைய யுத்தத்தில் தோல்வி கண்டுள்ள புலிகள், மோதலைக் கைவிட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இல்லையேல் புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைய வேண்டிய நிலையேற்படலாமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி, புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய பிந்திய கடிதத்தில் கேட்டுள்ளார்.

தமிழ் மக்கள் இன்று அரச கட்டுப்பாட்டு பகுதியிலும் சரி, உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் சரி, அடிமைகள் போல் வாழ்கின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும்.. நிலைமை கட்டுமீறிச் செல்வதாக நான் முழுவதுமாக நம்புகிறேன். தோல்வியைத் தழுவியுள்ள உங்கள் போராட்டத்திற்காக தமிழ் மக்கள் பெருமளவில் இளைஞர்களையும் யுவதிகளையும் பலி கொடுத்துள்ளனர். மேலும் மேலும் பலி கொடுத்து வருகின்றார்கள். உங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு அரசுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து தீர்வைக் காண உதவுங்கள். அன்றேல் உங்கள் போராளிகளைச் சரணடைய வைக்க வேண்டிய காலம் வந்துவிட்டதாகக் கருதுகிறேன். பொது மன்னிப்பு வழங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுடன் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதான ஓர் தீர்வுத் திட்டத்தைக் காணமுடியும் என எண்ணுகிறேன். இந்தியாவை உள்ளடக்கிய சர்வதேச சமூகம் எமக்கு ஏற்புடையதான ஓர் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கும். உங்களை ஆதரிக்கின்ற இடம்பெயர்ந்த தமிழர்கள் விசுவாசமாக உங்களை ஆதரிக்காது சுயலாபம் கருதியே ஆதரிக்கின்றனர். வடகிழக்கு வாழ் எமது மக்கள் நிறையத் துன்பத்தை அனுபவித்துவிட்டதுமல்லாமல் மிகப் பெரியளவு தியாகங்களையும் செய்துள்ளனர். இனியேனும் அவர்களை அமைதியாகவும் மன நிறைவுடனும் வாழவிடவேண்டும். இடம்பெயர்ந்த முதியவர்கள் தாம் பிறந்த நாட்டுக்குத் திரும்ப வந்து பிறந்த மண்ணில் மரணிக்கவே விரும்புகின்றனர் என்றும் அந்த நீண்ட கடிதத்தின் இறுதியில் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## சமரச முயற்சிகளுக்கு உடனடிச் சாத்தியம் இல்லை

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இருதரப்பு நம்பிக்கையீனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காலாவதியாக்கிவிட்டுள்ள நிலையில் இணைத்தலைமை நாடுகளும், இந்தியாவும் சமரசப் பேச்சுக்கள் மீண்டும் நடைபெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

தற்போது நாட்டில் நடந்து கொண்டிருக்கும் மோதல்களையும், இழப்புக்களையும் அந்தந்த நிலைகளிலேயே விட்டு விட்டு இருதரப்பும் பழைய நிலைகளுக்கு உடனடியாகத் திரும்ப முடியாத நிலையைப் புரிந்து கொண்டும் சமரச முயற்சிக்கு அழைப்பது சர்வதேசத் தலையீட்டின் இயலாத்தன்மையையே வெளிக்காட்டி நிற்கிறது.

அரசு, தன் சர்வதேச உறவுகளை மேலும் நெருக்கமானதாக்கிக் கொண்டிருக்கும் அதே வேளை, தென் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையையும் நிலை நாட்ட பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறது.

இதற்கிடையே எரிபொருள் விலையுயர்வு, தொழிற் சங்கப் போராட்டங்கள், பெருமளவிலான அகதிகளைப் பராமரிக்கும் நெருக்கடி என்பன அரசுக்கு தலையிடியாக மாறியிருக்கின்றன. இவற்றுக்கு மேலதிகமாகப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய பகுதிகளிலிருந்து புலிகளை அப்புறப்படுத்துவது அல்லது அந்தப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதான முயற்சியில் போர் ஒன்றை நடத்துவது என்பதும் அரசுக்குப் பெரும் சவாலாக எழுந்துள்ளது.

புலிகளைப் பொறுத்தவரை சிங்களத் தலைமைகள் எதையும் நம்ப முடியாது என்ற வழமையான நிலைப்பாடும், இன்னொரு போருக்கான தயாரிப்புச் செய்வதாகக் கூறி மக்களை இடம் பெயரச் செய்ய வைத்ததும், அவர்களை இன்னொரு போருக்கான கட்டாயத்தைத் தந்துள்ளது. ஆகவே அவர்கள் எத்தகைய இழப்புக்களுக்கு முகம் கொடுத்தும் தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டிய அல்லது தற்போதைய தாக்குதல்களை நீடிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள்.

ஆனால் புலிகள் எதிர்பார்த்ததை விடவும் தற்போதைய களமுனை புலிகளுக்கு நெருக்கடியையும், இழப்புக்களையும் தருவதாக மாறியிருப்பது அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. களமுனையில் படையினரின் அணுகுமுறை முன்னரைப் போல் அல்லாமல் மிக இறுக்கமானதாக இருப்பது புலிகளின் திட்டங்களைத் தகர்த்துள்ளதாகவே புலிகளின் பின்வாங்கல் தெளிவு படுத்துகின்றது. இந்த நிலையில் ஒரு தளர்வுப் போக்கை ஏற்படுத்துவதற்காக புலிகள் களமுனைக்கு அப்பாற்பட்ட தளத்தில் பரவலான தாக்குதல்களை ஆரம்பிக்க முயற்சிக்கக் கூடும். அநேகமாக அந்தத் தாக்குதல்கள் பொதுமக்களையும் பாதிக்கக்கூடியதாகவே இருக்கும். ஏனெனில் தனியே புலிகளுக்கு மட்டும் இழப்பு அல்லது படையினருக்கு மட்டும் இழப்பு என்பதை பிரசாரமாக மாற்றவோ, அனுதாபத்தைத் திரட்டவோ உதவப் போவதில்லை. அப்பாவிப் பொதுமக்கள் பலியாகின்றபோது அல்லது அவர்கள் அல்லோலகல்லோலப்படுகின்ற போதே சர்வதேசத்தின் பார்வையைத் திருப்ப முடியும். அதைத் தவிர மக்கள் பாதிக்கப்படுகின்றபோதே இதை மக்களின் போராட்டமாக சித்தரிக்க முடியும் என்ற தப்புக் கணக்குப் போடும் தந்திரம் புலிகளுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல என்று கடந்த கால வரலாற்றைக் கூர்ந்து அவதானிக்கும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனுடைய இன்னொரு பகுதிதான், சண்டை நிறுத்தம், பாதை திறப்பு, இழக்கப்பட்ட தமது இடங்கள் திருப்பித் தரப்பட வேண்டும் என்ற கோஷங்களைப் புலிகள் முன்னிலைப்படுத்துவதுமாகும் என்றும் கூறப்படுகிறது. இவை புலிகளுக்கு ஒரு ஓய்வு நிலை தேவைப்படுவதையே உணர்த்துகின்றன.

இவ்வாறானதொரு இரண்டும் கெட்டான் நிலையில் இருதரப்பும் இழுபட்டுக் கொண்டிருக்கையில் இணைத் தலைமை நாடுகளின் அழுத்தம் என்பது எந்தளவில் இருதரப்பையும் சமரச மேசைக்கு காதில் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து அமர்த்தப்போகிறது என்ற கேள்வியும், எதிர்பார்ப்பும் பல தரப்பினர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. சமரச மேசைக்கு இரு தரப்பும் உடனடியாகத் திரும்பும் சாத்தியம் இப்போதைக்கு இல்லை.

■ ■


மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சம நிலையைக் கேள்விக்குட்படுத்திய சம்பூர் மோதல்!

**1997ஆம்** ஆண்டு புலிகள் கைப்பற்றிய சம்பூரை, ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கைப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர். இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவத் தளபதி லெப்டினன்ட் சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து இரண்டொரு தினங்களுக்குள் சம்பூரிலுள்ள புலி நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. புலி நிலைகள் மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசாங்க தரப்பில் முதலில் கூறப்பட்டாலும், 53 வீடுகள் சேதமடைந்தனவென்று வடக்கு - கிழக்கு ஆளுநர் பின்னர் தெரிவித்திருந்தார். இவற்றில் நாற்பதுக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமுற்றன என்றும் அவர் தெரிவித்திருந்தார். அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனரென்றும் தகவல்கள் வெளிவந்தன. ஏப்ரல் மாதத்திலிருந்தே சம்பூர் மக்கள் பாதுகாப்புத் தேடி வேறிடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கி விட்டார்கள். மாவிலாறு மூதூர் என்று புலிகள் தொடுத்த யுத்தமும் அரசாங்கப் படைகளின் பதில் தாக்குதல்களும் சுமார் 45 ஆயிரம் தமிழ் மக்களை திருகோணமலை, மட்டக்களப்புப் போன்ற மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக, அநாதரவாக வாழ நிர்ப்பந்தித்துள்ளது.



சம்பூர் மோதலின் பின் எடுக்கப்பட்ட படம்.

இதேயளவு முஸ்லிம் மக்களும் அவலங்களைச் சுமந்து கொண்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இந்த யுத்தம், மொத்தத்தில் வடக்கு - கிழக்கிலிருந்து இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

மூதூரில் தாக்குதலை ஆரம்பித்ததன் மூலம் கேந்திர முக்கியத்துவமிக்க திருகோணமலைத் துறைமுகத்துக்கு அண்மையாக தமது நிலப்பரப்பை விஸ்தரிப்பதே புலிகள் இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் எறிகணைத் தாக்குதல்களை ஆரம்பித்தன் மூலம், தமது கட்டுப்பாட்டில் இல்லாத யாழ்ப்பாணத்திலிருந்து படையினரை வேறு பகுதிகளுக்குச் செல்ல விடாது அங்கேயே நிலைகொள்ளச் செய்வதே புலிகளின் தந்திரோபாயமாக இருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் தற்காப்பு நிலையில் இருந்து கொண்டே சம்பூரைத் தாக்கிக் கைப்பற்றுவதே படையினரின் நோக்கமாக இருந்தது. ஜூலை இருபதாம் திகதி மாவிலாறு பிரச்சினையை ஏற்படுத்தி, ஆகஸ்ட் முதலாம் திகதி வாக்கில் மூதூர் தாக்குதலை ஆரம்பித்த புலிகள், ஆகஸ்ட் பதினொராம் திகதி முகமாலை, கிளாலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் தாக்குதல்களை ஆரம்பித்து கிழக்கிலிருந்து வடக்குக்கு யுத்தத்தை விஸ்தரித்தனர். ஆனால் அரசாங்கத்தின் நோக்கம் வித்தியாசமாக இருந்தது. சம்பூரில் அவ்வப்போது புலி நிலைகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்திவந்த படையினர், ஆகஸ்ட் 27ஆம் திகதி திருமலை, செல்வநகர் பகுதியிலிருந்து சம்பூரைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

படைத்தரப்பினரைப் பொறுத்தவரை திருகோணமலைத் துறைமுகம் மிகவும் கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதியாகும். திருகோணமலைத் துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள மூதூர் கிழக்கைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது எந்த நேரமும் படையினருக்கு ஆபத்தானதென்று இரண்டாயிரமாம் ஆண்டின் முற்கூற்றில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் ஆசிய, பசுபிக் பிராந்திய இராணுவ கட்டளைப் பணியகம் விடுத்த எச்சரிக்கையொன்றில் தெரிவித்திருந்தது. யாழ்.குடா நாட்டிலுள்ள படையினருக்கு உணவு மற்றும் தேவைகளை அனுப்புவதற்கும் அங்கிருந்து படையினரை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் திருகோணமலைத் துறைமுகம் முக்கிய கடல்போக்குவரத்துப் பாதையாக அமைந்திருப்பதே அதன் கேந்திர முக்கியத்துவத்துக்குக் காரணமாகும். ஏ-9 தரைமார்க்கப் பாதையில் புலிகளின் கட்டுப்பாட்டில் சில பகுதிகள் இருப்பதால், அதற்கூடான போக்குவரத்து, படையினரின் பாதுகாப்புக்கும் பயன்பாட்டுக்கும் கஷ்டமானது என்பது தெரிந்ததே. எனவேதான் யுத்தநிறுத்த காலமென்று கூறிக்கொண்டே புலிகள் ஆரம்பித்த தாக்குதல்கள், பதில் தாக்குதல்களை ஆரம்பித்து மூதூர் கிழக்கின் முக்கிய பகுதியான சம்பூரைக் கைப்பற்றுவதற்கு அரசுக்குச் சாதகமாக அமைந்திருந்தது.

புலிகளுக்கெதிரான சர்வதேச அழுத்தமும், குறிப்பாக விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தும் கிபீர் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு எஸ்.ஏ.18 ஏவுகணைகளை அமெரிக்காவில் கொள்வனவு செய்யப் புலிகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டமையும் படையினரின் கைகளை ஓங்கச் செய்து விட்டன. கிழக்கில் புலிகள் இயக்கத்தின் சக்திமிக்க தளபதியாக விளங்கிய கருணாவின் அணி, பிரபாகரனின் புலிகளுக்கெதிரான பரம வைரியாகத் திகழ்ந்தமையும் புலிகளின் தோல்விக்கு மற்றொரு காரணமாகும். படையினருக்கும் புலிகளுக்குமிடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தருணத்தில் கருணா தரப்பு, புலிகளின் கஞ்சிகுடிச்சாறு புலி முகாம் உட்படக் கிழக்கில் சில புலி நிலைகள் மீது நடத்திய தாக்குதல்களும் பிரபாகரன் தரப்பினரைப் பலமிழக்கச் செய்யும் ஒரு கேந்திர உத்தியாகவே மேற்கொள்ளப்பட்டது. இதனாலேயே திருகோணமலையிலுள்ள தமது கட்டுப்பாட்டு எல்லைகளை விஸ்தரிக்க எடுத்த புலிகளின் முயற்சி படுதோல்வியில் முடிந்தது.

திருகோணமலையில் தமது பிடியைத் தளர விடாமல் பாதுகாப்பதற்குப் புலிகளும், யாழ்ப்பாணத்தில் தமது பிடியை இறுக்கிக் கொள்வதற்காகப் படையினரும் ஒரு கௌரவ யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனரென்று முன்னாள் விமானப்படைத் தளபதியும் இன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலகாவின் தகப்பனாருமான ஹரி குணதிலகா தெரிவித்திருந்தார். முள்ளால் தோண்டியெடுக்க வேண்டியதைக் கோடாரி கொண்டு வெட்டுகிறார்களென்றும் படை நடவடிக்கைகளை அவர் விமர்சித்திருந்தார். பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் இராணுவ ஆய்வாளரான அவரது இந்தக் கருத்து வெறும் அலம்பல் என்பதையே சம்பூர் கைப்பற்றப்பட்டமையும் வடக்கில் ஏ-9 பாதையூடாக ஆனையிறவு நோக்கி இராணுவம் முன்னேற முன்வந்தமையும் எடுத்துக் காட்டுகின்றன. அவரது மற்றொரு புதல்வர், பலாலி விமான தளத்துக்கு மேலாக விமானத்தை ஓட்டிச் செல்கையில் புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்டு மரணமானார். அவருடன் ஐம்பதுக்கு மேற்பட்ட படையினரும் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் சில வேளைகளில் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகாவை யுத்த எதிர்ப்பாளராக மாற்றியிருக்கலாம். "மூக்கிருக்கும் வரைக்கும் சளி இருக்கும்" என்பார்கள். ஆயுதங்களின் மூலந்தான் பிரச்சினையைத் தீர்க்கலாமென்று இரு தரப்புகளுமோ அல்லது ஒரு தரப்போ நினைக்கும் வரை பிரச்சினைகள் தீரப் போவதில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருப்பதாக அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகள் மட்டுமல்ல, யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கூறிக் கொள்கிறது. ஆனால், யுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. மாவிலாறிலும் மூதூரிலும் யாழ்ப்பாணத்திலும் யுத்தத்தை ஆரம்பித்த புலிகள், சம்பூர் பறிபோன பின்னர், யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் அமுலிலிருக்கிறதாவென்று கண்காணிப்புக் குழுவைப் பார்த்துக் கேட்கின்றனர்.

விமானக் குண்டு வீச்சை நிறுத்தாவிட்டால், அதனை யுத்தப் பிரகடனமாக எடுத்துக் கொள்வோமென்று மிரட்டினார் தமிழ்ச்செல்வன். விமானக் குண்டு வீச்சுகளை நடத்திய படைத்தரப்பு சம்பூரைக் கைப்பற்றிய பின்னர், யுத்தநிறுத்தம் அமுலிலுள்ளதா என்று கேட்கிறார் இளந்திரையன். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு தாக்குதல்களை ஆரம்பித்த வர்களே புலிகள்தான்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# ஊரிலிருந்து....



தலைநகரில ஆட் கடத்தல்கள் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கு. உதில ஊடகம் சார்ந்த இரண்டு பேர் மட்டும் விடுவிக்கப்பட்டிருக்கினம். மற்றவையின்ர நிலைமை என்னெண்டு ஒண்டும் தெரியல்லை. கடும் பாதுகாப்பு எண்டினம். ஆனால் பாதுகாப்புக் கூடினாப் பிறகுதான் ஆட்கடத்தலும் கூடியிருக்கு எண்டு தலைநகர் வாழ் தமிழ்ச் சனம் சொல்லினம். உதுபோலை வவுனியாவிலை ஏதோ லிஸ்ட் போட்டு கொள்ளையடிக்குமாப் போல கும்பல் கும்பலா கொள்ளை நடக்குது. உதுகளை யார் செய்யினமெண்டதையும் இன்னும் கண்டு பிடிச்சதாத் தெரியலை. நாட்டு நடப்பு சுத்தமாச் சரியில்லையுங்கோ...

# மூதூர் நிவாரண ஊழியர்கள் படுகொலை; முகமூடிக்குள் யார்?

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இதேபோன்று கெப்பிட்டிக்கொல்லாவ படுகொலைகள் பற்றிக் காரசாரமாக எழுதும் சிங்கள ஊடகங்கள், நிவாரண ஊழியர்களைப் புலிகள்தான் கொலை செய்தார்கள் என்று ஆதாரமின்றிக் குற்றம் சாட்டுவது ஏன்? புலிகள் ஒன்றும் அப்பாவித் தமிழர்களைக் கொல்லாத புனிதமான இயக்கமல்ல. சிலவேளைகளில் நிவாரண ஊழியர்களைக் கொன்றுவிட்டு, பழியைப் படையினர் மீது போடுவதன் மூலம் சர்வதேச அனுதாபத்தையும், ஆதரவையும் திரட்டுவதற்காகக்கூட புலிகள் இதைச் செய்திருக்கலாம் என்ற கருத்தை நாம் மறுதலிக்க முடியாது. எப்படியிருந்தாலும் உல்ப் ஹென்றிக்சனின் நடுநிலைப் பாணியென்று கூறப்படும் கருத்தை 'எங்கம்மா அம்மா, உங்கம்மா சும்மா' என்ற பாணியிலேயே பெரும்பாலான ஊடகங்கள் விமர்சித்திருக்கின்றன.

அல்லைப்பிட்டிப் படுகொலைகள், வங்காலை தோமஸ்புரிப் படுகொலைகள், புதுக்குடியிருப்பு புலி முகாம் தாக்குதல்கள் உட்பட ஏனைய படுகொலைகள் யாவும் யுத்தத்தோடு சம்பந்தப்படாத, அப்பாவிகளைப் பலியெடுத்த தாக்குதல்களாகும். யுத்த காலத்தில் உண்மைகளைக் கொல்வதில் முன்னிலை வகிப்பவை ஊடகங்கள்தான். அதேபோன்று பொய்களை உயிர்ப்பிப்பதும் அவைதான். புதுக்குடியிருப்பு விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் காயப்பட்ட மாணவிகள் ஒன்றும் ஆதரவற்ற அநாதைகள் அல்லர். சுமார் 20,30 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டிருந்த அப்பாவி மாணவிகளே யுத்தப் பயிற்சிக்கெனப் புலிகளால் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். இந்த உண்மையை கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்றுவரும் காயப்பட்ட மாணவிகள் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள். இருந்தும் கூட, இதுபற்றிய உண்மைகளை வெளியிடுவதற்கு தமிழ் ஊடகங்கள் தயங்குவது ஏன்?

மூதூர் நிவாரண ஊழியர்களைக் கொன்றவர்கள் யார்? புலிகளா? படையினரா? புலிகள் அல்லது படையினரைத் தவிர வேறு எவரும் இந்த மிலேச்சத்தமான படுகொலைகளைப் புரிந்திருக்க முடியாது. நிவாரண ஊழியர்களைக் கொன்றவர்கள் படையினர் தான் என்று பல்வேறு தரப்புகளிடமிருந்தும் குற்றங்கள் சாட்டப்படுகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் ஆகஸ்ட் நான்காம் திகதி மூதூர் இருந்திருக்கிறது. ஐந்தாம் திகதி தான் இராணுவம் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. எட்டாம் திகதி வரை இந்தச் சடலங்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படவில்லை. அழுகி, நாற்றம் எடுத்து, புழுக்கள் மொய்த்த நிலையில் இச்சடலங்கள் கடல் மார்க்கமாக திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. கொலை செய்தவர்கள் புலிகள் தான் அல்லது படையினர் தான் என்ற சந்தேகம் எழுவது நியாயமானது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலங்களை ஊடகவியலாளர்கள் பார்க்க விடாமல் தடுத்தது ஏன்? ஊடக புகைப் படப் பிடிப்பாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

யுத்த காலத்தில் எடுத்த எடுப்பிலேயே சடலங்களை அப்புறப் படுத்த முடியாது என்பது சகட்டுமேனிக்குக் கூறப்படும் நியாயங்களாக இருக்கலாம். ஆனால், இவை ஏற்றுக்கொள்ளப்படமுடியாத அநியாயங்கள் என்பதே உண்மையாகும். செஞ்சிலுவைச் சங்கத் தலையீட்டையடுத்தே சடலங்கள் பெற்றோர்களிடமும், உறவினர்களிடமும் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்கள் புலிகள் என்று ஏற்றுக்கொண்டு ஆவணத்தில் கைச்சாத்திட்டால் மட்டுமே, சடலங்களைத் தருவோம் என்று பொலிஸாரும், படையினரும் மிரட்டினார்கள் என்று தமிழ் ஊடகங்கள் கூறுகின்றன. தமிழ் ஊடகங்களின் இந்தக் குற்றச்சாட்டு உண்மையா? பொய்யா? என்பது கண்டறியப்படவேண்டும். இக்குற்றச்சாட்டுகள் உண்மையென்றால், அது மிக மோசமான மனித உரிமை மீறலாகும். முழுத் தமிழர்களையுமே புலிகளாக நினைக்கும் முட்டாள்களின் நடவடிக்கையாகும். இடம்பெற்றிருப்பது மிலேச்சத்தனமான படுபயங்கரமான படுகொலைகள். உள்ளூர் நிறுவனங்களிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை வரை குற்றச்சாட்டுகளும், கண்டனங்களும் எழுப்பப்பட்டிருக்கின்றன. பிரதானமாக சுட்டு விரல்கள் அரச படையினரை நோக்கியே நீட்டப்பட்டிருக்கின்றன. "பாதி பாதியாக இரு கதவுகளைக் கொண்ட ஒரு நுழைவாயிலில், ஒரு கதவைத் திறந்தால் மறு கதவு மூடியிருக்கும், அப்படியென்றால் இரண்டு கதவுகளையும் திறந்தால், இரண்டு கதவுகளுமே மூடியிருக்கும்" என்று முட்டாள்தனமான நியாயங்கள் கூறுவதை அரசாங்கம் விடுத்து, உண்மையை உலகுக்கு வெளிக்கொணர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்களைப் புலிகளின் பக்கம் உந்தித் தள்ளவே உதவுமென்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எப்படி ஆதாரங்கள் இன்றி உல்ப் ஹென்றிக்சன் குற்றம் சாட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாதோ, அப்படித்தான் ஆதாரங்கள் இன்றி அரசு கூறுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. பெரும்பாலான தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதின் மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இனப்பிரச்சினை கிளப்பிய யுத்தம், அப்பாவித் தமிழ் மக்களைப் பலியெடுக்கக் கூடாது என்பதே எங்கள் வேண்டுகோள்.

## கண் இழந்த 'கண்'காணிப்பாளர்

மூதூரில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் "அக்ஷன் பாய்ம்" தொண்டர் நிறுவன ஊழியர்களின் படுகொலைகள் பற்றி விசாரிப்பதற்குக் கண்காணிப்புக் குழு அனுமதிக்கப்படவில்லையென்று உல்ப் ஹென்றிக்சன் குற்றஞ்சாட்டியுள்ளார். யுத்த வேளையில் பாதுகாப்பு நிமித்தம் கண்காணிப்புக் குழுவைச் சம்பவ இடத்துக்குச் செல்ல அனுமதிக்காதமை சரியானதே. யுத்தத்தைக் கண்காணிக்கவல்ல, யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கவே இங்கு வந்துள்ளோமென்று கூறிய ஹென்றிக்சன், "விழுந்த பாட்டுக்கு மாட்டுக்குக் குறி சுடும்" தன் பாணியிலேயே குற்றஞ்சாட்டியுள்ளார். மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் மனிதாபிமானமற்ற முறையில் மூடியபோது, திறந்துவிடுமாறு கண்காணிப்புக் குழு உட்பட மனித நேயமிக்க அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளைப் புலிகள் சட்டை செய்யவில்லை. ஆனால் அரசாங்கப் படைகள் தாக்குதல் நடாத்திக் கொண்டே அணைக்கட்டுப் பகுதியை நெருங்கிய போது, பாதுகாப்பமைச்சின் அனுமதியைக் கூடப் பெறாமல் எங்கிருந்தோ அங்கு ஓடிச்சென்ற ஹென்றிக்சன், தன் மீது படையினர் வேட்டுக்களைத் தீர்த்ததாகக் குற்றஞ்சாட்டினார். படையினர் மாவிலாறை நெருங்கியதும் திடீரெனக் குபீரென புலிகளுக்கு மனிதாபிமானம் அணையை உடைத்துக் கொண்டு பாய்ந்தமை வேடிக்கையான விடயம்தான். புலிகளின் வன்செயல்களும், படுகொலைகளும் முற்றுப்புள்ளியின்றித் தொடர்ந்ததாலேயே, எச்சரிக்கை செய்த பின்னரே ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடையை விதித்தது. புலிகள் மீது தடை விதிக்கப்பட்டமை தவறான விடயம் என்று கூறிய ஹென்றிக்சன், புலிகளின் படுகொலை நடவடிக்கைகள் சரியென்றா சொல்லப் போகிறார். கபோதிகளைக் கண்காணிக்கக் கூட்டிவந்தால், யானையைத் தடவிப் பார்த்த குருடனின் பாணியில்தான் பதில் சொல்வார்கள்.

# புலிகள் வகுக்கும் புதிய போர் வியூகங்கள்!

**சம்பூர்** ஊடான புலிகளின் கிழக்கு மாகாணத்துக்கான பிரதான விநியோக மார்க்கம் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பெரும் எடுப்பிலான வலிந்த தாக்குதல் ஒன்றை தற்போதைக்கு எதிர்பார்க்கத் தேவையில்லை.

அப்படித்தான் எதிர்பாராத விதமாக கிழக்கு மாகாணத்தில் புலிகள் தாக்குதலைத் தொடுத்தாலும் அது இடங்களைக் கைப்பற்றும் விதமான தாக்குதல்களாக பெரும்பாலும் இருக்காது. இதே நிலைதான் இப்போது வட போர் முனையிலும் தோன்றிவருகிறது. ஆகஸ்ட் பதினோராம் திகதி யாழ்ப்பாணத்தை நோக்கிய புலிகளின் வலிந்த தாக்குதல் புலிகளுக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கான புலிகளின் விநியோகப் பாதையான பூநகரி, தாளையடி, பளைப் பெரும்பகுதிகளை நோக்கிப் படையினரும் மேற்கொண்ட தாக்குதல்கள் என்பன புலிகளின் நிலைகளைச் சீர்குலைத்துள்ளன.

எறிகணைத் தாக்குதல் அல்லது ஊடுருவித் தாக்குதல் என்பன புதிய இடங்களைக் கைப்பற்றும் தாக்குதல்களாக அமையப் போவதில்லை. அது வெறுமெனவே படையினரை நாலா திசைக்கும் பிரிக்கின்ற நடவடிக்கையாகவும், படையினரின் கவனத்தைத் திருப்புகின்ற நடவடிக்கையாகவுமே இருந்தது.

நிலப்பரப்பில் இவ்வகையான தாக்குதல் தேவை இருந்து கொண்டிருக்கும் அதேவேளை, செப்டெம்பர் முதலாம் திகதி புலிகளின் இன்னொரு பலம் பொருந்திய படைப் பிரிவாகக் கருதப்படும் கடற் புலிகளும், கடற் கரும்புலிகளும் சுமார் 75 படகுகளில் கடல் மார்க்கமாகத் தரையிறங்கும் திட்டத்தோடு யாழ்ப்பாணத்தை நோக்கி வந்தனர். புலிகளின் இந்த முயற்சியும், பருத்தித்துறைக் கடற் பிரதேசத்தில் படையினரால் முறியடிக்கப்பட்டது. அதில் 50க்கு மேற்பட்ட கரும்புலிகளும் படகுகளும் அடித்து கடலில் மூழ்கடிக்கப்பட்டதோடு, எஞ்சிய புலிகள் ஓடித்தப்பினார்கள். இதில் படையினரின் இரண்டு டோராப் படகுகளும், ஒரு விநியோகப் படகும் சேதமடைந்தன.

புலிகளின் இவ்வாறான இரண்டு படை நகர்வும் முறியடிக்கப்பட்டுள்ள நிலையில் செப்டெம்பர் எட்டாம் திகதி முகமாலையில் உள்ள படையினரின் முன்னரங்கக் காவல் நிலைகள் மீது புலிகள் மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் படையினர் 11 பேர் அதே இடத்தில் பலியானதோடு 19 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து படையினரும் தமது பதில் தாக்குதலை மிகவும் மூர்க்கத்தனமாக ஆரம்பித்தனர்.



வடமராட்சி வரணி வீதி

முகமாலைப் பகுதியில் ஆரம்பித்த இந்தத் தாக்குதலில் புலிகள் ஆர்ட்டிலெறி, ஆர்.பி.ஜீ.சிறிய ரக மோட்டார், எம்.80, எல்.எம்.ஜீ. போன்ற ஆயுதங்களைக் கொண்டு கடும் தாக்குதலை நடத்தினர். அதேபோல் படைத்தரப்பு ஆர்ட்டிலெறி, மல்டி பெரல் ஆகிய கனரக ஆயுதங்களுடன் கிபிர் விமானத் தாக்குதலையும் நடத்தியது.

இந்தப் படை நடவடிக்கைகளின் போது புலிகள் பூநகரி, கல்முனை, கௌதாரிமுனை போன்ற பகுதிகளிலிருந்தும் பளையிலிருந்தும் நடத்திய செஷல் தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளான பாஷையூர், குருநகர் பகுதிகளில் வீழ்ந்துள்ளன. இதனால் அப்பகுதிகளிலிருந்து மீண்டும் இரண்டாவது தடவையாக மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

படையினர், வரணி, பலாலி, நாகர்கோவில், மிருசுவில், கொடிகாமம் பகுதிகளிலிருந்து ஆர்ட்டிலெறி தாக்குதல்களையும், மல்டி பெரல் தாக்குதல்களையும் மேற்கொள்ளும் அதேவேளை, கடற்படையினர், கிளாலி கடல் நீரேரியையும், சங்குப்பிட்டிப் பகுதிகளையும் அண்டிய வகையில் கடலிலிருந்து தாக்குதலை நடத்துகின்றனர். இவற்றுக்கு மேலதிகமாக கிபிர் விமானங்கள் பளையைக் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

படையினரின் பெருந் தாக்குதல்களை எதிர்கொள்ளும் விதமாக புலிகளின் பிரதான ஆர்ட்டிலெறித் தளங்களான குஞ்சிப்பரந்தன், முரசுமோட்டை, ஆறாம் வாய்க்கால், கரடிப்போக்கு ஆகிய தளங்களிலிருந்து புலிகள் ஆர்ட்டிலெறித் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இரு தரப்பும் நடத்தும் கடும் தாக்குதல்களில் படைத்தரப்பில் இதுவரை 34 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 149 பேர் காயமடைந்துள்ளனர் என்று படைத்தரப்புக் கூறுகிறது. புலிகளின் தரப்பில் 79 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 139 பேர் வரை காயமடைந்திருப்பதாகப் புலிகளின் தகவல் பரிமாற்றங்களிலிருந்து அறியமுடிகிறது. இதற்கிடையே படையினர் புலிகளின் 11 சடலங்களை மீட்டுள்ளனர். எனினும் இறப்பு வீதமும், காயப்பட்டவர்களின் எண்ணிக்கையும் இருதரப்பிலும், இதை எழுதிக் கொண்டிருக்கும் போது இன்னொரு மடங்கு அதிகரித்து இருக்கவும் கூடும். இரு தரப்புமே தத்தமது இழப்புக்கள் குறித்து உண்மையான விபரங்களை வெளியிடவில்லை. இதுவரை ஊடகங்களுக்குத் தொடர்புகொண்டு புலிகள் தமக்கு வசதியான எண்ணிக்கைகளைக் கூறிவந்த போதும் தற்போதைய வட போர் முனையில் தமது இழப்புக்கள், பின்னடைவுகள் குறித்துப் பேசுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

**புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக இது நாள் வரை இருந்த முகமாலையின் ஒரு பகுதியும், இத்தாவில், கச்சார்வெளி, அல்லிப்பளை போன்ற பகுதிகளும் தற்போதைக்குப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன**

இதற்கிடையே படையினர் தமது முகமாலை முன்னரங்கக் காவல் நிலையிலிருந்து சுமார் ஒன்றே முக்கால் அல்லது இரண்டு கிலோ மீற்றர் தூரத்தை புலிகளின் பகுதிகளுக்குள் நுழைந்து கைப்பற்றியுள்ளனர். இதன்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக இது நாள் வரை இருந்த முகமாலையின் ஒரு பகுதியும், இத்தாவில், கச்சார்வெளி, அல்லிப்பளை போன்ற பகுதிகளும் தற்போதைக்குப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனினும் இந்தப் பகுதிகளில் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி வருவதால் அவர்களின் தாக்குதல்களை முறியடிக்கும் நோக்கில் படையினரும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ள நிலையில் அடுத்தடுத்து புலிகளின் பகுதிகளான, புலோப்பளை, பளை டவுன், புதுக்காடு சந்தி, சோரன்பற்று, தர்மக்கேணி இயக்கச்சி ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் மேலும் முன் நகரக் கூடிய வாய்ப்புகள் நிறைவே உண்டு. இயக்கச்சி வரை தாக்குதல்கள் நீடிக்குமாக இருந்தால் படையினரின் இலக்கு ஆனையிறவுத் தளமாக இருக்கும்.

முகமாலையிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் ஆனையிறவை படையினர் கைப்பற்றுவது என்பது எளிதானதாக இருக்காது. புலிகளின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கும் என்பதை இதுவரையான தாக்குதல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன. படையினர் ஆனையிறவைக் கைப்பற்றுவது புலிகளின் இருப்புக்கே நாசத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை என்பதால் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளவுமாக வாழ்வா, சாவா என்ற போரை நடத்த வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய போர்முனையில் பெண்களும், சிறுவர்களுமே புலிகளின் தரப்புப் போராளிகளாக அதிகமாகப் பலியாகியுள்ளனர். வன்னியிலிருந்து வரும் செய்திகளின் படி, புலிகள் தமது ஒட்டு மொத்த பலத்தையும் பிரயோகித்து தாக்குதல்களைத் திட்டமிடுகின்றனர். இதில் புலிகளின் லெப். சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, இம்ரான் பாண்டியன் படையணி, மேஜர் சோதியா படையணி, இரண்டாம் லெப்டினட், மாலதி படையணி என்பன ஈடுபட்டுள்ளன. இவற்றில் இந்த இரண்டு மகளிர் பிரிவிலும் கடும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. தவிரவும் லெப். கேணல் குட்டி சிறி படையணி, லெப். கேணல் விக்டர் படையணி ஆகிய படையணிகள் நேரடியாக சமராடி வருகின்றன.

இவர்களுக்குத் துணையாகவும், காயப்பட்டவர்களையும், கொல்லப்பட்டவர்களையும் அப்புறப்படுத்தும் பணிகளிலும் பொதுவான புலிகள் உறுப்பினர்களும், தமிழீழ தேசியத் துணைப் படை என்ற அரைகுறை பயிற்சி பெற்றவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஜெயந்தன் படையணிகள், கருணா அம்மானின் பிரிவுக்குப் பின்னர் மனமுடைந்த நிலையில், புதிய தளங்கள் கைப்பற்றப்பட்டால் அதைத் தக்க வைத்துக் கொள்ளும் திட்டத்தோடு நிறுத்தப்பட்டுள்ளன. கடற்புலிகளைப் பொறுத்தவரை கரையோரப் பகுதிகளைத் தாக்குவதும், படையினரின் கடல்மார்க்கப் பயணங்களை முடியுமான வரை தாக்கியழிப்பதும் அவர்களின் பிரதான பணியாக வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கடற் கரும்புலிகளைத் தவிர, தாக்குதல் கரும்புலிகளுக்குப் போர் முனையில் பணிகள் எதுவும் தற்போதைக்கு இல்லையெனினும் சுமார் 300 பேரில் தற்போதைய வட போர் முனையில் 50 கரும்புலிகள் பலியாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கள முனையில் புலிகளின் தளபதிகள் யாரும் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை என்பதாலேயே கூடுதல் ஆளணி இழப்பும், இடங்கள் இழப்பும் ஏற்பட்டதாகவும் சில செய்திகள் கூறுகின்றன.

புலிகளைப் பொறுத்தவரை கடற்புலிகளின் தாக்குதல்களையே தற்போதைக்கு நம்புவதாகத் தகவல்கள் கூறுகின்றன. குறிப்பாக, காங்கேசன்துறை, பருத்தித்துறை,

அலசுவது

**- மதியூகி -**

வடமராட்சி, புங்குடுதீவு, கிளாலி ஆகிய பகுதிகளில் தரையிறங்குவது, சிறிய தாக்குதல்களை நடத்துவது ஊடாகப் படையினரைப் போர் முனையிலிருந்து திசை திருப்புவதே பிரதான நோக்கமாக இருக்கிறது. ஆனால் படைத்தரப்பும் அவ்வாறான தாக்குதல்களை எதிர்கொள்ளும் தயாரிப்புகளைச் செய்திருப்பதாகப் படைத்தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

தற்போதைய போர்முனையில் ஓய்வு நிலையை உருவாக்கி, தம்மை மீளவும் தயார் படுத்திக்கொள்ள புலிகள் எடுக்கும் முயற்சிகள் தோற்கடிக்கப்படுவதோடு, தொடர்ச்சியான தாக்குதல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களே உள்ளன. இது ஆனையிறவு வரை நீடிக்கும் என்றே வடபோர் முனையின் நகர்வுகள் புலப்படுத்துகின்றன.

## அதிரடி அய்யாத்துரை



"**குதிரைக்கு** முன்னால கரட் கிழங்கைக் கட்டி விட்ட மாதிரி", பண உதவி செய்வம்; நாங்க தான் இணைத்தலைமை நாடுகள் எண்டு சொல்லிக் கொண்டு காலத்துக்குக் காலம் கூட்டம் போடுறதும், ரெண்டு தரப்பும் பேச்சு மேசைக்கு வரவேணும், இல்லாட்டில் பணம் தர மாட்டம் எண்டு அறிக்கை விடுறதுமாகப் போக்குக் காட்டிச்சினம்.

அவையின்ர உந்தச் சொறியல் போக்குக்கெல்லாம் எங்கட நாட்டு பூமி மசியாதெண்டது அவைக்குத் தெரியல்லை. உது ரிச்டர் அளவில பெரிய அதிர்விலதான் இருக்குது. சும்மா இருந்தா அடிப்பன் எண்ட நிலைமை மாறி, பிறகு அடிச்சால் அடிப்பன் எண்டதுக்குத் தாவி, கடைசியா, துரத்தித் துரத்தி அடிப்பன் எண்ட அளவில நிலைமை மோசமாயிட்டுது. அவை என்னடாவெண்டால் ஏதோ கோபப்பட்டுச் சொல்லுமாப்போலை மீண்டும் பழைய பல்லவியை ரீ மிக்ஸ் பண்ணிப் பாடியிருக்கினம். சுனாமியையே சந்திச்ச இந்த பூமி உந்த அலை அடிப்புக்கெல்லாம் மசியாது தெரியுமோ...இங்க நிலைமை கட்டுக்குள்ள வரவேணுமெண்டால் தடியோடை ஆள் வரவேணும். அதில்லாமல் அறிக்கை விடுறது வேலைக்கு ஆகாதுங்கோ...வ்...

"**உலமை** உலரைக் கெடுத்தானாம்; உளர் வாயன் வீட்டைக் கெடுத்தானாம்" எண்டுவினம். அதுபோலை இங்க ஒருவர் வாயைக் குடுத்து வாங்கிக் கட்டிப் போட்டிருக்கிறாருங்கோ.

அயல் நாட்டுத் தூதரக அம்மணியைப் பற்றித் தாறுமாறா இவர் கதைச்ச கதையாலை அதிகாரத்தில இருக்கிறவர் ரொம்பவும் குழம்பிப் போயிட்டாராம். அக்காச்சி தள்ளியிருந்து தலையிடியைத் தாராவெண்டால், தம்பியார் கூட இருந்து கொண்டே உப்பிடி அயல் நாட்டு வில்லங்கத்தைத் தேடித் தாராரே எண்டு அதிகாரமானவர் கோபமாயிட்டாராம். கிடைச்ச அமைச்சுப் பொறுப்பை வச்சுக் கொண்டு அமத்தி வாசிச்சு பொழைப்பைப் பார்க்க முடியாமல் வம்பையுமெல்லோ வாசிக்கிறார். உவரை கூடவே வச்சிருக்கிறது பூனையைப் பிடிச்சு மடியில கட்டிக்கொண்டிருக்கிற மாதிரியெல்லோ இருக்கு எண்டு சக அமைச்சர்கள் பீல் பண்ணுகினமாம். ம்...என்ன செய்யுறது, தம்பியாருக்குத் தெரிஞ்ச இராஜதந்திரம் அவ்வளவுதானாக்கும் எண்டு அதிகாரமானவர் பொறுத்துக் கொண்டாராம்.

**யாழ்ப்பாணத்தில** சனம் பட்டினியாலை சாகப் போகுதுகள் எண்டும், நிவாரண சாமான்களை அனுப்புங்கோ எண்டும் ஆளாளுக்கு சொல்லிச்சினம். ரெண்டெழுத்தார் ஆயரின்ர வேண்டுகோளையும் நிராகரிச்சுப் போட்டு மிரட்டிக் கொண்டிருந்திச்சினம். உதுகள் நடந்து கொண்டிருக்கேக்கேயே வீணைக் கட்சியின்ர தலைவர் தேவமானவர் நேராப்போய் சாமான்களை ஏற்றிப் போட்டு, அண்டை நாட்டோடை ஒரு டீலைப் போட்டு, இங்க ஆளுந்தரப்பையும் கன்வஸ் பண்ணி, கப்பலை சாமான்களோடை சர்வதேசக் கடலுக்கு அனுப்பி, பிறகு கே.கே.எஸ்ஸுக்கு நேராக யாழ்ப்பாணத்துக்கு வரப்பண்ணி சாமான்களை இறக்கிப் போட்டார். உந்த விஷயத்தை பரபரப்பாகச் சொன்னால் அது வீணைக் கட்சிக்கு புகழையும், விளம்பரத்தையும் கூட்டிப்போடும் எண்டு யாழ் ஊடகங்களும், கொழும்பு ஊடகங்கள் சிலவும் மேலோட்டமாக சாமான் யாழுக்கு வந்து சேர்ந்திட்டுது எண்ட கணக்காச் சொல்லி முடிச்சிக் கொண்டினம். ரெண்டெழுத்தாரின்ர கண்ணிலையே விரலை விட்டு ஆட்டிப் போட்டு கப்பலை யாழ்ப்பாணத்தில கரை தட்ட வச்ச தேவமானவர் எந்தப் பரபரப்பும் இல்லாமல் இருக்காருங்கோ.

ஒரு எம்.பி.யாலை இவ்வளவு எண்டால் எட்டும் கிடைச்சிருந்தால் எப்புடி இருந்திருக்கும் எண்டு யோசிக்கேக்க, தேவமானவர் சொல்லிற மாம்பழக் கணக்குக் கதைதானுங்கோ ஞாபகத்துக்கு வருகுது...

**உள்நாட்டிலதான்** உந்த மானக்கேடு எண்டால் அயல் நாட்டிலையும் போய் எங்கட கூத்தமைப்புக்காரர் மரியாதை கெட்டு நிக்கினமே எண்டு எங்கட சனம் சொல்லினமுங்கோ. கலைஞரும், பிரதமரும் உவையளைச் சந்திக்க டேட்டுக்கு மேல டேட் குடுத்துக் கொண்டிருக்கினம்.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு" எண்டுவினம். அவைக்கு இவையைச் சந்திக்கிறதில சங்கடங்கள் இல்லையெண்டால் இந்நேரம் சந்திச்சிருக்க மாட்டினமோ. அவையும் அவாய்ட் பண்ணப் பார்க்கினம் எண்டதைப் புரிஞ்சி கொள்ளாமல், சரவண பவானில வாழையிலைச் சாப்பாடு, முனியாண்டி விலாசில காடை கௌதாரி கறிச் சாப்பாடு எண்டு கூத்தமைப்புக்காரர் திரியினம். இப்பவே முகமாலையில ரெண்டெழுத்தாரின்ர எல்லையுமில்லாத, சூனியப் பிரதேசமுமில்லாத நிலைமையாகிட்டுது. இவை பிரதமரையும், கலைஞரையும் சந்திச்சுப் போட்டு நாடு திரும்பேக்க என்னென்ன இழக்கப்படப் போகுதோ...சம்பந்தமானவருக்கு சரவண பவான் சாப்பாடு நல்லா ருசிபட்டிட்டுதாமுங்கோவ்...

**பயங்கரவாதத்தை** இல்லாதொழிக்க இலங்கையில இருக்கிற பிரதான கட்சிகள் இரண்டும் இணைஞ்சு வேலை செய்ய வேணும் எண்டு சர்வதேச சமூகம் அழுத்தமாக சொல்லியிருக்கிற பின்னணியில அதிகாரமானவரும், எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்காலம் பற்றிப் பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாயம் தென் இலங்கை பொலிடிக்ஸ் மட்டத்தில ஏற்பட்டிருக்கு. அதற்கான முயற்சிகளும் அண்ட கிரவுண்டில மும்முரமாக நடக்குது. உதுக்கு சப்போர்ட்டாக சில முக்கியமான தூதுவர்களும் ஓடித்திரியினமாம் எண்டு கதையள் கசியுதுங்கோ...

பெரும்பாலும் மாற்றங்கள் நடக்கலாம் எண்டு சில பேர் ஆருடம் சொல்லினம். உதில ரெண்டெழுத்தார் தங்கட பிடியை எப்பவோ விட்டுப் போட்டினம். இனியாகிலும் சாதகமான பிடியைப் பிடிப்பது பற்றி யோசிச்சால் பரவாயில்லை எண்டும் விஷயம் தெரிஞ்ச பட்சிகள் சொல்லுதுங்கோ...

**கூத்தமைப்பு** எம்.பி. சுரேஷானவர் கொஞ்ச நாளா சத்தமில்லாம அடக்கி வாசிச்சுக் கொண்டு திரியிறாருங்கோ. ஆள் ஜோசப்பனார் சுடுபட்ட மூட்டமே பொக்கற்றில டிப்ளோமட்டிக் பாஸ்போட்டை வச்சுக்கொண்டு தலைநகரில சுழன்று கொண்டு திரிஞ்சவர். இப்ப நாட்டு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருவதாலை தாய்க்குலமும் தங்களோடை வரும்படி ஒருகம்பள் பண்ணிக் கொண்டிருக்கினமாம். இவருக்கும் குடும்பத்தோடை போய் செட்டில் ஆகலாமெண்டு ஒரு யோசனையோடை கருத்துச் சொல்லிறதையெல்லாம் குறைச்சுக் கொண்டு தன்ர கழுத்துக்குக் கத்தி வராமல் பார்த்துக்கொள்ள வேணுமெண்டு திரியிறாராம். அவரின்ர பயமெல்லாம், கூட இருக்கிற கூத்தமைப்புக்காரர் ரெண்டெழுத்தாரிட்டை போட்டுக் குடுத்துடுவினமோ எண்ட ரென்ஸன் தானாம்.

# தேநீர்க் கோப்பை

**தே**யிலையைப் பற்றி எழுதத்தான் முதலில் யோசித்தேன். ஆனால் அதற்கு முன்னர் தேநீர்க் கோப்பையைப் பற்றி எழுத வேண்டிதாக இருக்கிறது. சாதிய அமைப்புக்கும் தேநீர்க் கோப்பைக்கும் நீண்ட, நெடிய வரலாறே உள்ளது. இதற்கு முன்னர் நாய்க்குட்டி பற்றி எழுதுகின்றபோது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டேன். நாய்க்குத் தண்ணீரைச் சிரட்டையில் வைத்தால் அம்மா திட்டுவார் என்று. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. சிரட்டையில் தண்ணீர் வைத்து நமக்கும் நாய்க்குமான நட்பை இழிவுபடுத்திவிடக் கூடாது என்பதும், சிரட்டையில்




தண்ணீர் வைத்தால் நாய்க்கு காது வீங்கும் என்ற ஒரு நம்பிக்கையும் தான் காரணமாக இருந்தது. நாய்க்கே சிரட்டையில் தண்ணீர் வைக்கக்கூடாது என்று சொல்லும் நாம், மனிதனுக்கு மனிதன் சிரட்டையில் தண்ணீர் கொடுக்கின்ற, தேநீர் பறிமாறுகின்ற மனித சமூகத்துள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த வெட்கித் தலை குனிய வைக்கும் சாதிய கௌரவங்கள், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தான் கோலோச்சியிருந்தது. தம்மை உயர்ந்த சாதியினர் என்று கூறிக் கொள்வோர், குறைந்த சாதி எனக் கொள்ளப்படுவோருக்குத் தண்ணீர், தேநீர் கொடுப்பதற்குச் சிரட்டைகளைப் பயன்படுத்தினர். பின்னர் பால் பேணிகளைப் பாவித்துள்ளனர். பால் பேணிகளைத் தேநீர் குடித்து விட்டு வைப்பதற்கு வேலியில் ஒரு தடியையும் தெரிவு செய்து வைத்திருப்பார்கள்.

அவ்வாறு ஒருவரின் வீட்டு வேலியில் பால் பேணி தொங்க விடப்பட்டிருப்பதை அவர் கௌரவமாக நினைத்துக் கொண்டாலும், மற்றவருக்கு அந்த வீட்டின் கௌரவம் ஒரு பால்ப் பேணியாக வேலியில் தொங்கிக் கொண்டிருப்பதாகவே தெரியும். பின்னர் பால்பேணி மெல்ல நாகரீகமடைந்து அலுமினிய தேநீர் கோப்பையாக அதை "லோட்டா" என்றும் சொல்வார்கள். அது வளர்ச்சிக் கண்டு சில்வர் தேநீர் கோப்பையாக மாற்றம் கண்டு தற்போது அநேகமான வீடுகளில் மனிதம் காத்து நிற்கின்றது. இருந்தும் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் இன்னும் பேணிக் கலாசாரம் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. அது நம்து சாபம், இருந்து விட்டுப் போகட்டும்.

தேநீர்க் கடைகளுக்குப் போனால் அங்கு பாவிக்கப்படும் தேநீர்க் கோப்பைகளைப் பற்றிய அருவருப்பு நம்மில் பலருக்கு உண்டு. சுத்தமாகக் கழுவினார்களோ, இல்லையோ அல்லது எந்த நோய்க்காரன் வாய் வைத்துக் குடித்தானோ என்றெல்லாம் மனசு கிடந்து அடித்துக் கொள்ளும். சிலர் இருக்கிறார்கள் தேநீர்க் கோப்பையை தூக்கிக் குடிப்பது போல் வாய்க்கு அருகில் கொண்டு




சென்று மெதுவாக மணந்து பார்ப்பார்கள். வெடுக்கு அல்லது துர்நாற்றம் வீசுகிறதோ என்று பார்ப்பார்கள். இந்தப் பழக்கம் எனக்கும் இருந்தது. இதையே போகிற இடங்களிலெல்லாம் ஒரு பழக்கமாகக் கொண்டிருக்க முடியாது என்பதால் நான் தேநீர்க் குடிப்பதையே நிறுத்தி விட்டேன். 1993ஆம் ஆண்டு நான் தேநீர் குடிப்பதை நிறுத்திக் கொண்டேன். இப்போது யாருடைய வீட்டுக்குப் போனாலும் என்ன குடிக்கிறீர்கள் என்று கேட்டாலோ அவர்கள் பரபரப்புக் காட்டினாலோ நான் முந்திக் கொண்டு செல்வேன். "மன்னிக்கவேணும் நான் ஒன்றும் குடிக்கமாட்டேன், முடிந்தால் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்" என்று சொல்லி விடுவேன்.

சிலருக்கு ஏதாவது மனதில் தைத்து விடும். உடனே கேட்பார்கள் "ஏன் எங்கள் வீட்டில் ஒன்றும் குடிக்க மாட்டீர்களோ" என்று திருப்பி ஒரு உரிமையோடு கேட்பார்கள். அவர்கள் மீது எனக்கு அன்பு கூடும். சிலர் "ஆ...அப்படியா நல்லதாப்போச்சு" என்று தண்ணீர் தருவார்கள். இவர்கள் இருவரையும் தவிர நெருக்கமானவர்கள் "ஏன் சூடாக எதுவும் வேண்டாம் என்றால் கூலாக ஏதாவது குடிங்களேன்" என்று பழச்சாறு எதையாவது ஊற்றிக் கொண்டு வருவார்கள். அவர்களை ஒரு நாளைக்காவது நமது வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். அவர்கள் வீட்டில் என் மூக்கு தேநீர் கோப்பைகளை மணக்காது.

இப்படி தேநீரை வெறுத்திருந்தாலும் சிலர் அன்பு மிகுதியாலும் அவர் காட்டும் சுத்தமான பழக்கவழக்கங்களாலும் அத்தி பூத்தாற்போல தேநீர்க் குடிக்க விரும்பிய பொழுதுகளும் உண்டு.

பொதுவாகத் தேநீர்க் கோப்பையை கழுவிவிட்டு தண்ணீர் சொட்டச் சொட்ட தேநீரை ஊற்றிக் கொண்டு வராமல், தேநீர்க் கோப்பையைச் சுத்தமாகக் கழுவி பின்னர் அதை துணியினால் துடைத்து கோப்பையின் விளிம்பில் வடியாமல் அழகாக ஊற்றிக் கொண்டு நமக்கு முன்னால் அல்லது அருகில் அமர்ந்து கொண்டு நமக்கும் தந்து அவர்களும் எடுத்துக் கொண்டு நம்மை ஒரு ஆளுமையோடு பார்க்கும் அந்தப் பார்வை, அந்தப் பறிமாற்றம் என்பவற்றை மறுக்க முடியாமல் செய்து விடும்.

சில நண்பர்களின் வீட்டில் அவரும் நாமும் மட்டும் பாவித்துக் கொள்வதற்கு மிகவும் விலை உயர்ந்த தேநீர்க் கோப்பைகளை வைத்துக் கொள்வார்கள். அந்த வகையானவர் என் மனைவியும். யார் வந்தாலும் ஏற்ற தாழ்வு இல்லாமல் பராமரிக்கும் அவள், எனக்கும் அவளுக்கும் என்று இரண்டு தேநீர்க் கோப்பைகளை வைத்துக் கொள்வார். இன்னும் ஒரு விடயம் எனது பிரத்தியேகமான தேநீர்க் கோப்பை அளவில் மிகச் சிறியதாக இருக்கும். அதற்குள் நான்கு அல்லது

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## வேலிதாண்டும் குற்றச்சாட்டு

27.08.2006 வீரமான வாரமஞ்சரியில் "மறைமுக நிகழ்ச்சி நிரலை சர்வதேச சமூகம் கொண்டுள்ளதா?" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை. அதில் அமெரிக்கா மீதான செப்டெம்பர் தாக்குதலுக்கு முன் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாத தலிபான்களது மனித உரிமை மீறல்களை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. தலிபான்கள் என்பது ஓர் இஸ்லாமிய அமைப்பு. இந்த அமைப்பின் ஆட்சிக்காலத்தில் எந்த மனித உரிமை மீறப்பட்டது என அப்பத்திரிகையிடம் வினவுகிறேன். பெரும்பான்மை இஸ்லாமியர்களைக் கொண்ட நாடான ஆப்கானிஸ்தானில் முஸ்லிம்கள் சரியான இஸ்லாமியர்களாக வாழவேண்டு என்று தான் தலிபான்கள் கூறினார்கள். இந்துக்களையோ வேறு மதத்தவர்களையோ அவமதிக்கவோ துன்புறுத்தவோ இல்லை. இதை அறிய வேண்டுமானால் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற வேற்றுமத சகோதரர்களை அணுகி கேட்டால் விளங்கும். ஆக யாருக்காகவோ அற்ப சலுகைக்காகவோ இன்னோர் சமூகத்தை, அவர்களின் அமைப்புகளை விமர்சிப்பதை அப்பத்திரிகை நிறுத்திக் கொள்ள வேண்டும். மக்களின் உயிர், உடைமைகளில் விளையாடுகின்ற ஓர் அமைப்பிற்கு, கட்டுரைகளை எழுதுவதன் மூலம் விளம்பரம் தேடிக்கொடுப்பது கண்டிக்கத்தக்கது.

*-கம்மல்துறையூரான் என்.நிஸப்த்தன்.*


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையாள மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு
பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

சகலவிதமான வசிய மாந்திரீகம்
- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்
P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...


# விளம்பரப் பகுதி


மலையாள மாந்திரீகம்




தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
P.K.சாமி (J.P.) ஐயா

அருள் சித்த எண்ணெய்



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
P.K.சாமி (J.P.) ஐயா

ஜாதகம்



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
P.K.சாமி (J.P.) ஐயா

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

ABI Beauty Parlour



Abi Beauty Parlour
Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Waxing Removing....
No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

## இன்னொருவர் பார்வையில்

# 'பெரிய அண்ணன்' பாணியில் இந்தியா நடக்கவில்லை

### -இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ்

**கேள்வி** :- உங்கள் பெயர் உள்ளூர் ஊடகங்களில் பரவலாக அடிபட்டுள்ளது. ஆனால் நல்ல முறையில் அல்லவே?

***பதில்*** :- இராஜதந்திரிகளும் ஊடகங்களும் பல்வேறு விதங்களில் ஒரு சிறந்த உறவையே பகிர்ந்து கொள்கின்றன. எனது நாட்டில் கூட, எமது வெளிவிவகார அலுவலகத்தின் செயற்பாடுகளை ஊடகங்கள் கூர்மையாக அவதானித்து வருகின்றன. நான் ஆழ்ந்த மதிப்பு வைத்திருப்பவரும், சகல நேரங்களிலுமே நான் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருப்பவருமான உல்லாசப் பயணத்துறை அமைச்சர் கூறியதாகக் கூறப்படும் கருத்துகளால் நான் அதிர்ச்சியடைந்துள்ளேன் என்பதைத் தனிப்பட்ட ரீதியிலும் எனக்காக மட்டுமே பேசுகிறேன் என்ற வகையிலும் கூறுகிறேன். பொது அபிப்பிராயமென்ற நீதிமன்றத்தில், ஒரேயொரு குற்றச்சாட்டுக்காக மட்டுமே நான் குற்றவாளியாகவுள்ளேன். அதாவது, இங்கே எனது பதவிக் காலத்தில், இலங்கை - இந்திய உறவுகளைப் பல்வேறு துறைகளில் முன்னேற்றுவதற்கும் பலப்படுத்துவதற்கும் இடைவிடாது முயற்சி செய்துள்ளேன். எமது இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் முயன்றுள்ளேன். அத்துடன் இலங்கைக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எந்த நடவடிக்கையையும், எந்தக் கட்டத்திலும் நானெடுக்க முனைந்ததில்லை.

**கேள்வி** :- நீங்கள் ஏன் குறிவைக்கப்பட்டீர்கள் என்பது குறித்து உங்களால் ஊகிக்கக்கூடிய தகவலேதும் உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறதா?

***பதில்*** :- ஊகங்கள் தெரிவிப்பதற்கு நான் தயாராகவில்லை. இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் குறித்து நான் கொண்டிருக்கும் நம்பிக்கை, விசுவாசம் ஆகியவற்றில் எந்த ஈடாட்டமும் என்றுமே இல்லையென்பதே போதுமானது.

**கேள்வி** :- இந்தியர்களுக்குச் சொந்தமான அப்பலோ ஆஸ்பத்திரியைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் அண்மையில் நீங்கள் தலையீடு செய்ததாலா இவ்வாறான கருத்துக்கள் எழுந்துள்ளன?

***பதில்*** :- ஊகங்கள் எனது செயற்பாடுகள் அல்ல. நிர்வாக அதிகாரிகள் என்ற வகையில் எமக்களிக்கப்பட்ட பயிற்சி, இதற்கு புறம்பான போதனையையே எமக்குத் தந்துள்ளது. அப்பலோ ஆஸ்பத்திரி விடயத்தைப் பொறுத்தவரை, இந்த நாட்டில் முக்கியமான இந்தியத் திட்டமொன்றில், இந்திய முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக மட்டுமே நான் தலையிட்டேன். வெளிநாட்டு ராஜதந்திரிகள் உண்மையில் தமது சொந்த அரசாங்கத்தின் வர்த்தகப் பிரதிநிதிகளாகவும் செயற்பட வேண்டியவர்கள். இந்த முதலீடுகள் சரியாக செய்யப்பட்டிருந்தால், தமது தேசத்தவர்களுக்காக தலையிட வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

**கேள்வி** :- அல்லது இலங்கை அரசாங்கத்துக்கும் இ.தொ.கா.வுக்கும் இடையில் கூட்டிணைப்பொன்றினை ஏற்படுத்துவது போன்ற உள்ளூர் அரசியல் கூட்டணிகளை ஏற்படுத்த நீங்கள் திரைமறைவாக மேற்கொண்ட முயற்சிகள் சம்பந்தமாக இந்த விமர்சனங்கள் எழுந்தனவா?

***பதில்*** :- தனது நாட்டின் வர்த்தக நலன்களை ஊக்குவித்துப் பாதுகாப்பது வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவரின் வேலை. அத்துடன் இயன்றவரை தத்தமது நாட்டின் வர்த்தக ஸ்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை ஊக்குவித்துப் பாதுகாப்பதும் கடமையென்ற கருத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். உள்நாட்டில் அரசியல் இணைப்புகளை ஏற்படுத்துவது என்று நீங்கள் கூறுவதைப் பொறுத்தவரை, இவ்வாறான அதிகார விளையாட்டில் நான் என்றுமே ஈடுபட்டதில்லை. அது எனது குணாம்சங்களுக்குப் புறம்பானது. இ.தொ.கா., தனது சொந்த விருப்பத்தின் பேரிலும் தனது தீர்மானத்தின் அடிப்படையிலும் தனக்கிருக்கும் நலன்கள் குறித்த திடப்பாடு காரணமாகவும் அரசாங்கத்தோடு இணைந்து கொண்டது.


**கேள்வி** :- இந்தியா ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லையென்றும் மிக உயர்ந்த தொழில்சார் தரத்தைப் பேணி, நீங்கள் நடந்து கொண்டீர்கள் என்றும் கூறி உங்களுடைய அரசாங்கம் அறிக்கை ஒன்றினை விடுத்து உங்களுக்குப் பக்கபலமாக இருந்துள்ளது. ஆரம்ப காலங்களில் புலிகள் இயக்கத்திற்கு இந்தியா, குறிப்பாக தமிழ் நாட்டு மாநில அரசாங்கம் உறுதியாக ஆதரவு வழங்கி வந்த கடந்த காலத்தை வைத்துப் பார்க்கையில், மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற இந்திய அரசாங்கத்தின் அறிக்கையை இலங்கையர்கள் சந்தேகக் கண்ணோடு பார்க்க முடியாதா?

***பதில்*** :- என் மீது நம்பிக்கைத் தெரிவித்து விரைவாகவும் சாதகமாகவும் பதிலளித்த எனது அரசாங்கத்திற்கு நான் நன்றியுடையவளாக இருக்கிறேன். ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பது, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை கட்டியெழுப்பப்பட்டதற்கான ஓர் அடிப்படைக் கொள்கையாகும். இலங்கையுடனான தனது விசேட உறவுகளை இந்தியா மதிக்கிறது என்ற உண்மையையும், இந்த நாட்டின் ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக இந்தியா தனது புதல்வர்களின் இரத்தத்தைச் சிந்தியுள்ளது என்பதையும் சகல இலங்கையரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**கேள்வி** :- உங்களுக்கு முன்னர் இந்திய உயர் ஸ்தானிகராகப் பதவி வகித்தவர்களில் ஒருவரான ஜோதீந்திரநாத் தீக்ஷித்துடன் உங்களை ஒப்பிடுவதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா?

***பதில்*** :- திரு.தீக்ஷித்தோடு வெளிவிவகார அமைச்சில் வேலை செய்த நாம் அனைவரும் அவரது நினைவை, மறுதலிக்க முடியாத அவரது தொழில்சார் திறமையை, இந்தியாவின் நலன்களுக்காக அவர் கொண்டிருந்த ஈடாட்டமில்லாத கடப்பாட்டை, அவரது அறிவு, ஜீவித்துவம் மிக்க தூரநோக்கை, என்றுமே அவர் இழக்காத மனித நேயத்தை நாம் மதிக்கிறோம். அவரோடு ஒப்பிடுவதென்பதல்ல இங்குள்ள பிரச்சினை. இத்

ஜனாதிபதியுடன் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ்.



தகைய மாபெரும் இராஜதந்திரியின் அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்வதும், எங்கள் பணிக்காக முன்வைக்கப்பட்டுள்ள இலக்குகளை நாம் புரிந்து கொள்வதற்கு எமது தனித்துவ திறமைகளை இன்னமும் பயன்படுத்த வேண்டியதுமே எமது தேவையாகவுள்ளது.

**கேள்வி** :- இராஜதந்திர முறைமைகளை மீறி, உங்கள் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்திற்கு இ.தொ.கா. தலைவருடன் பேசுவதற்காக இராப்போசன விருந்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை நாங்கள் விமர்சித்திருந்தோம். ஜனாதிபதியைப் பொறுத்தவரை இது ஒரு தவறான செயல்முறை என்று பலர் நினைத்தார்கள். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா?

***பதில்*** :- நான் முரண்பாடான கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்திய இல்லத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதியை வரவேற்கக் கிடைத்தமை, எனக்களிக்கப்பட்ட கௌரவமும் மதிப்புமாகும். இந்நாட்டின் முன்னைய ஜனாதிபதிகள் கூட இந்திய இல்லத்திற்கு காலத்துக்குக் காலம் விஜயம் செய்திருக்கிறார்கள். இது பற்றிய விபரங்களைக் கூற நான் விரும்பவில்லை. ஆனால், இதுதான் உண்மை என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன். இந்த நடைமுறை ஒன்றும் வழமைக்கு மாறானதல்ல. பல நாடுகளில் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. தாம் விசேட உறவுகளைக் கொண்டிருக்கும் நாட்டின் தூதுவரின் அல்லது உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குத் தலைவர்கள் விஜயம் செய்வது இடம்பெற்றிருக்கின்றன. பெரு நாட்டில் நான் தூதுவராக இருந்த போது, அப்போதைய ஜனாதிபதி தனது மகளோடும் ஏனைய தனது அமைச்சர்களோடும் எனது இல்லத்துக்கு இரவு விருந்துபசாரத்திற்காக வருகை தந்திருந்தார். 1960களின் ஆரம்ப காலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி வாஷிங்டனிலுள்ள எமது தூதுவராலய வாசஸ்தலத்திற்கு தனது மனைவியுடனும் உப ஜனாதிபதியுடனும் இரவு விருந்துபசாரத்திற்கு வருகை தந்திருந்ததை எடுத்துக் காட்டும் புகைப்படமொன்றினையும் நான் பார்த்திருக்கிறேன் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். இவை போன்ற உதாரணங்கள் பல உள்ளன. இவைகளெல்லாம் இராஜதந்திர உறவுகளை மீறிய சம்பவங்களல்ல. இராஜதந்திரம் என்பது ஒரு சிக்கலான விவகாரமாகும். வெவ்வேறான சூழ்நிலையில் விடயங்களை வெவ்வேறாக கையாள வேண்டியுள்ளது. அதாவது, பெரும்பாலான விடயங்களைக் கையாள்வது, குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து நெகிழ்ச்சி தன்மையையும் யதார்த்த அணுகுமுறையையும் பேணுவது, பிரச்சினையைத் தீர்ப்பது மற்றும் பொதுவான தளமொன்றினைக் கட்டியெழுப்புவது என்பவை சம்பந்தப்பட்ட பிரச்சினையே இவை. இராஜதந்திரி என்ற வகையில் எனது அகராதியில் இவை முக்கியமான வார்த்தைகளாகும்.

**கேள்வி** :- ஆனால், அவை வெறுமனே சமூக ரீதியான சந்திப்புகளாக அமைந்திருந்தன. ஆனால், இலங்கை ஜனாதிபதியை மற்றொரு உள்நாட்டு அரசியல் தலைவரோடு அரசியல் பேசவைப்பதற்காகவே நீங்கள் அந்த விருந்துபசாரத்தை ஒழுங்குபடுத்தினீர்கள்?

***பதில்*** :- அந்தச் சந்திப்புத் தொடர்பாக ஊகங்கள் நிறைய எழுந்ததை நான் அறிவேன். நான் இலகுவான பாணியில் சொல்வதானால், நீங்கள் குறிப்பிடுகின்ற தருணத்தில் அரசியல் பற்றி எதுவுமே பேசப்படவில்லை. சம்பாஷணைகள் பொதுவாகவே அமைந்திருந்தன. அப்போது நத்தார் காலமென்பதால் அந்த உணர்வுடனே இந்த சந்திப்பு இடம் பெற்றது.

**கேள்வி** :- இந்தியாவின் உயர்ஸ்தானிகராக இங்கு பதவி வகிப்பது குறித்து உங்கள் கருத்து என்ன?

***பதில்*** :- இது காலவரை எனது பணிகளைப் பெருமளவு நிறைவேற்றக் கூடியதாக அமைந்திருந்தது. அத்துடன் நான் பொறுப்பேற்ற பதவிகளில் தொழில்சார் ரீதியில் மிகவும் சவால்கள் நிறைந்த ஒன்றாகவும் அமைந்திருந்தது. 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியின் போது நிவாரண முயற்சிகளில் இந்தியா இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டது. இது போன்ற பல முக்கிய நிகழ்ச்சிகளை இங்கு குறிப்பிடலாம். நான் இங்கே பல நண்பர்களைக் கொண்டிருக்கிறேன். அநேகமாக இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளையும் பார்த்திருக்கிறேன். இலங்கைக்கும் இந்தியாவுக்குமான நட்புறவு ஈடாட்டமின்றி உறுதியாகப் பேணப்பட்டு வருகிறது. அத்துடன் பரபஸ்பர நம்பிக்கை, ஆழமாக வேரூன்றி, வரும் புரிந்துணர்வு ஆகியவற்றையும் கொண்டிருக்கின்றன. எமது உறவுகள் வெறுமனே நட்புறவல்ல. அது வர்த்தகம், வாணிபம், கலாசாரம், பல்துறைகளில் ஒத்துழைப்பு, பல்துறைத் திறனைக் கட்டியெழுப்புதல், உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல், புரிந்துணர்வு, மக்களுக்கிடையிலான தொடர்புகள் ஆகியவை என்றாலும் கூட ஒரு பங்கு பற்றும் தன்மையே காணப்படுகிறது.

**கேள்வி** :- இந்தியா பெரியண்ணன் தோரணையில் இலங்கையோடு வீம்பாய் நடந்து கொள்கிறது என்ற கருத்தொன்று நிலவுகிறதென்று இலங்கையில் நீங்கள் சந்தித்த மக்கள் எப்போதாவது உங்களுக்குக் கூறியிருக்கிறார்களா?

***பதில்*** :- காலத்திற்குக் காலம் சில ஊடகங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் இருந்தாலும், எனது முகத்துக்கு நேரே எவரும் அவ்வாறு சொன்னதில்லை. இந்தியாவின் அளவும் நூறுகோடி சனத்தொகையும் சாதக, பாதகமான இரு கருத்துக்களையும் அயல் நாடு ஒன்றில் ஏற்படுத்தும் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இராஜதந்திரிகள் என்ற வகையில் பாதகமான இவ்வாறான கருத்துக்களை நீக்குவதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. நாம் எதிர்கொள்ளும் சவால் அதுதான். இதனை நாம் நீக்க வேண்டும். தனிப்பட்ட வகையில், இலங்கையின் பெரியண்ணனாக இந்தியாவை நான் கருதவில்லை. ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்போல் நாம் உள்ளோம் என்பதே எனது கருத்து. பெரும்பாலான தெற்காசிய குடும்பங்களில் தம்பியோ தங்கையோ தத்தமக்கு விரும்பிய பாதைகளில் செல்கின்றனர் என்பதை உங்களால் கண்டுகொள்ள முடியும். இதற்குப் புறம்பாக இந்தியாவை மேலும் அதிகமான இலங்கையர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தியாவோடு நெருங்கிய தொடர்புகளையும் ஒத்துழைப்பையும் கொண்டிருப்பதாலும், அதன் பரந்த அபிவிருத்திகளால் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களையும், புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். ஆசியாவின் மிகப் பழைமைவாய்ந்த ஜனநாயக நாடுகள் என்ற வகையில் நாம் சம பங்குதாரர்களாக உள்ளோம். பெரிது, சிறிது என்ற கருத்தியல்கள் தேவையற்றவை.

**இலங்கையின் உள்விவகாரங்களில் இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ் தலையிடுகிறாரென்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா அண்மையில் தெரிவித்திருந்த கருத்து, இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. வெட்டிப் பேச்சு என்று இந்தியா இதனை உத்தியோகபூர்வமாகவே நிராகரித்து விட்டது. இதனை மையமாக வைத்து 'அந்தோனி டேவிட்' என்ற பத்திரிகையாளர் திருமதி நிருபமா ராவைப் பேட்டி கண்டார். கடந்த பதினொராம் திகதிய 'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான பேட்டியின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

**கேள்வி** :- தீக்ஷித்தைப் போல் நீங்கள் செயற்படவில்லை என்பதற்காக நீங்கள் அலைக்கழிக்கப்பட்டிருக்கிறீர்களா அல்லது விமர்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?

***பதில்*** :- அவ்வாறான சந்தர்ப்பங்கள் எதுவும் ஏற்பட்டதாக எனக்கு நினைவில் இல்லை. எனக்கு சார்பாகவோ எதிராகவோ மேற்கொள்ளப்படும் ஊடகக் கருத்துக்களை அசையும் நிழலின் ஓர் அங்கமாகவே நான் கருதுகிறேன். சொகுசான ரோஜாப் பூங்கா ஒன்றினை எவரும் எனக்களிப்பதாக சத்தியம் செய்யவில்லை. 'வீம்பு' என்று நீங்கள் கூறுவது போல் நான் போதியளவுக்கு மட்டம் தட்டப்பட்டுள்ளேன். பணியொன்றை ஆற்றுவதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். அதனை நல்ல முறையில் செய்வதற்கு நான் முயற்சிகள் செய்வேன்.

**கேள்வி** :- பாகிஸ்தானைச் சேர்ந்த உங்கள் சகா, கொழும்பில் இந்தியா அவரைக் கொலை செய்ய முயற்சி செய்ததாக தற்போது குற்றம் சாட்டுகிறார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான போட்டா போட்டி, இலங்கை மண்ணில் நிரம்பி வழிவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறதே.

***பதில்*** :- இக் குற்றச்சாட்டு இந்திய அரசினால் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாக நான் எதுவும் சொல்ல வேண்டிய தேவையில்லை. நீங்கள் கூறியது போன்று இலங்கை மண்ணில் நிரம்பி வழியும் போட்டா போட்டி என்று எதுவுமேயில்லை. இந்தியா, இலங்கையுடன் பல்முனை உறவுகளைக் கொண்டுள்ளது.

பாகிஸ்தானுடன் நாம் கொண்டுள்ள உறவு இலங்கையுடனான எமது உறவுகளுக்கு இடைஞ்சலாக அமையாது. சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் என்ற வகையில், இப்பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் பொருளாதார அபிவிருத்தி, பயங்கரவாத எதிர்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய இலக்குகளை அடைவதற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது.

**கேள்வி** :- இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்தியா மீண்டும் விழித்து எழுந்துள்ளது என்பது எமக்குத் தெரியும். வடக்குக் கிளர்ச்சிக்கு அரசியல் தீர்வே தேவை என்று விரிவுரை நடத்தும், உங்கள் உத்தியோகபூர்வ மார்க்கத்தையும் நாம் அறிவோம். உபகண்டத்திலிருந்து பயங்கரவாதத்தை அழித்தொழிக்க வேண்டிய தேவை குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்? பயங்கரவாதத்தைக் கையாளுவதில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் உள்நாட்டுக் கொள்கைக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதாக இலங்கையர்கள் நினைக்கிறார்களே?

***பதில்*** :- பயங்கரவாதம் சர்வவியாபகமான பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்று. இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்த நாங்கள், சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிராக பரந்த திட்டமொன்றினை ஏற்படுத்துவதற்காக ஐ.நா. சபையின் வரம்புக்குள் துரிதமாக ஒத்துழைத்து வருகிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான எமது கொள்கையில் அது வெளிநாட்டுப் பயங்கரவாதமாக இருந்தாலென்ன அல்லது உள்நாட்டுப் பயங்கரவாதமாக இருந்தாலென்ன எந்தவித வித்தியாசமோ அல்லது இணக்கப்பாடோ கிடையாது. இலங்கையின் இனப்பிரச்சினையை பொறுத்தவரை, புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமென்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் நாட்டில் கிளர்ச்சியோ அல்லது ஸ்திரமற்ற தன்மையோ ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. மாறாக அழகான உங்கள் நாட்டில், மீண்டும் ஒரு தடவை சமாதானம் ஏற்பட வேண்டுமென்று நாம் உண்மையாக விரும்புகிறோம். பல நூற்றாண்டுகளாக பல சமயங்கள், மொழிகள், இனங்கள் சமாதான சகஜீவனத்துடன் வாழ்ந்து வரும் பன்முகத்தன்மை கொண்ட நாடு உங்களது. அந்த வேற்றுமையில் தான் இலங்கையின் பலம் தங்கியிருப்பதால் அந்த ஒற்றுமையான சமூகத்தன்மையின் அழகு என்றுமே மங்கிப் போகக்கூடாது. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பேணப்படுவதை நாம் உறுதியாக ஆதரிக்கிறோம். இந்த ஐக்கியத்தைப் பேணும் அதே வேளையில், ஆகக் கூடிய அதிகாரப் பகிர்வின் மூலம் சிறுபான்மை மக்களின் நலன்களைப் பேணக் கூடியதுமான தீர்வொன்று இனப் பிரச்சினைக்குக் காணப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

**கேள்வி** : வட பகுதிக் கிளர்ச்சி தொடர்பாக ஏதாவது செய்யுங்கள் என்று ஒரு புறத்தே இந்தியாவைக் கோருகிறார்கள். மறுபுறத்தில் இந்தியா தலையிடக் கூடாதென்று கூறுகிறார்கள். இலங்கையில் காணப்படும் இந்த முரண்பாடு குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

***பதில்*** :- இலங்கையை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறோமென்று நான் நினைக்கிறேன். உங்கள் அனைத்து மக்களினதும் உணர்வுகளை நாம் பெரிதும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் ஒரு சிக்கலான நிலைமையை எதிர்கொள்கிறீர்கள். அதற்கு இலகுவான தீர்வுகள் கிடையா. எனவே நீங்கள் முரண்பாடு என்று கூறும் இந்த விடயங்களைக் கையாளுவது கஷ்டமானவையல்ல. இந்தியா என்றுமே நெருங்கிய அயலவனாகவும் சிறந்த நண்பனாகவும் விளங்குமென்பதை நான் உங்களுக்கு உறுதிபடக் கூற விரும்புகிறேன்.


*-நன்றி :- சண்டே டைம்ஸ்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**திருவரங்கம்** பெரிய கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த ஒருவரின் மகனுக்கு திருமணம் ஏற்பாடாகியிருந்தது.மணமகனின் விருப்பம், தன்னுடைய திருமண வரவேற்பிற்கு இசைச்சித்தர் சி.எஸ். ஜெயராமன் அவர்களின் கச்சேரியை எப்படியாவது வைத்து விட வேண்டும் என்பதுதான்.

சென்னையில் நான் அப்போது சினிமாவில்



பிரபலமாகியிருந்ததால், திரு.சி.எஸ். ஜெயராமனின் கச்சேரியை ஏற்பாடு செய்து தரும்படி மணமகனின் குடும்பத்தார் என்னை அணுகினார்கள். சி.எஸ்.ஜெயராமன், தன்னுடைய பாட்டுக் கச்சேரிக்கு என்ன சன்மானம் கேட்டாலும் தருவதற்குத் தாங்கள் சித்தமாக இருப்பதாகச் சொன்னார்கள்.

நான் சினிமாவில் புகழ் பெற்ற கவிஞனாக மலரத் தொடங்கிய பொழுது, திரு.சி.எஸ். ஜெயராமன், திரைப்படங்களில் அவ்வளவாகப் பின்னணி பாடவில்லை. எனவே, அவரை நானோ - என்னை அவரோ சந்திக்கும் வாய்ப்பே இல்லாது போயிற்று.

இந்த நிலையில் எப்படியும் திருமண வரவேற்பிற்கு சி.எஸ். ஜெயராமன் கச்சேரியை ஏற்பாடு செய்து தர முயற்சிக்கிறேன் என்று மணமகன் வீட்டாரிடம் நான் வாக்குக் கொடுத்திருந்தேன்.

தொழில் ரீதியாக மெல்லிசை மன்னர் திரு. ராமமூர்த்தியை நான் அன்றாடம் சந்திக்க நேர்ந்ததால் அவர் மூலமாக சி.எஸ்.ஜெயராமனை ஏற்பாடு செய்து தரச் சொல்லி வேண்டினேன். அவரும் ஜெயராமன் அவர்களை தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசிவிட்டு, என்னை அட்வான்ஸ் பணத்தோடு ஜெயராமனைப் பார்க்க அனுப்பிவைத்தார்.

அப்போது சி.எஸ்.ஜெயராமன் அவர்கள் மாம்பழம் மதுரை வீரன் தெருவில் வசித்து வருவதாக ஞாபகம். நானே தனிப்பட்ட முறையில் திரு.சி.எஸ்.ஜெயராமன் அவர்களின் இசைக்கு நெடு நாளைய ரசிகன். எனவே அவரை நேரில் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பே என்னுள் பரவசத்தை ஏற்படுத்தியிருந்தது.

மெல்லிசை மன்னர் திரு.ராமமூர்த்தி என்னைப் பற்றி தொலைபேசியில் ஜெயராமனிடம் விவரமாகத் தெரிவித்திருப்பார் என்று எண்ணி, நான் சி.எஸ்.ஜெயராமன் வீட்டிற்குப் போனேன். ஆனால், அப்படி விவரமாகத் தெரிவிக்கப்படவில்லை என்பதை பின்னால் அறிந்தேன்.

"வாங்க...வாங்க...நம்ம திருச்சிக்காரர் ஒருத்தரு கச்சேரி விஷயமாக உங்க கிட்ட வருவாரு, ஒத்துக்குங்க என்னு ராமமூர்த்தி சொன்னாப்போல. நீங்க தான் அந்த திருச்சிக்காரரா?" என்றார் ஜெயராமன்.

"ஆமாம்" என்று சொல்லி, அவர் கேட்ட சன்மானத்துக்கு சம்மதித்து, அச்சாரமாக ஐநூற்றி ஒரு ரூபாய்க்கான காசோலையை அவர் கையில் கொடுத்தேன்.

அடுத்த வாரம் வந்து நானே காரில் அவரை திருச்சிக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னேன். பக்கவாத்தியக்காரர்களை திருச்சி வானொலி நிலையத்திலிருந்து தருவித்துக் கொள்ளலாம் என்று ஜெயராமன் சொன்னார்.திரு.சி.எஸ்.ஜெயராமனுடன் ஒரே காரில் திருச்சி வரை பயணம் செய்யப் போவதை எண்ணி என் மனம் குதூகலித்தது.


'இன்று போய் நாளை வாராய்!' என்று அவர் சம்பூர்ண இராமாயணம் படத்தில் பாடியதும், 'ஆரம்பமாவதும் பெண்ணுக்குள்ளே' என்று தங்கப் பதுமை படத்தில் பாடியதும் என் செவிகளில் சிரஞ்சீவியாக ரீங்காரம் செய்து கொண்டிருந்த காலமது.


(தொடரும்.......)




# இரவு விருந்து

**ரஷ்யாவில் முதன்முறையாக மடோனாவின் இசை நிகழ்ச்சி. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் டின்னர் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. புட்டினுக்கு விருப்பம் இல்லையென்றாலும் அவரின் மகள்கள் மரியாவும், கேட்யாவும் மடோனாவின் ரசிகைகளாம். விருந்து தடபுடலாகத் தயாராகிறது!**






# தாயாகிறார் ஜெனி:ஃபர்

**ஜெ**னி:ஃபர் லோபஸ், தாயாகப் போகிறார். 'ரைட் வேர் யூ வான்ட் மீ' என்கிற படத்தில் நடிப்பதாக இருந்த லோபஸ் திடீரென விலகிவிட்டார். காரணம் கேட்டபோதுதான், தான் கர்ப்பமாக இருக்கிற செய்தியை அறிவித்தார். இதுவரை டயட் டயட் என்றிருந்த லோபஸ், இப்பொழுது காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என இயற்கை உணவுக்கு மாறி இருக்கிறார்.




**பு**யலிசைப் பாடகி எனக் கூறப்படுகின்ற மோலி கிறே, தற்போது நல்ல உற்சாகத்துடன் காணப்படுகின்றார். அமெரிக்க ஷெரீன் ஒடிட்டோரியத்தில் இரசிகர்கள் பெருந்திரளாகக் கூடி இருக்க, இசைத் துறைக்கான விருது ஒன்றை இவர் அண்மையில்தான் பெற்றுக் கொண்டார். இசை, தன்னை இளக வைத்து விட்டதாகக் கூறும் கிறே, தனது பணி இன்னும் தொடரும் என்றும் அறிவித்துள்ளார். மேடைகளில் கவர்ச்சிப் புயலாகத் தோன்றும் இவர் ஜெனட் ஜெக்ஸனுக்கும் சளைத்தவர் அல்ல - ஆடை விஷயத்தில் என்பது பிரபலமான கதை! பார்த்தால் தெரிகிறதே!

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




**ஜான்** ரசல்ஸ் ஸ்மித் என்பவர் இதியாவில் உள்ள CIA அமைப்பில் டெல்லியில் வேலை பார்த்தவர். 1971இல் பாகிஸ்தானோடு போர் நடந்த போது அவர் சொன்னார்: "அமைச்சர்கள் வட்டாரத்து செய்திகளைப் புது டெல்லியில் சேகரிக்க நிறைய வழிகள் இருக்கின்றன."

ஆயினும் நம்முடைய உளவு ஸ்தாபன RAW 1971இல் பாகிஸ்தானோடு நடந்த போரில் அரிய சாதனைகள் புரிந்தது. CIA அனுப்பிய சங்கேதக் குறிப்புகளின் அர்த்தத்தை சரியாகக் கணித்துத் தகவல் அறிந்து, அதற்கு ஏற்றபடி வியூகம் வகுத்து நம்முடைய ராணுவம் செயல்பட்டதால் சிறப்பான வெற்றியை நம்மால் பெறமுடிந்தது.

ஆனால் நம்முடைய உளவுத்துறையின் வெற்றி, தோல்விகளை ஒட்டு மொத்தமாக கணக்கிட்டுப் பார்க்கும்போது அது பெற்ற வெற்றிகளை விட தோல்விகளே சற்று கூடுதலாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

**சிக்கலான விஷயமே!**

இப்போதெல்லாம் டெல்லியில் பல்வேறு நாடுகளின் உளவாளிகளும் தகவல் சேகரிக்க சுற்றி அலைந்துகொண்டு தான் இருக்கிறார்கள். இதில் யார் உளவாளிகள் இல்லை என்று கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான வேலையில்லை.

1985 செப்டம்பர் மாதம் டெல்லி பொலிஸார் ராம் ஸ்வரூப் என்பவரின் அலுவலகத்தைச் சோதனையிட்டு அரசாங்க ரகசியங்களை அவர் வெளிநாடுகளுக்குக் கொடுப்பதாக குற்றம் சாட்டி அவருக்கெதிராக வழக்குப் பதிவு செய்தார்கள். அவருடைய அலுவலகத்தைச் சோதனையிட்டபோது அவர் வெளிநாட்டிலிருந்தார். திரும்பி வந்த உடனே அவர் கைது செய்யப்படவில்லை. அலுவலகத்தைச் சோதனையிட்டு அதிலிருந்து சில தடயங்களைக் கைப்பற்றிய பிறகு பொலிஸார் அவருடைய அலுவலகத்திற்கு சீல் வைத்திருக்கவேண்டும். அதையும் அவர்கள் செய்யவில்லை.

அக்டோபரில் அவர் திரும்பி வந்து கைது செய்யப்பட்ட போதுதான் அவருடைய அலுவலகமும் சீல் வைக்கப்பட்டது.

ராம் ஸ்வரூப் தாய்வான் நாட்டோடு நெருக்கமான தொடர்பு கொண்டு, நம்முடைய நாட்டு ரகசியங்களை அந்த நாட்டிற்கு விற்றார் என்பது குற்றச்சாட்டு. ஆனால் ராம் ஸ்வரூப் கைது செய்யப்பட்டதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவர் டெல்லியிலுள்ள அரசியல் பிரமுகர்களோடு தொடர்பு கொண்டு வெளிநாடுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு சென்றவர்களின் பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டது. சென்றவர்களில் ஆளுங்கட்சி பிரமுகர்களும் எதிர் கட்சிகளின் பிரமுகர்களும் இருந்தார்கள். மத்திய அமைச்சர்களின் பெயரும் அந்தப் பட்டியலில் இருந்ததால் அவர்கள் தங்கள் பதவிகளை உடனே ராஜினாமா செய்தார்கள்.

இந்தியாவின் வர்த்தக உறவு தாய்வானோடு அதிகரிக்கவும் அதை வளர்க்கவும் தான் பாடுபட்டதாக ராம் ஸ்வரூப் சொல்லியிருக்கிறார். 1975இல் பத்து மில்லியன் டாலராக இருந்ததை 1984இல் இருநூறு மில்லியன் டாலராக தன்னுடைய முயற்சியால் அதிகப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிடுகிறார். வெளிநாடுகளோடு நல்லுறவினை ஏற்படுத்தும் முயற்சிகளில் மட்டுமேதான் ஈடுபட்டதாகவும் அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் பகிரங்கமாகவே மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# புதிய மொடலிங்!

**மே** என்டர்சன் என்பவர் நெதர்லாந்தைச் சேர்ந்த மொடல் அழகியாவார். அண்மையில் அவர் புதியதொரு மொடலில் இறங்கினார். அதாவது வழமைபோல் இது மேடையில் நிகழ்ந்த நிகழ்ச்சி அல்ல... விமானத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். இதன்போது இவர் விமானப் பணிப்பெண்களை நெதர்லாந்து மொழியில் கெட்ட வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதனால் இந்த விமானம் மியாமி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டவுடன் மே என்டர்சன் உடனடியாக நெதர்லாந்துக்கே திருப்பி அனுப்பப்பட்டார்.



# உலகை வென்றவர் வாழ்க்கையில் தோற்றுப்போனார்.


## அகாசியின் மறுபக்கம்.

"ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்" என்று கூறுவார்கள். எல்லா ஆண்களின் வெற்றியின் பின்னாலும் பெண்கள் இல்லை என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியதாக இருக்கிறது.

இதற்கு ஒரு உதாரணமாக டென்னிஸ் உலகில் அழியாப் புகழ் பெற்ற அன்ரே அகாசியின் வாழ்க்கை இருக்கிறது. இனி வரும் காலத்தில் டென்னிஸ் விளையாட்டுக்குள் வரும் அத்தனை பேருக்கும் ஞானத் தந்தையாக, ஆதர்ஷமானவராக அன்ரே அகாசி இருக்கப் போகிறார். அகாசி தொட்ட சாதனைச் சிகரங்கள் அபாரமானவை. பல பேரின் கனவு அது.

1986ஆம் ஆண்டு டென்னிஸ் உலகில் நுழைந்த அகாசி, 2006 வரையான 20 வருடங்களாக தொடர்ந்து விளையாடி இலட்சக் கணக்கான ரசிகர்களைக் கொண்டிருந்தார். இந்தக் கால இடைவெளியில் 1144 போட்டிகளில் பங்குபற்றி அதில் 870 போட்டிகளில் வெற்றி வாகை சூடினார். 274 ஆட்டங்களில் தோல்வி கண்டார்.

டென்னிஸ் விளையாட்டில் அகாசி பெற்றுக் கொள்ளாத விருதுகளே இல்லை எனலாம். அப்படி இருந்தால்




7 வயதில் அன்ரே அகாசி.


அவை தகுதி வாய்ந்தவையாக இருக்காது என்பதுவே டென்னிஸ் இரசிகர்களின் ஒருமித்த கருத்தாகும்.


ஒற்றையர் பிரிவில் 60 பட்டங்களை வென்றுள்ள அகாசி, இரட்டையர் பிரிவில் ஒரு பட்டத்தை மட்டுமே வென்றுள்ளார்.


டென்னிஸில் அகாசி தனிக்காட்டு ராஜா என்பது தான் பொருத்தமாக இருக்கும். டென்னிஸ் உலகின் மிகப் பெரும் உயரிய பட்டமாக மதிக்கப்படும் கிரான்ஸ்லாம் பட்டத்தை அகாசி 8 தடவைகள் வென்றுள்ளார்.

1992ஆம் ஆண்டு தனது முதலாவது கிரான்ஸ்லாம் பட்டத்தை விம்பிள்டனில் பெற்றுக் கொண்டார். பின்னர் 1994, 1999ஆம் ஆண்டுகளில் அமெரிக்க பகிரங்க ஆட்டத்திலும், 1995, 2000, 2001, 2003ஆம் ஆண்டுகளில் ஆஸி. பகிரங்க டென்னிஸிலும், 1999ஆம் ஆண்டு ரோலண்ட் கரோஸ் பகிரங்க









டென்னிஸிலும் கிரான்ஸ்லாம் பட்டங்களை வென்றார்.

சாதனை உச்சங்களைத் தொடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரை விரும்பும் இரசிகர்களின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்தது. இரசிகைகள் பலர் அவரை மீண்டும் மணம் முடித்து குடும்பம் நடத்தத் தானாகவே விண்ணப்பம் செய்தனர்.

பல யுவதிகளின் கனவு நாயகனாகத் திகழ்ந்த அகாசியின் கனவுக்குள் இடம் பிடித்தவர் 'Stetfi Grat ' எனும் இன்னொரு டென்னிஸ் வீராங்கனை. இவரை 1992ஆம் ஆண்டே விம்பிள்டனில் அகாசி சந்தித்தார். எனினும் அது காதலாகவே தொடர்ந்தது. 2001இல் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். இவர்களின் இனிய இல்லற வாழ்வுக்கு அடையாளமாக 2001

ஒக்டோபரில் Sohnchen Jaden Gill என்ற ஆண் குழந்தை பிறந்தது.

2001இல் கிரான்ஸ்லாம் பட்டமும் மகனும் கிடைத்ததை அகாசி ஆண்டவன் வழங்கிய பரிசாக நினைத்தார்.

திருமணத்துக்குப் பிறகு டென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்ற அகாசியின் மனைவி, உணவு விடுதி நடத்தி வந்தார். எனினும், அகாசி விளையாடும் போட்டியையும் மகனுடன் இருந்து பார்த்து ரசிப்பது அவரது வழக்கமாக இருந்தது. இந்த சந்தோசம் நீடிக்கவில்லை. பின்னாளில் நாளடைவில் அகாசி பட்டங்களை வெற்றி கொள்ளும்போது அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்வது, புகழில் பங்கு கொள்வது என்பதோடு நிறுத்திக் கொண்டார்.

அகாசி மீது சந்தேகமும், அலட்சியப் போக்கும் அதிகரிக்கத் தொடங்கியது. உலகத்தை திரும்பிப் பார்க்க வைத்த




விடை பெறும் நேரம்.

அகாசியை மனைவி தூர வைத்துப் பார்க்கலானார். இந்தச் சூழலில் அகாசி தன் வெற்றிகளுக்காக மகிழ்ச்சிக்கொள்ள முடியாமல் திண்டாடினார். குடும்ப வாழ்க்கை சிறுகச் சிறுக முட்படுக்கையாகியது. மனைவி வியாபாரம், தொழில் என்று ஒதுங்கிக் கொண்டு போகவும், அகாசி தனிமைப்பட்டார். எனினும் விவாகரத்து வரைக்கும் போய் விடக்கூடாது என்று அவரது நண்பர்கள் ஆலோசனை வழங்கினார்கள். உலகப் புகழின் உச்சியில் இருக்கும் அகாசி வாழ்க்கையில் தோற்றுப்போனார் என்ற அவப்பெயர் வந்து விடக்கூடாது என்பதில் அகாசி முழுக் கவனமெடுத்தார். மனைவியோடு மனக் கசப்பு இருந்த போதும் தன் அன்பு மகன் கில்லுக்காக அகாசி செயற்கை சந்தோசத்தை முகத்தில் பூசிக் கொண்டார்.

இந்த வெறுமையான வாழ்க்கை அகாசியை விளையாட்டில் முழுக் கவனமெடுக்க முடியாமல் வற்புறுத்தியது. இதனால் தனது 36ஆவது வயதில் ஓய்வு பெறும் முடிவை எடுத்தார்.

29.04.1970ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த அகாசி, ஏழு வயதிலேயே டென்னிஸ் விளையாட்டைத் தேர்ந்தெடுத்து ஆர்வம் காட்டினார். 13 வயதில் Bollettieris, Acadamy யில் இணைந்து பயிற்சி பெற்றார். 1995ஆம் ஆண்டு டென்னிஸ் தர வரிசையில் முதலாமிடத்தில் இருந்த அகாசி ஓய்வு பெறும் போது 39ஆவது இடத்தில் இருந்தார். வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லையென்றால் ஒவ்வொரு வெற்றியாளனின் வாழ்க்கையிலும் சரிவுகள் ஏற்படுகின்றது என்பதை அகாசியின் வாழ்க்கை நிரூபிக்கிறது.

இறுதியாக இம்மாதம் 3ஆம் திகதி அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டியில் பங்கு கொண்ட அகாசி, ஜேர்மன் வீரரான 225 வயது வீரர் பெஞ்சமின் பெக்கரிடம் தோல்வியைத் தழுவினார். போட்டியின் முடிவில் மைதானத்தின் நாலா பக்கமும் திரும்பி கையை அசைத்து முத்தங்களைப் பறக்கவிட்ட அகாசி, அழுது கொண்டு பேசிய வார்த்தைகள் அனைத்து இரசிகர்களையும் கண்கலங்க வைத்தது. அனைத்து இரசிகர்களும் எழுந்து நின்று



மனைவியுடன் அகாசி.

கண்ணீரோடு விடைகொடுத்தனர்.

"நான் விளையாடும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று நினைத்தேன். முடியவில்லை. நான் தோற்றுவிட்டதாக

**சுபாஷ்**

குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையில் என் பதிவுகளில் பெற்ற வெற்றிகள் ஏராளமானவை. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுமார் 20 வருடங்களாக என்னோடு இருந்து உற்சாகப்படுத்தி, ஊக்கம் தந்த உங்கள் அனைவருக்கும் என் நன்றிகள். உங்களின் ஆதரவையும், அன்பையும் நான் என் இறுதி நிமிடம் வரை நினைவில் கொண்டிருப்பேன்" என்று கூறும் போது அகாசி அழுத விழிகளோடு நாக்கு தளதளக்கக் கூறினார். அகாசி விளையாட்டிலிருந்து விடைபெற்றாலும் ஒவ்வொரு இளம் வீரருக்கும் வழிகாட்டியாக இருப்பார் என்பது நிச்சயம்.

---




இருதரப்பும் தத்தமது பகுதியை பலப்படுத்திக்கொண்டிருக்கையில், அவர்களின் படைப் பலங்களை இராணுவ அதிகாரிகள் இன்னும் இன்னும் பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இதில் விமானப்படைத் தளபதியும் அடங்குவார். அவர் இப்போதெல்லாம் அவளைச் சந்திப்பதில்லை. அதற்கு அவர்



மிகவும் வேலைப்பளுவுடன் இருப்பதே காரணமாகும். என்றாலும் அவர் அவளை முற்றாகச் சந்திப்பதில்லை என்று கூற முடியாது. அவர் தன் வேலையைச் செவ்வனே செய்வதோடு மட்டுமல்ல, அவர் இப்போர் முஸ்தீபுகளில் அதிக ஈடுபாடு காட்டவில்லை ஆயினும் தங்கள் பகுதி இராணுவத்தினருக்கு அதிக இழப்பு ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். இவரின் இந்தப் போக்கு ஜனாதிபதி ஜோன்சனுக்கு சந்தேகத்தை வரவழைத்தது. இதனால் ஜோன்சன், இராணுவத் தளபதியை பின்தொடர அவர் இரகசியப் பொலிஸாரை அனுப்பியிருந்தார். படையினரை ஒழுங்குபடுத்துவதில் அவர் காட்டிய ஆர்வம் அவர்களை சிந்திக்க வைத்தது. நிர்வாகத் துறையில் இவ்வளவு கண்டிப்பாக இருக்கும் இவரை தாங்கள் ஏன் பின்தொடர்கிறோம் என்று கொஞ்சம் குழம்பிப் போனார்கள் என்றாலும் சொன்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்கள். தனிமையில் அவர் அவளைச் சந்திப்பதை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவரது பிரத்தியேக அறையில் ஒரு ஒலி வாங்கியினைப் பொருத்தியிருந்தார்கள். அதன் மூலம் அவர்கள் அவர் என்ன கதைக்கிறார் என்பதையெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். அவர் எந்தப் பிழையும் விட்டுக் கதைப்பதில்லை. அவளுடன் கதைத்துக் கொள்வது மட்டும் கொஞ்சம் ஆபாசமாகவும் கிளுகிளுப்புடையதாகவும் இருந்தது. இவற்றையெல்லாம் மிகவும் வடிவாகப் பெரிய அறிக்கையாகச் சமர்ப்பித்தனர். இவர்களின் அறிக்கையை ஆராய்ந்த ஜனாதிபதி விமானப்படைத் தளபதி தனக்கு எதிராக செயல்படுவதாக தான் எடுத்த முடிவை மாற்றவேயில்லை. ஆயினும் அவர் விமானப்படைத் தளபதி மேல் ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தார். எப்படியும் தனக்கு எதிராக இவர் செயல்படுவார் என்று அவர் எண்ணியதே காரணம்.

அவர் எண்ணியது சரியாகவே இருந்தது தன்னை உளவாளிகள் பின் தொடர்கிறார்கள் என்பதை எப்படியோ அறிந்து கொண்ட விமானப்படைத் தளபதி தன்னைச் சரிப்படுத்திக் கொண்டார். அவர் தன்னை வேலையில் முழுமையாக ஈடுபடுத்தியிருந்தார். தனது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டதை அறிந்த அவர் 'தன்னை வழமை போல் மாற்றிக் கொண்டார்.

இவற்றையெல்லாம் விமானப்படைத் தளபதி விலாவாரியாக அமெரிக்க ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் எழுதினார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். ஒரு நாள் அதிகாலை நான் எனது பிரத்தியேக அறையில் உள்ள பொருட்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கையில் ஒரு கறுப்பு வயர் ஒன்று தேவையில்லாமல் இருப்பதைக் கண்டேன் அவ்வயர் எங்கு போய் முடிகிறது என்பதைப் பார்த்தால் அது என் அறையின் பின்பக்க வழியாகச் சென்று எனது ஆசனத்தின் அருகில் முடிந்தது. முடிவு என்னவென்று பார்த்தால் அதில் ஒரு ஒலிவாங்கி பொருத்தப்பட்டிருந்தது. அதில் CIA என்று எழுதியிருந்தது. அதிலிருந்து நான் பின்தொடரப்படுகிறேன் என்பதைப் புரிந்து கொண்டேன் அதிகாரியான என்னையே இப்படி தொடர்வதை நான் விரும்பவில்லை. எனவே தான் இப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக கூறியிருந்தார். அத்துடன் இங்கு நடக்கும்



அட்டூழியங்களை அவர்கள் தங்கள் பங்கிற்குக் கூறியிருந்தார்கள். அந்தக் கடிதத்தை எப்படியாவது அனுப்பிவிட வேண்டும் என்று அவர் மிகவும் கண்டிப்பாக இருந்தார். இதற்காக அவர் தானே சென்று வரலாம் என்று எண்ணியிருந்தார். அதுதான் அவரின் கடைசிப் பயணம் என்பதை அவர் எண்ணியிருக்கவில்லை. தனது காதலியை அவர் சந்திக்க விரும்பினார். அத்துடன் அவளையும் அழைத்துச் செல்லலாம் என்று அவர் எண்ணியிருந்தார். அவளை அவர் சொல்லும் நாள் வந்து தன்னைச் சந்திக்கும்படி கேட்டிருந்தார். செல்வதற்கு முன்னைய நாள் இரவு தனிமையில் இருந்த இருவரும் ஒரு ஹோட்டல் அறையில் தங்களை பரிமாறிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஜனாதிபதி ஜோன்சன் அடுத்த நாள் விமானப்படைத் தளபதி அமெரிக்கா செல்லவிருப்பதையும், செல்வதற்கு உலங்கு வானூர்தியை ஒழுங்குபடுத்தியிருப்பதையும் அறிந்து கொண்டார் ஏன் அங்கு அவர் செல்கிறார் என்பதை அறிய அவர் பிரத்தியேக அறைக்கு வந்தார். அங்கு அவர் எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்தார். உடனே அவர் இத்தோடு இவருக்கு முடிவு கட்ட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு சென்றார்.


இங்கு ஹோட்டலில் விமானப்படைத் தளபதி தான் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாகவும் இனிமேல் நான் உன்னுடன் தான் அமெரிக்காவில் குடியேறப்போகிறேன் என்று தன் ஆசையைச் சொல்லிக் கொண்டிருக்கையில், இங்கு அவருக்கு சதிவலை ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

(தொடரும்)




உலகத்து நாயகியே! -எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
உன்பாதம் சரண்புகுந்தோம், -எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !

**- சுப்பிரமணிய பாரதியார்**



# கணவருக்காக!



**சிரோப்** சிங் மன்னன் இறந்த பிறகு செஞ்சிக்கோட்டையை ஆளும் பொறுப்பு தேசிங்கு ராஜனுக்கு வந்தது. இளம் வயதிலேயே ஆட்சி பொறுப்பினை ஏற்றான் தேசிங்கு ராஜன். தேசிங்கின் தந்தை 'ஆற்காடு நவாப்'பிற்கு கப்பம் செலுத்தி வந்ததால், இவனும் கப்பம் செலுத்தி வந்தான்.

ஒருமுறை டெல்லியில் பாரசாரி குதிரை ஒன்றினை யாரும் அடக்க முடியாது என்பதனைக் கேள்விப்பட்டு, தன் நண்பனான 'மகமதுகா'னுடன் டெல்லி சென்று அக்குதிரையை அடக்கி, அதனைப் பரிசாகப் பெற்று செஞ்சிக் கோட்டைக்குத் திரும்பினான்.

தேசிங்கு ராஜனுக்கு மகமதுகான் மீது மிகுந்த அன்பு உண்டு. இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர். தேசிங்கு ராஜன் தன் நண்பனைப் படைத்தலைவன் பணியில் அமர்த்தினான். மகமதுகானும் தேசிங்கு ராஜன் கட்டளைப்படி நடக்கலானான். அடிமைகள் போல் ஆற்காட்டு நவாப்பிற்கு கப்பம் செலுத்துவதை தேசிங்கு விரும்பவில்லை. திடீரென கப்பம் செலுத்துவதை நிறுத்திவிட்டான். தேசிங்கின் கப்பம் வராததால் ஆற்காடு நவாப் கடுங்கோபமுற்றான். தேசிங்கைத் தண்டிக்கக் காத்திருந்தான்.

தேசிங்கின் நண்பனான மகமதுகானுக்கு திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவன் தன் சொந்த ஊராகிய வழுதாவூருக்குச் சென்றிருந்தான். தேசிங்கு செஞ்சிக்கோட்டையில் இருந்தான். ஆற்காடு நவாப் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் விதத்தில் படையெடுத்தான். தேசிங்கு இந்த திடீர் படையெடுப்பால் திணறிப் போனான்.

## பாப்பா முரசு சிறுகதை

உடனடியாக நண்பனுக்குச் செய்தியைச் சொல்லி அனுப்பினான்.

திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்ற நிலையில் தேசிங்கின் செய்தி கேட்ட மகமதுகான், போர் முடிந்த பின்பே இனி திரும்புவேன் எனக் கூறிவிட்டு செஞ்சிக்கு வந்தான். படைகளைத் திரட்டி போரிடலானான். நண்பனை ஊக்குவித்தான். நண்பனது வரவால் தேசிங்கு மிகவும் மகிழ்ச்சி கொண்டு எதிரிகளைத் தாக்கலானான். ஆற்காடு நவாப் மகமதுகானின் வருகையை எதிர்பார்க்கவில்லை; அவனது தாக்குதலில் நிலைகுலைந்தான். அவனது வீரர்கள் சிதறி ஓடினர். எல்லைவரை விரட்டிச் சென்றான்.

போர் முடிந்த நிலையில் மகமதுதான் திரும்பி வந்தான். ஆனால் பகைவர்கள் சூழ்ச்சி செய்து அவனைக் குத்திக் கொன்றனர். தன்னுடைய நண்பனைச் சூழ்ச்சியால் கொன்றுவிட்டனர் என்பதை அறிந்த தேசிங்கு வெகுண்டெழுந்தான். சூழ்ச்சி செய்த அனைவரையும் வெட்டி வீழ்த்தினான். இன்னும் அவன் மனம் அமைதி அடையவில்லை. திருமணத்தை விட்டு விட்டு தனக்காக போர் புரிந்த நண்பனுக்குத் தன் உயிரையும் கொடுக்க ஆயத்தமானான்.

நண்பன் இறந்த இடத்தின் அருகே சென்றான். தன்னுடைய வாளை மேல்நோக்கி வீசினான். வாள் கீழே வரும்போது தேசிங்கு தனது மார்பைக் காட்டினான். அவன் மார்பில் வாள் பாய்ந்தது.

அப்படியே இறந்தான். தேசிங்கின் மரணம் அவனது மனைவிக்கு பெருந்துயரைத் தந்தது. அரசியான அவள் தீயை மூட்டச் செய்து அதில் பாய்ந்து உயிர் துறந்தாள்.

நடந்தவற்றைக் கேள்விப்பட்ட ஆற்காடு நவாப் மனம் வருந்தினான். தேசிங்கின் வீரத்தையும், ராணியின் கற்பையும் போற்றினான். ராணிக்காக ராணிப்பேட்டை என்ற புதிய நகரையே ஏற்படுத்தினான். தேசிங்கு ராஜனின் சிறந்த நட்பும், ராணியின் உயர்ந்த கற்பும், பகைவனே பாராட்டும் அளவில் உயர்ந்திருந்தது.

எத்தனை உயர்ந்த பண்புடையவர்கள் நம் நாட்டில் வாழ்ந்துள்ளனர் பார்த்தீர்களா?

# ஆத்திசூடி

## குணமது கைவிடேல்

**நீ எத்தகைய வறுமை, துன்பங்கள் வந்துள்ள போதும் நீ உனது நற்பண்புகளைக் கைவிடாதே.**

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# இனிக்கும் தமிழ்!




தமிழன் என்று சொல்லடா!
தலைமை ஏற்று செல்லடா!
அமிழ்தினும் இனிய
மொழியடா!
தமிழ் இன்றி வேறு ஏதடா!
வள்ளுவன் கண்ட
மொழியடா!
வெல்பவன் எவனும்
இல்லடா!
தெள்ளு தமிழ் மொழியடா!
நல்ல தமிழ் உரையடா!
வாய் வழி வந்த முதல்
மொழியடா!
வாழ வழி வகுத்த தமிழ்
மொழியடா!
தாய் வழி வந்த மொழியடா!

தாய் போல் நாளும் துதியடா!
செம்மொழியாய் இனிக்கும்
மொழியடா!
செந்தமிழாய் மணக்கும்
மொழியடா!
பைந்தமிழாய் சிறக்கும்
மொழியடா!
வண்டமிழாய் வளரும்
மொழியடா!
தமிழால் நீ உயர்வு
கொள்ளடா!
மகிழ்வால் உலகை
வெல்லடா!
'தமிழே' உயிர்மூச்சாய்
கொள்ளடா! நம்
வாழ்வே தமிழுக்குத் தானடா!


# அதிசய உலகம்

## செயற்கை வால் நட்சத்திரம்!



**மேற்கு** ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மூன்று நாட்டு விஞ்ஞானிகள் செயற்கை வால் நட்சத்திரம் ஒன்றை ஆய்வுக்காக உலகிலேயே முதன் முறையாகத் தோற்றுவித்தனர். பசுபிக் கடலுக்கு மேலே 1 இலட்சத்து 12 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் உயரத்தில் செயற்கை வால் நட்சத்திரம் ஒன்று ஆகாயவெளியில் சென்றது. பூமியின் காந்தப் புலன் பற்றி அறியவும், சோலார் காற்றின் மர்மத்தை விடுபட வைக்கவும் செயற்கை வால் நட்சத்திரம் பரிசோதனை செய்யப்பட்டது.


## லாமா!



**லாமா** எனப்படும் மிருகங்கள் ஒட்டகத்தின் உறவினர்கள். இவை தென் அமெரிக்காவில் காணப்படுகிறது. மிகவும் சிறிய மிருகம். ஆனால், அடர்த்தியான ரோமம் உடைய இவற்றிற்கு திமில் கிடையாது. நீள கழுத்தும் இதன் தாடை அமைப்பும் பார்ப்பதற்கு ஒட்டகம் என்று சொல்வதை விட ஆடு எனலாம்.

தென் அமெரிக்காவின் லாமாக்களை தங்கள் வீட்டு விலங்காக பயன்படுத்துகின்றனர். இவற்றின் முதுகில் சுமைகளை ஏற்றி கரடுமுரடான மலை முகடுகளில் ஏற்றிச் செல்வர். இந்த லாமாக்கள் கூட்டம் கூட்டமாக வசிக்கும். ஒரு ஆண் லாமாவிடம் பல பெண் லாமாக்கள் மற்றும் குட்டிகள் இருக்கும். ஆபத்தை கண்டுவிட்டால் உடனே ஆண் லாமா சப்தம் கொடுக்கும். பெண் லாமாக்களும், குட்டிகளும் ஓடி ஒளிந்து கொள்ளும். ஆண் லாமா ஆபத்தை எதிர்நோக்க காத்திருக்கும். இந்த லாமா இனத்திலேயே மிகவும் சிறப்பு வாய்ந்தது அல்பகா. இது மிகவும் சிறிதாக இருக்கும். ஆனால், அடர்த்தியான ரோமம் கொண்டது. இதன் ரோமத்தில் தயாரிக்கப்படும் கம்பளி மிகவும் விலை உயர்ந்தது. இந்த கம்பளியின் பெயரும் அல்பகாதான்!

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 19.09.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 661**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 659

**பரிசுக்குரியவர்:**
**வை. ஜும்லாட் பிர்ளா,**
**மக்குளூற்று, வெள்ளைமணல்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஈ. பிரவீனா, 34/54, வில்பிரட்புர ஹட்டன். | ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த. |
| கே. ஹரிணி, 19, பன்சல வீதி, இராகலை. | சகானுஜா தியாகேசன், 55, மேல் மாடித்தெரு, மட்டக்களப்பு. |
| எம். ஜனார்த்திக்கா, இல.31 ரொசிட்டா பஜார், கொட்டகலை. | சி. சிவபாதம், இல. 28, பிள்ளையார் கோவில் வீதி, 2ஆம் குறுக்கு கல்லடி, மட்டக்களப்பு. |
| எம்.ஜே.எம். அஸார்தீன், இல 53/1, பாடசாலை வீதி பெகாடபிடிய, அகுறஸ்ஸ. | அப்துல் ரஹ்மான், முகர்ரமாஹ் சர்வதேச பாடசாலை, கொழும்பு - 09. |
| அப்துல் மாஜித், தரம் 3A, அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு - 12 | எப். மசிபா மவ்ஜுட், B-14 1/7, சொய்சாபுர, மொரட்டுவ. |

# சில விடுகதைகள்


1. உள்ளே இறுகுவான் வெளியே உருகுவான் அவன் யார்?
2. போடாத சட்டையை கழற்றும் புதுமை மந்திரவாதி அவன் யார்?
3. வேட்டு இல்லாமலேயே வெடிக்கும் இரட்டைக் குழல் துப்பாக்கி அது என்ன?
4. வளைவான் நெளிவான் ஆனால் ஒடிய மாட்டான் அவன் யார்?
5. தூங்கவும்வைப்பான் தூக்கியும் வீசுவான் அவன் யார்?
6. ஓட்டு வீட்டுக்குச் சொந்தக்காரன் ஒரு இடத்தில் நிலையாக இருக்க மாட்டான் அவன் யார்?
7. தண்ணீரில் தாவுது தட்டைக் கப்பல் அது என்ன?
8. மரத்துக்கு மரம் தாவிப்போகிற முத்தப்பனுக்கு முதுகில் மூன்று கோடு அவன் யார்?
9. சின்னவனும் பெரியவனும் சீராக ஓடி நேரம் காட்டுவார்கள் அவர்கள் யார்?
10. அந்தரத்தில் ஆடும் வீடு ஆபத்தில்லாத அழகு வீடு அது என்ன?

**விடைகள்**
1 ஐஸ் கட்டி
2 பாம்பு
3 மூக்கு
4 தலைமுடி
5 காற்று
6 ஆமை
7 தவளை
8 அணில்
9 கடிகார முட்கள்
10 தூக்கணாங் குருவிக்கூடு.

# தகவல் பெட்டி




கனடாவிலுள்ள கியூபெக் மாநிலத்தில் லொரேற்ரேவில்லே என்ற இடத்தைச் சேர்ந்த இந்தப் பதினாறு வயது வீராங்கனை அம்பு எய்வதில் அபார சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். வில்லை வளைத்து அம்புகளை எய்வது சர்வதேச ரீதியான ஒரு போட்டிதான். அமெரிக்காவில் 2004ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற கிரான்ற் பிரிக்ஸ் போட்டியில் பங்குபற்றிய அறுபது பெண்களில் ஆகக்குறைந்த வயதினரான இவர் 34 ஆவது இடத்தைப் பிடித்தார். கனடாவில் மட்டும் பத்துக்கு மேற்பட்ட விருதுகளைத் தட்டிச் சென்றிருக்கிறார். 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்ற எண்ணியிருக்கும் இவரின் இலட்சியம் என்ன தெரியுமா? ஓர் ஆசிரியையாவது தானாம்.



## அழகான அம்பு

## இந்த எடை போதுமா?




நம்பினால் நம்புங்கள். இடது பக்கத்தில் காணப்படும் பையனுக்கு வயது நான்குதான். ட்சாம்புலாங் கொடோகோவ் என்ற இந்த ரஷ்யப் பையனின் எடை 123 இறாத்தல்கள். உயரம் மூன்று அடி பதினொரு அங்குலம். பக்கத்திலிருக்கும் ஜோர்ஜியாவைச் சேர்ந்த குண்டுப் பையன் ஐந்து வயதை எட்டிப் பிடித்தான். சும்மா சொல்லக்கூடாது. நான்கு அடி உயரமான இந்தக் குண்டனின் எடை 112 இறாத்தல்கள் மட்டும்தான். இவனது பெயர் ஜியோர்ஜிபிபிலோசி. ஜியோர்ஜியின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குப் போக இருவருமே தயாராகிறார்கள்.



## இப்படியும் வழிபாடு!

உடம்பெல்லாம் சேற்றைப் பூசிக்கொண்டு காய்ந்துபோன இலை குழைகளால் மூடிக் கொண்டு செயின்ற் ஜோன் புனிதரை வேண்டினால், வாழ்க்கையில் வேண்டுவதெல்லாம் கிடைக்குமென்பது இந்தப் பக்த கோடிகளின் நம்பிக்கை. வடக்கு பிலிப்பைன் உள்ள நியூவா எச்யா மகாணத்தில் உள்ள பிக்லாற் என்ற குக்கிராமத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் இந்த பிரார்த்தனை வருடாவருடம் நடை பெறுகிறது. நல்லவேளை வருடக்கணக்காக இந்த பிரார்த்தனை நடைபெறுவதில்லை. தேவாலயத் திருவிழா நடைபெறும் நாட்களில் மட்டும்தான் உடலில் சேற்றைப் பூசிக்கொள்கிறார்கள்.

## மிதக்கும் மாளிகை



படத்தைப் பார்த்ததும் கலகலவெனச் சிரித்து விடாதீர்கள். கலகல என பெயர் கொண்ட இந்தக் கப்பல் அத்திலாந்திக் கடற்பரப்புக்கு ஊடாக சென்று கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட படம் இது. உல்லாசப் பயணிகளின் சொர்க்கமாக விளங்கும் இக்கப்பலின் பிரமாண்டங்களை படத்தைப் பார்க்கும் போதே புரிகிறதல்வா!



வாத்தியார்

# ஆபாசமா? ஐஸ்வர்யா!

உலக அழகி ஐஸ்வர்யாராய் இந்தி, ஆங்கிலப் படங்களில் நடித்து வருகிறார். தமிழில் ஜீன்ஸ், இருவர், கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் படங்களில் நடித்துள்ளார்.

இந்தியில் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் நடிகை ஐஸ்வர்யாராய் என்பது குறிப்பிடத் தக்கது. ஹாலிவுட் படத்தில் நிர்வாண காட்சி யொன்றில் அவரை நடிக்கக் கேட்டனர். ஐஸ்வர்யா ராய் மறுத்து விட்டார்.

ஆனால் இந்திப் படங்களில் படுக்கையறைக் காட்சிகளில் தாராளமாக நடிக்கத் தொடங்கியுள்ளார். ஏற்கனவே வங்க மொழி படமொன்றில் விதவை கேரக்டரில் ஆபாசமாக நடித்தார். அது 'ஐஸ்வர்யாராய் ஒரு பேரழகி' என்ற பெயரில் தமிழில் டப்பிங் செய்து வெளியிடப்பட்டது.

தற்போது தாமினி டீச்சர் என்ற இந்திப் படத்திலும் படுக்கையறைக் காட்சியில் ஆபாசமாக நடித்து பரபரப்பு ஏற்படுத்தியுள்ளார்.

இந்தப் படத்தில் கணவனே தன் மனைவியிடம், இன்னொரு வாலிபனைக் காதலிக்கச் சொல்கிறான். மனைவி பாத்திரத்தில் ஐஸ்வர்யாராய் நடித்துள்ளார். இதில் படுக்கையறைக் காட்சி யொன்று இடம் பெறுகிறது. அக்காட்சியில் ஒரு குறிப்பிட்ட நடிகர் நடித்தால்தான் நடிப்பேன் என்று ஐஸ்வர்யாராய் நிபந்தனை விதித்தார். உடனே அந்த முன்னணி நடிகரை ஒப்பந்தம் செய்தனர். அவருடன் மிகவும் நெருக்கமாக ஐஸ்வர்யாராய் நடித்துள்ளார். மூன்று நிமிட நேரம் ஓடும் இந்தப் படுக்கையறைக் காட்சியை தத்ரூபமாகப் படமாக்கியுள்ளார் பெண் இயக்குநர் லீனா யாதவ்.

காமசூத்ரா, பயர் படங்களை இயக்கிய பெண் இயக்குநர் மீராநாயருக்குப் பிறகு அதை மிஞ்சும் வகையில் இக்காட்சியை உணர்ச்சி பூர்வமாக எடுத்துள்ளாராம் லீனா யாதவ்.

ஐஸ்வர்யாராயுடன் படுக்கையறையில் நடித்த நடிகர் யார் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நடிகர் பெயர் படம் வெளிவரும் வரை ரகசியமாக இருக்கும் என்றும் படம் ரிலீஸ் ஆகும்போதுதான் வெளியிடுவேன் என்றும் லீனா யாதவ் கூறியுள்ளார்.

படுக்கையறை நடிகர் யாராக இருக்கலாம் என்று மும்பை பட உலகம் யோசித்துத் தலையைப் பிய்க்கிறது. படுக்கையறைக் காட்சியில் நடித்த நடிகரின் முகம் தெரியாத சில ஸ்டில்களை டைரக்டர் வெளியிட்டுள்ளார். உடலமைப்பை ஆராயும் போது சஞ்சய்தத்தாக இருக்கலாம் என்று பேச்சு அடிபடுகிறது.



சரத்குமார் - நயன்தாரா
தலைமகன்



தனுஷ்
பரட்டை

# தத்துவம் பேசுகிறார் சினேகா!

நாட்ல என்ன நடக்குதுனே தெரியலை. நாப்பது வயசுக்கு மேல சன்னியாசி ஆகலாம். வாழ்க்கையைப் பத்தி மத்தவங்களுக்கு உபதேசம் பண்ணலாம். சினேகா மாதிரி பெண்களுக்கெல்லாம் இது சரிவருமா?

கும்பகோணத்துல கல்யாண மண்டபம் கட்டி மூணு ஜோடிக்கு இலவச திருமணம் நடத்தி வச்சதுல சினேகாவோட மெச்சூரிட்டி கொஞ்சம் கூடிப் போயிருக்கு.

பேட்டினு போய் யார் கேள்வி கேட்டாலும், வாழ்க்கைனா வட்டம், ஒழுங்கா நடந்துக்கலைனா நஷ்டம்ங்கிற மாதிரி கேள்விக்கு நடுவுல தத்துவச் சாறை பிழிஞ்சு ஊத்துறார். சரிதான், அம்மணிக்கு வயசாயிடுச்சுப் போலனு, வயசைக் கேட்டா மட்டும் கோடம்பாக்கத்துக்கே உரிய உஷார் வந்திடுது.

தத்துவம் பேசுற சினேகாவோட வயசு என்ன தெரியுமா? பதினெட்டு வயசுல நடிக்க வந்தாங்களாம். அப்படி நடிக்க வந்து மேக்கப் போட ஆரம்பிச்சு அஞ்சு வருஷமாச்சாம். அப்படினா சினேகாவோட வயசு என்னவென்று நீங்களே கணக்குப்போட்டுப் பார்த்திடுங்க.

தனக்கு விருது வாங்கித் தரும்னு நம்பிக்கிட்டிருந்த 'புதுப்பேட்டை' புஸ்ஸானது மட்டுமில்லாம, தமிழ், தெலுங்குன்னு ரெண்டு மாநில இரசிகர்கள் மத்தியிலயும் சினேகாவோட பெயரை ரொம்பவே டேமேஜ் பண்ணியிருக்கு. டேமேஜை பெண்ட் எடுத்து பார்க்கிற நல்ல படமா எதுனாச்சும் அமையுமானு தேடிட்டிருக்கார் சினேகா.

அவர் தத்துவம் பேசுறதுலயும் நியாயம் இருக்கத்தான் செய்யுது!



# அபர்ணாவின் ஆசை

'புதுக்கோட்டை' நாயகி அபர்ணா தற்போது 'நெஞ்சில் ஜில் ஜில்' படத்தில் நடித்து வருகிறார்.

அடுத்து தனது சொந்தப் படக் கம்பெனி மூலம் ஜீவன், ரிச்சர்ட், பிரசன்னா ஆகியோருடன் ஜோடியாக நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை நடக்கிறது.

# எனக்கு பாய்ப்ரெண்ட்ஸ் கிடையாது! - ஸ்ரேயா

ஸ்ரேயாவின் க்ராப் தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கிறது. 'சிவாஜி' ரிலீஸானால், ஸ்ரேயாவின் மார்க்கெட் ராக்கெட் ஏறி பறக்கும் என்பதில் பலருக்குப் பொறாமை. அதனால்தானோ தெரியவில்லை, ஸ்ரேயா பற்றி ஏகப்பட்ட வதந்திகள்.

அதில் முதன்மையானது மும்பையில் உள்ள தனது பாய் ப்ரெண்டுடன் சுற்றுகிறார் ஸ்ரேயா! என்ற வதந்தி.

இது உண்மையா?

இந்த ஒரேயொரு கேள்விக்கே எண்ணெயில் போட்ட கடுகாக நம்மைத் தாளித்து விட்டார் ஸ்ரேயா.

"என் மீது பொறாமை கொண்ட யாரோதான் இப்படியெல்லாம் கிளப்பி விடறாங்க. நான் எப்போதும் பாய் ப்ரெண்டோட சுத்துறதா பொய் சொல்றாங்க. எனக்கு பாய் ப்ரெண்ட்ஸே கிடையாது" என்று முகத்தை வலித்துக் கொள்கிறவரை சங்கடப்படுத்தும் இன்னொரு கேள்வி.

மாமனாருடன் நடித்துக் கொண்டே மருமகனுடன் டூயட் பாடுகிறீர்களே?

"இரண்டு பேருமே நல்ல நடிகர்கள். நல்ல கதையம்சமுள்ள படங்கள். ஸ்ரேயான்னா ஒரே மாதிரிதான் நடிப்பாங்கிற இமேஜ் எனக்கில்லைங்கிறத்துக்கு இந்த இரண்டு படங்களும் சிறந்த உதாரணம். 'சிவாஜி', 'திருவிளையாடல்'னு இந்த இரண்டு படங்கள்ல நடிக்கிறதை பெருமையா நினைக்கிறேன்."

சொல்லிவிட்டு நம்மைப் பார்த்த பார்வை அவ்வளவு பெருமைக்குரியதாக இல்லையென்பதால், விடு ஜூட்!



மதுமிதா



நயன்தாரா

சி னி

# ரஜினி விருப்பம்

சந்திரமுகியின் 500ஆவது நாளைக் கொண்டாட தயாரிப்புத் தரப்பினர் விரும்பினர்.

ரஜினி 'சிவாஜி' படப்பிடிப்பில் பிசியாக இருப்பதால் விழாவை தள்ளி வைத்துள்ளனர். ஆனாலும் அதே நாளில் ஜப்பானில் சந்திரமுகியை ரிலீஸ் செய்ய ரஜினிக்கு விருப்பம் இருந்தது. இதையடுத்து ஜப்பானில் இப்படம் வெளியிடப் பட்டுள்ளது.

முத்து முதல் சந்திரமுகி வரை ரஜினிப் படங்கள் தொடர்ந்து ஜப்பானிய மொழி பேசி வருவது குறிப்பிடத் தக்கது.





# 50 அழகிகளுடன் அஜித்!

அஜித் நடிக்கும் 'ஆழ்வார்' படத்துக்காக ஒரு பாடலை ஏவி.எம்.மில் செட் போட்டு படமாக்கினர். பெரிய தூண்கள், ஓவியங்கள், சிற்பங்கள் எனப் புராதன காலத்தை நினைவூட்டுவதாக அந்த செட் இருந்தது.

மும்பை மாடல் அழகிகள் 50 பேர் அஜித்துடன் நடனமாடும் காட்சியை இயக்குநர் செல்வா படமாக்கினார். மோகன் நடராஜன் தயாரிக்கிறார்.

# பத்மபிரியாவுக்கு ஆபாச ஈ-மெயில்

இயக்குநர் சேரன் நடித்த 'தவமாய் தவமிருந்து' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு நாயகியாக அறிமுகம் ஆனவர் பத்மபிரியா. அதன்பின் 'பட்டியல்' படத்திலும் நாயகியாக நடித்துப் புகழ் பெற்றார்.

மலையாளத்தில் மம்முட்டியுடன் 'காழ்ச்சா' என்ற படத்திலும், மோகன்லாலுடன் 'வடக்குநாதன்' படத்திலும் நடித்துள்ளார். பத்மபிரியாவுடன் கேரள மாநிலம் கோட்டயம் அருகே உள்ள மன்னார்காட்டில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றும் வினோத் ரசிகர் என்ற முறையில் பழகினார்.

அடிக்கடி போனில் தொடர்பு கொண்டு பேசினார்.

திடீரென வினோத் பத்மபிரியாவின் ஈ-மெயில் முகவரிக்கு ஆபாசத் தகவல்களை அனுப்பினார். இது பத்மபிரியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் பின்னரும். வினோத் தொடர்ந்து ஆபாச ஈ-மெயில் அனுப்பி வந்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த பத்மபிரியா கோட்டயம் பொலிஸ் சூப்பிரண்டு ஸ்ரீஜித்திடம் புகார் செய்தார். லாட்ஜில் தங்கி இருந்த வினோத்தை பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர். தற்போது வினோத் கம்பி எண்ணுகிறார்.

# சிபியின் சின்சியாரிட்டி!

சின்சியாரிட்டி சிகாமணியாகிவிட்டார் சிபிராஜ். நடித்துக் கொண்டிருக்கும் 'லீ' அவருக்கு வேர்ல்ட் கப் பைனல் மாதிரி. ஜெயித்தால்தான் மதிப்பு, மரியாதை



ஷக்தி
தொட்டால் பூ மலரும்

'லீ'யில் கால்பந்தாட்ட வீரராக வருகிறார் சிபி. இதற்காக சென்னை நந்தனத்திலுள்ள வை.எம்.சி.ஏ.மைதானத்தில் பந்தை துரத்திக்கொண்டிருந்தார். அருகிலும் சரி, தொலைவிலும் சரி, சினிமா சம்பந்தப்பட்ட ஆட்களே இல்லை. பிறகுதான் தெரிந்தது, படத்தில் நிஜ புட்பால் ப்ளேயராகத் தெரிய வேண்டும் என்பதற்காகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது.

சிபியின் சின்சியாரிட்டியைப் பார்த்தால் அடுத்த உலகக் கோப்பைக்கு சிபியை இந்திய டீம் கேப்டனாக்கி அனுப்பினால் கிறிஸ்டியானா ரொனால்டோ மாதிரி பல வித்தைகள் காட்டினாலும் காட்டுவார்.

இது ஒருபுறமிருக்க, 'லீ' புட்பால் பற்றிய படமில்லை. புட்பால் பிளேயரைப் பற்றிய படம் என்று விளையாட்டில் புதிய விதியை புகுத்துகிறார் இயக்குநர் பிரபு சாலமன்.

'இந்தியா ஒலிம்பிக்கில் சவலைக் குழந்தையாக இருக்க அரசியல்தான் காரணம். திறமையானவர்களை அரசியல் பின்னுக்குத் தள்ளிவிடுகிறது. லீ படத்தில் இதைத்தான் ஹைலைட் பண்ணியிருக்கேன்'' என கால்பந்தில் காரம் தடவுகிறார் பிரபு சாலமன்.

சேம் சைட் கோலடிக்காதவரை எல்லாம் சரிதான்!



பரத் - கோபிகா
எம்டன் மகன்

# எகிறிய சங்கீதா 'ரேட்!'

உயிரைக் கொடுத்து பல படங்களில் நடித்தும் கூட, கிடைக்காத ஸ்டார் வேல்யூ, உயிர் என்ற ஒரே படத்தின் மூலம் கிடைத்துள்ளது சங்கீதாவுக்கு.

கொழுக்மொழுக் குதிரை போல தமிழ் சினிமாவுக்கு சங்கீதா (அப்போ 'அண்ணி'யின் பெயர் ரசிகா) அறிமுகமானபோது, கிளாமர் டால் போலவே அத்தனை படங்களிலும் வந்து போனார். பாண்டியராஜன், பிரபு தேவா என இரண்டாம் மட்ட ஹீரோக்களுடன் மட்டுமே ஜோடி சேர வாய்ப்புக் கிடைத்தது.

இருந்தாலும் கிடைத்ததை வைத்து குதிரையோட்டி வந்தார் சங்கீதா. அப்படியே அவ்வப்போது தெலுங்குக்கும் விசிட் அடித்து காலத்தைத் தள்ளி வந்தார். திடுதிப்பென ஒரு நாள் மார்க்கெட் போண்டி ஆனது. தேவுடா என்று நிலையை எண்ணி வீட்டோடு முடங்கிக் கிடந்தார்.

சும்மா கிடந்தவரைக் கூப்பிட்டு கஞ்சா அழகியாக்கி 'பிதாமகனி'ல் விக்ரமுக்கு ஜோடி சேர்த்தார் பாலா. அந்தப் படத்தில் சங்கீதாவின் நடிப்பு பேசப்பட்டாலும்கூட, புதிய பட வாய்ப்பு ஏதும் வரவில்லை.

என்னடா இது மதுரைக்கு வந்த சோதனைக் கதையாக விசும்பிக் கொண்டிருந்தவருக்கு புத்துணர்ச்சி அளித்துள்ளது உயிர் படத்தின் வெற்றி.

கொழுந்தனை கொய்யக் காத்திருக்கும் அண்ணி வேடத்தில் சங்கீதா செய்துள்ள அட்டகாச நடிப்பால் பல புதுப் படங்கள் சங்கீதாவைத் தேடி ஓடி வந்து கொண்டிருக்கின்றன.

இதனால் குதூகலமாகியுள்ள சங்கீதா, நல்ல கேரக்டர்களாகப் பார்த்து செலக்ட் செய்ய ஆரம்பித்துள்ளாராம். ஆனால் கண்டிப்பாக உயிர் 'அருந்ததி' போல இன்னொரு படத்தில் நடிக்க மாட்டாராம். அதே சமயம், வித்தியாசமான வில்லியாக நடிக்க அம்மணி ரெடியாம்.

ஆரம்பத்தில் கொடுப்பதைக் கொடுங்கள் என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த சங்கீதா, இப்போது என்னோட ரேட் 20 லட்சம் என்று கூறி, தயாரிப்பாளர்களின் தாவாக்கட்டையை குத்திப் பார்க்கிறாராம்.



தனுஷ்
பரட்டை



மதுமிதா

# 'அத்தை'யை வளைத்த நயன்!

கோலிவுட்டின் அடுத்த ஸ்டார் திருமணம் சிம்பு - நயன்தாரா என்று பேச்சுக் கிளம்பியுள்ளது.

இப்போது அடுத்த கல்யாணம் யாருக்கு என்பது குறித்து புதிய செய்தி கசிய ஆரம்பித்துள்ளது. 'சிலுப்பல்' சிம்புவம், 'கலக்கல்' நயன்தாராவும் அடுத்த ஸ்டார் கல்யாண ஜோடி என்று அடித்துச் சொல்ல ஆரம்பித்துள்ளனர். சிம்பு - நயன்தாரா காதலைப் பொறுத்தவரை நயன்தாரா சைடு ஓ.கே. சொல்லிவிட்டது.

ஆனால் சிம்பு பக்கம் தான் சிக்கலே. 'தாடி' டாடியை ஈசியாகச் சமாளித்து விட்டார் சிம்பு. தம்பி குறளும், தங்கச்சி இலக்கியாவும், நயனை அண்ணி என்றே கூப்பிட்டு வருகிறார்களாம். ஆனால் அம்மா உஷாவைத்தான் அவரால் சமாதானப்படுத்தவே முடியலையாம்.

இதனால்தான் இவர்களது திருமணம் இழுத்துக்கொண்டே போகிறதாம். என்னென்னவோ செய்து பார்த்தும் உஷாம்மா அசையவே மாட்டேன் என்கிறாராம். இதனால் புது ரூட்டில் நூல் விட்டுப் பார்த்தார் சிம்பு.

நயன்தாராவைக் கூப்பிட்ட சிம்பு, என்ன செய்வியோ, ஏது செய்வியோ, அம்மாவை வழிக்குக் கொண்டுவர வேண்டியது உன் பொறுப்பு என்று கூறி விட்டு எஸ்கேப் ஆகிவிட்டார்.


இதை ஏற்ற நயன்தாரா வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உஷாவைச் சந்தித்து நைச்சியமாகப் பேசி அவரது மனதுக்குள் புகும் முயற்சியில் ஈடுபட்டாராம். சமீபத்தில் உஷாவைச் சந்தித்த நயன்தாரா, ஆண்ட்டி, உங்களுக்காக இந்த நெக்லஸை வாங்கி வந்தேன் என்று கூறி ரூ.2 லட்சம் மதிப்புள்ள வைர நெக்லஸை வருங்கால அத்தையின் கையில் திணித்தாராம்.

அதை வாங்கிய உஷா, நெகிழ்ந்து விட்டாராம். என்னே அன்பு என்று டி.ராஜேந்தரிடம் சொல்லிச் சொல்லி பெருமைப்பட்டுப் போனாராம். இதை வைத்துப் பார்த்தால் விரைவிலேயே பச்சைக் கொடி காட்டி விடுவார் என்கிறது சிம்புவுக்கு நெருங்கிய வட்டாரம்.

உஷா - ராஜேந்தர் கெட்டி மேளமே காதலில் ஒலித்தது தானே. மகனுக்கு மட்டும் மறுப்புச் சொல்லி விடுவாரா என்ன!



பத்மப்ரியா



அற்புதத் தீவு




## மனிதனைத் தேடி

அன்றொரு நாள்
அன்னையின் கருவிலேயே
கரைந்து போயிருக்கலாம்
என்று அலுத்துக்கொண்டேன்...

சில பொழுதுகளில்
உலகத்தில் ஒவ்வொரு
வினாடியும் வீணென்றே
நினைத்தேன்...

கடிகார முற்களை
ஒன்றையொன்று தோற்கடிப்பதாய்
மரணத்தின் அடிவாரத்தில்
மானிடம் மிதிபட்டு
போகின்ற போதும்
வாழ்வை வெறுத்துத்தான்
போனேன்...

தாயின் அன்பின்
அரவணைப்பில்
அடங்கிப் போனாலும்
முடங்கிக் கிடக்கும்
மனிதம் கண்டு
கலங்கிப் போகிறேன்...

தேசங்கள் தகர்த்து
துவேஷக்காரர்களால்
துண்டாடப்படுகையில்
கொதிதெழுந்து கொள்ளும்
கல்லறை மனிதன் கூட
என்றெல்லாம் எண்ணினேன்...
எல்லாமிருக்க
மனிதனைத் தேடினேன்
மனிதன் வேஷத்தில்
மிருகம்...!

*–எம்.ஜ.அஸீஸ்,*
*செம்மண்ணோடை.*

## நான் யார்?

நான் பிறந்தேனா...
அப்பாவாம்
அம்மாவாம்
எதுவுமே
எனக்குப் புரியவில்லை - ஆனால்
நான்
இந்த சமுதாயத்தை
புதுப்பிக்க
விரும்புகின்றேன்...
ஓ!
புத்தி ஜீவிகளே
என்னோடு
இணைந்து
கொள்ளுங்கள்
இந்த மானிட
சமுதாயத்தை
மறுபடியும்
சீரமைத்து
சலவை செய்யும் வேலை
உங்களுக்கும்
எனக்கும்
உரித்தாக உள்ளது.
வேலை மெனக்கட்டு
இருக்காமல்
இன்றே வெளிக்கிடுங்கள்
நன்றே
செய்ய வேண்டும்.

*–என்.கலைமதி,*
*பாண்டிருப்பு – 02.*

## சமாதானமே!

இயற்கையில் அசைந்தாடும் பூக்கள்கூட
ஒரு கனம் நின்று எதிர்பார்த்துத் துடிக்கும்
ஒளி விளக்காம் சமாதானமே! ஒலித்தோங்க.

மண்ணை இரு துண்டாக்கி மதிமயங்கிநிற்கும்
மானிடத்தை மண்ணுக்கு மலர்சூடவைக்க
சமாதானமே! ஒலித்தோங்குக.

மண்வாசனை அறியாது சகோதர இரத்தம்
கண்டு
அறிவைக் கொன்று அகங்காரம் பிரசவிக்கும்
மனிதனை மண்ணுக்கே மணவாழ்க்கை சூட
வைக்க
சமாதானமே ஒலித்தோங்குக.

குழந்தை, வயோதிபம் என்று பாராது
கொன்றொழிக்கின்ற யுத்தத்தைக் கண்டும்
நீ மலராமைக்குக் காரணம் என்னவோ!

கொடிகட்டிப் பறக்க வேண்டி பெண் மானம்
இன்று சந்தைப் பொருள் போல கூவிவிற்கும்
நிலைகண்டுமா நீ மலராது இருக்கிறாய்!

குடிக்க நீர் இல்லாவிடினும் ஆறுபோல
பெருக்கெடுத்தோடும் உதிரக் கடலை
நேயம் கொண்ட மனிதக் கரங்களாக மாற்ற
சமாதானமே! தீமை சூழ்ந்த மண்ணை
தீபம் கொண்டு ஏற்ற ஒற்றுமைக் கயிறு
கொண்டு ஒலித்தோங்குக மண்ணில்.

*–அ.ஹ.இம்தியாய்,*
*சிறாஜ் நகர்.*

## இன்றைய உலகம்

துரியோதரனின் துகில்
உரியும் திரௌபதிகள்

இராமனைத் தீ மிதிக்கச்
சொல்லும் சூர்ப்பனைகள்

காபரே ஆட்டங்களில்
கண்ணகியின் சிலம்போசைகள்

வண்டுகளைக் கொடூரமாக
மொய்க்கும் வண்ண மலர்கள்

கண்ணகி சிலைக்கு
மாலை அணிவிப்பது
விலை மாதர்கள்

பணத்தின் முன்
மாமிசம் உண்ணும் மான்கள்
புல்லுண்ணும் புலிகள்

கோயில் பாம்புக்கும்
மது வார்க்கும் பக்திக்
கன்னிகள்

அன்று காற்றுக்கு
பயந்து சிம்மியிட
கெஞ்சிய தீபங்கள்

இன்று தீபங்களுக்கு
அஞ்சி சிம்மியிட வேண்டும்
காற்று

மனிதனைக் காலம் விகாரமாக்கி
மிருகமாக்கியதாலும் மிருகம்
மிருகமாகவே இருப்பதாலும்

இன்றைய உலகம்
மிருகங்களின் உலகம்.

*–அ.ஹஷன் அபூபக்கர்,*
*ஒலுவிலூார்.*

## தேயிலைத் தோட்டத்திலே.....!

தேயிலைத் தோட்டத்திலே - இவர்
உடலும் உள்ளமும் வருந்துதடா
தோட்டத்து மக்கள் மனம் வெந்து, உடல்
சுருங்குகின்றாரே - இவர்

துயர் துடைக்க வழியில்லை, ஒரு
திடமான மருந்தகம் கூட இல்லையே
மந்தைகள் போல - இவர்
ஓடுகின்றனரே அதிகாலையிலே!

மலை நாட்டிலே மழை மட்டுமா
பெய்கிறது இல்லை - இல்லை
உப்பு மழை கூடதான் பெய்கிறது - நான்
வியர்வையைக் கூறுகிறேன்.

எமது முன்னோர்கள் இட்ட கண்ணீர்
தான்
மகாவலி கங்கையாய் ஓடுகின்றதோ?

உள்ளம் குமுறுகிறது - கற்பு
கலைப்புக்களும், கரு கலைப்புக்களும்
மலையகத்தின் மானிடம்
அழிக்கப்படுகின்றது
எங்கள் பெண்களின் கைகள் பதுமைகள்
அல்ல.

வேர்கள் முளைத்திருக்கிறது - இவர்கள்
கையில் - கை வெடிப்பைச் சொன்னேன்
தொழிற்சாலை மட்டுமா
கறைப்படிகின்றது? - இவர்கள்
தொழிலே கறைபடிந்தது தான்!

காலம் பதில் சொல்லும் என்பாரே
காலங்கள் உருண்டோடுகின்றது -
இவர்கள்
வாழ்க்கை கோலங்கள் தான்
உருவாகின்றது.
ஏமாற்றி பிழைப்பார்கள் உயர...உயர... -
இவர்கள்
வாழ்க்கை மட்டும் ஏணியாக
இருக்கின்றது.

அதிகாரமும், ஆட்சியும் மக்கள் பக்கம்
மாறும்போது தான்...!
மாறுபடும் மலையகம்...

*–ஆறுமுகம் சந்திரமோகன்,*
*புசல்லாவ.*

## கேள்விக் குறிகள்...?

எறியப்பட்ட
முட்களைப் போல்
எங்கும் பரவியது
மூதூர் மக்களின் அவலநிலை!

இரத்தக் கறையுடனும்,
ஓடும்போது ஒழுகிய
குருதித் துளியும்
ஷெல் விழுந்து சிதறியல்லவா?
தந்தது!

இவர்களுக்கு,
குழந்தைகள் என்ன
குழப்பம் பண்ணினர்?
கன்னியர் என்ன
பாவம் செய்தனர்?
பெற்றோரை இழந்து,
அநாதைகள் மலிந்தது,
எதனால்?
விதவைகள் அதிகரித்தது எதனால்...?

மூதூர் பிரதேசமே...!
உன்னில் இன்று,
பிணவாடை அதிகமாகி
சமாதானம்,
கேள்விக் குறியானதே!

*–எம்.ஐ.எஸ்.மர்ழியா,*
*காத்தான்குடி – 03.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான இராஜ. தியாகராஜன், ஜெசிலா ரியாஸ் மற்றும் அப்துல் ரகுமான் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

## காலமிதைத் தவறவிட்டால்...

தமிழ் வணக்கம் (இன்னிசை வெண்பா)
வகையாய்ப் பலரும் வளமை யெனவே
மிகையாய் அயலார் மொழியினைப்
பேசும்
இகழ்ச்சி யறவே இனிமைத் தமிழும்
செகத்தி லொளிகர்ச் சிறந்து
அவை வணக்கம் (இன்னிசை வெண்பா)

அழகாய் அமீரக ஆண்டு மலரில்
தழலென வீசித் தரணியின் கேட்டை
எழிலாம் தமிழால் எரித்திடவே வந்த
வழுவிலாப் பாவலர்க்கு வாழ்த்து
காலமிதைத் தவறவிட்டால்...(கட்டளைக்
கலித்துறை)

அந்நாள் தமிழின மேன்மை யுலகி
லெடுத்துரைக்க
பண்ணார் மரபிலே போற்றுங் கவிபுனை
பெண்கவிகள்
விண்ணி லொளிவீசு விண்மீனாய்
மின்னிட வீற்றிருந்தார்
இந்நாள் கவியுலகி லெங்கே மகளிர்;
எழுந்தவினா!

காலந் தவறிற்றோ அன்றி தவறிய
கேள்வியிதோ;
ஞாலந் தவறிற்றோ; துள்ளிடும்
கேள்விகள் நெஞ்சகத்தில்
கோல நிலவிலே பாயு மெழில் நீர்
கரையதனில்
நீளெழுந் திட்ட நெடுமரத் தின் கீழ்
நின்றவளை;

உன்னிநான் உள்ள முகிழ்ந்த
வினாக்கள் எடுத்துரைக்க;
கன்னியவள் கோவை மிதழால் தந்திட்ட
கூற்றிதுவே!
"பெண்மை விலைபேசும் வீணர்
திருந்தும் வரையினிலே,
உண்மையாய் பெண்களுரிமை யடையும்
வரையினிலே,

கட்டுக் கவியுஞ் செதுக்குஞ் சிலையும்
எமக்கெதற்கு?
எட்டி யடைய வழியோ நெடிதான
தாகையினால்
தட்டுந் தருணத்தை வீணாய் மகளிர்
தவறவிட்டால்
எட்டாமல் போய்விடும் இன்றெம்
வளமான ஏற்றமதே!"
பாவியம், காவியந் தேவைதான்
என்றாலும்; பூநிலத்தில்
பாவை யுரைத்த தெனதுள்ளே
வேலெனப் பாய்ந்திடவே
பூவையர் சமூகத் தாழ்நிலை கண்டுநாம்
பொங்கியெழ
பாவலர் முன்ன ரிதனைப் கவியெனப்
பாடினனே!

*–இராஜ.தியாகராஜன்.*

## விபத்து

முருங்க இலை பறிக்க மரமேறி
முழங்கால் சிராய்த்தும் அழாமல்
ஒட்டிய மண்ணைத் தட்டி விட்டவனை
பத்றியடித்து தடவிக் கொடுத்த
பல்லில்லா பாட்டி நினைவில்
நிற்கவில்லை

கோலி உருட்டி விளையாடி
எறும்பினால் கடிப்பட்டதால் அதை
மிதிக்க
பாவம் என்று பரிதாபப்பட்டு
விஷடிக்கடியாய் பாவித்து வலிபோக்கிய
வழிப்போக்கன் மனதில் நிலைக்கவில்லை

காய்ச்சலில் சுருண்டதும்
கோவில் வேண்டுதல்களும்
பக்கத்து வீட்டு பாத்திமா அக்கா
பாத்திஹ ஓதித் தந்த தண்ணீரும்
பெரிய விஷயமாகப்பட வில்லை

பழுத்த முகத்தோடு
பார்ப்பார் முகம் சுளிக்கும் அம்மையேறி
முகம் தெரியாத நபர்களெல்லாம்
விசாரித்து பக்குவம் சொல்லியது
எப்போதும் என் நெஞ்சை
தொட்டதில்லை

பெருநகர நெரிசலில்
இரு சக்கர வண்டி ஓட்டிச் சென்றவனை
பல்லவன் தட்டிச் செல்ல
ஓரமாகக் குருதி வலிய
உயிர் ஊசலாடக் கிடப்பவனைக்
கேட்பாரில்லை

உச்சுக்கொட்டி விட்டு ஒதுங்கி நின்று
பார்க்கக்கூட
நேரமில்லாமல் விரைந்து செல்லும்
நகர மனிதர்களுக்கு
மனித நேயம் மரத்துப் போய்விட்டதா
மறந்து போய்விட்டதா?

*–ஜெசிலா ரியாஸ்*

## ஆன்மாவின் விபசாரம்

உலகுக் கெல்லாம்
ஒருவனே தலைவன்
தலைவணக்கம் அந்தத்
தலைவனுக்கேயென
அறவுரை கூறிய
ஆன்றோர் களையே
அவதாரம் என்பதும்
அவரடி வீழ்வதும்
தலைவனை ஆகமும்
தற்குத் தனமே

அரும்பிய துருவமீன்
அதனை நோக்கியே
திரும்ப வேண்டிய
திசைகாட் டியின் முள்
மின்மினிக் கெல்லாம்
மேனி திருப்பினால்
கப்பல் எப்படிக்
கரைபோய்ச் சேரும்?


தலைவன் ஒருவனைத்
தலையால் வணங்குவதே
தலைகற் பாகும்
தலைவனை அன்றி
மற்ற வற்றை
மகேசன் என்றே
தொழுவது கொடிய
தொழுநோய் ஆகும்
மேலும் அது
ஆன்மா செய்யும்
விபசாரம் ஆகும்.

*–அப்துல் ரகுமான்.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் :எம். எஸ். ஹில்மி
வயது : –
முகவரி : 176. முகாந்திரம் வீதி,
ஏறாவூர் – 06
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : கஜேந்திரன் தினேஸ்பாபு
வயது : 17
முகவரி : உமாமில் வீதி, கொம்மாந்துறை
செங்கலடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல், கிரிகெட்.


# காலணிகள் வாங்கும் முன்


**நாம்** உடைகளைத் தேர்ந்தெடுப்பதில் செலுத்தும் கவனத்தை, செருப்பைத் தேர்ந்தெடுப்பதில் காட்டுவதில்லை. காலத்துக்கேற்ற உடைகள் மாதிரி காலணிகளும் உள்ளன.


செருப்பு வாங்குவதற்கு முன் நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உள்ளன.

மற்றவர்களின் காலணியைப் பார்த்து அது போல வாங்காதீர்கள்.

உங்கள் பாத அமைப்புக்கு ஏற்ப வாங்கவும். தட்டையான பாதம் உள்ளவர்களுக்கு எல்லாவிதமான செருப்பும் எடுப்பாக இருக்கும். அதே நேரம் அகலமான பாதங்களை உடைய வருக்கு, மிகப் பெரிதாக பெருவிரல் எலும்பு உள்ளவர்களுக்கு மூடிய







காலணிகள் நல்லது. சிலருக்கு தோல் காலணிகளால் அலர்ஜி ஏற்படும். அவர்கள் ஜோத்பூரி அல்லது கோலாபூரி செருப்புகள் அணியலாம்.

செருப்புகளின் எடை அதிகமாக இருக்கக் கூடாது.

தரமான செருப்புகளையே அணியுங்கள்.

வீடு மற்றும் வெளியே அணிந்து செல்லும் காலணிகளைத் தனித்தனியே வைக்கவும்.

அதிக நேரம் காத்திருக்க வேண்டிய இடத்துக்குப் போகும் போது அதிக உயரம் இல்லாத செருப்பை அணியவும்.

இதே போல இண்டர்வியூக்குச் செல்லும் போது ஸ்ட்ராப் உள்ள செருப்புகளையே அணியவும்.

குளிர் காலத்தில் பாதத்தை ஒட்டியபடி இருக்கும் செருப்புகளையும், மழைக் காலத்தில் பிளாஸ்டிக் செருப்புகளை யும் அணியவும். கோடைக் காலத்தில் காற்றோட்டமான செருப்பு அணியவும்.

வயதானவர்களுக்கு மென்மையான செருப்புகளை வாங்கிக் கொடுங்கள்.

ஃபேஷன் என்ற பெயரில் பார்க்கும் காலணிகளையெல்லாம் வாங்க வேண்டாம். வாங்கும் செருப்பு எல்லா உடைக்கும் ஏற்ற மாதிரி இருக்க வேண்டும்.

மழைக் காலத்தில் செருப்பை வெளியில் உலர வைத்து பின்பு, பிளாஸ்டிக் கவரில் அல்லது பிளாஸ்டிக் தாளில் மூடி ஈரப்பதம் இல்லாத இடத்தில் வைக்கவும்.

செருப்புகளை வாங்கினால் மட்டும் போதாது, அதை நெடு நாள் வரை பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

தோல் மற்றும் துணி வகைகளில் ஆன செருப்புகள் நீண்ட நாள் உழைக்காது.

தோலில் ஆன செருப்புகள் மற்றும் சேண்டல் வகை செருப்புகளுக்கு அடிக்கடி பாலிஷ் போடவும். இதனால் இதன் அழகு கூடுவதோடு அதன் ஆயுளும் கூடுகிறது.

காலணிகளை அடுக்கி வைக்க கடை வீதியில் வித விதமான ஷூ ரேக் மற்றும் ஷூ பைகள் கிடைக்கின்றன.

பட்டு, வெல்வெட்டு போன்ற செருப்புகளை பழைய பருத்தித் துணியால் சுற்றி வைக்கலாம். நாடா உள்ள, சரிகை மற்றும் கண்ணாடி வைத்த செருப்புகளையும் இப்படி வைக்கலாம்.

வாங்கிய செருப்புகளை அதிக நாள் பயன்படுத்தாமல் வைக்காதீர். இற்றுப் போகும். அடிக்கடி பயன்படுத்தவும். இதனால் தான் அதிக விலை கொடுத்து செருப்புகளை வாங்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.


## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

39

பெயர் : ..................

முகவரி : ..................

..................

..................

தே.அ. அட்டை இல : ..................

கையொப்பம் : ..................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
19.09.2006

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -39**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 37
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

ராணி அரசரத்தினம்
தபால் கந்தோர் வீதி, மன்னார்

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




# லேடிஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

### நெல்லிக்காய் துவையல்

***தேவையான பொருட்கள் :-***

நெல்லிக்காய் - 1 கிலோ
கடுகு - 3 தேக்கரண்டி
வெந்தயம் - 1 தேக்கரண்டி
பெருங்காயம் - 1 தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - சிறிதளவு
எலுமிச்சம் பழச்சாறு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - தேக்கரண்டி
எண்ணெய் - 1 மேசைக்கரண்டி
உப்பு - சிறிதளவு.

***செய்முறை :-***

நெல்லிக்காயை ஆவியில் 10 நிமிடங்கள் வேக வையுங்கள். பிறகு அவற்றை எடுத்து ஆறவிட்டு, லேசாக அழுத்தினால் துண்டுகளாகப் பிரிந்து கொட்டை வெளியே வந்து விடும். வறுத்துப் பொடிக்கக் கொடுத்துள்ள பொருட்களை வெறும் கடாயில் வறுத்து, நன்றாகப் பொடிக்க வேண்டும். எண்ணெயை காயவைத்து, கடுகு தாளித்து, நெல்லிக்காய் துண்டுகளைச் சேருங்கள்.

அத்துடன் மஞ்சள் தூள், உப்பு சேர்த்து 5 நிமிடங்கள் வதக்க வேண்டும். பிறகு மிளகாய்த்தூள், வறுத்துப் பொடித்த தூள், எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து, 5 நிமிடங்கள் நன்றாகக் கிளறி இறக்க வேண்டும்.

## திரைச் சீலைகள் போடுவது வீட்டிற்கு அழகே!

**வீடு** சிறியதோ, பழசோ, ஜன்னல் புதியதோ, பழசோ, சிறியதோ எப்படியிருந்தாலும் எல்லாவற்றையும் அழகாக்கி விடலாம். ஒரு இடத்தின் அழகை முழுதாகப் பிரதிபலிப்பதில் கோர்ட்டனுக்கு முக்கிய பங்கு உண்டு.



ஒரு சரியான விண்டோ ட்ரீட்மென்ட் ஒரு இடத்தின் அமைப்பையே மாற்றிக் காட்டும். ஒரு கோர்ட்டின் டிசைன் மற்றும் பிளேஸ்மென்ட் என்று சொல்லக்கூடிய சரியான அமைப்பு இருந்தால் சிறிய ஜன்னல் உயரமாகவும், குறுகலாக இருப்பதை அகலமாகவும் காட்டலாம். ஒரே மாதிரி துணியில் கோர்ட்டின் போட்டு பர்னிச்சர்களும் அதே நிறத்தில் போட்டால் கிட்டத்தட்ட டிசைன் எலிமெண்ட் போல் இருக்கும்.


டிசைன் வெவ்வேறு மாதிரி இருந்து, கலர் காம்பினேஷன் ஒன்று போல் இருந்தால், ஒரே மாதிரி கலர் அழகினை வெளிப்படுத்தும்.

ஜன்னல் டெகரேஷன் பல விதங்களில் செய்யலாம். கிளாஸ், துணி திரைச்சீலை, அழகிய மணிகள், பிளண்ட்ஸ் போன்றவை. துணியில் கோர்ட்டின் போட்டு அலங்கரிக்க வேண்டுமானால், சில்க் தவிர, கொட்டன் மற்றும் டெரிகாட், சட்டின் போன்றவை போடலாம். கோர்ட்டின் டிராக் மூலம் தொங்கவிடுகிறோம். பெல்மெட் மூலமும் தான்.

கோர்ட்டின் சுருக்கங்கள் நிறைய வைத்தால் பார்க்க அழகாக இருக்கும். சிங்கிள் பிளிட்ஸ், டபுள் பிளிட்ஸ், பிரஞ்ச் ஷெட்ஸ் போன்றவை பொதுவானவையாகும். இப்பொழுது நிறையப் பேர் வினிஷியன் பிளைண்ட்ஸ் விரும்புகின்றனர். ஏனெனில், இது மரத்தட்டுக்கள் போன்று மெல்லிய தகடுகளாகக் காணப்படும் . மெட்டல், பிளாஸ்டிக் இவற்றிலும் கிடைக்கும். வேண்டிய நிறங்களில் போட்டுக் கொள்ளலாம். இதில் உயர்வாக்கில் இருப்பது வெர்ட்டிகள் பிளைண்டஸ் எனப்படும். இந்த வெர்ட்டிகள் போடும் பொழுது குட்டையான ஜன்னல் உயரமாகவும், சீலிங் உயரம் போலவும் தோன்றும். அகலம் குறைவாக உள்ள ஜன்னலில் வினிஷியன் பிளைண்ட்ஸ் போடும் பொழுது ஜன்னல் அகலமாகத் தெரியும். ரூம் முழுக்க அழகாகத் தெரியும்.

பழைய வீடாக இருந்தால் கூட, இதுபோல் சில யுக்திகளைப் பயன்படுத்தி நம் வீட்டை அழகாக்கி விடலாம்.

இந்த வினிஷியன் பிளைண்ட்ஸ் போடுவதால் நமக்கு வேறு சில நன்மைகளும் கிடைக்கின்றன. இதில் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வசதியான சிஸ்டம் உள்ளது. பழைய ஜன்னல்



வெளிக்குத் தெரியாமல் மூடி விடுகிறோம். துணி கோர்ட்டின் போல் ஒதுக்கி விடாமல், அதன் வழியிலேயே அட்ஜஸ்ட் பண்ணலாம். பறந்து விழாமல் இருக்கும். இது வீடு, ஆபீஸ் ரூமிற்கு மற்றும் ஏசி ரூமிற்கு உகந்ததாகும்.




**தேகா** ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிப் போவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டான். பெர்னாண்டசும்தான். சிறையிலிருந்து தப்ப முடியுமென்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். ஆனால் ஆஸ்பத்திரியிலிருந்து படகில் தப்பிவிடும் என் திட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை.



குறிப்பிட்ட தினத்தில் ஜீஸஸைச் சந்தித்தேன். சிறைக்கெடு முடிந்துவிட்ட பழைய கைதி அவன். காய்ந்த கருவாடு மாதிரி இருந்தான். வெயிலினால் கருகிய முகத்தில் இரண்டு கோரமான தழும்புகள். அவன் நம்மைப் பார்க்கும்போது ஒரு கண்ணிலிருந்து கண்ணீர் வந்து கொண்டேயிருக்கும். மோசக்காரனுடைய முகம். மோசக்காரனின் கண். எனக்கு அவனிடம் அதிக நம்பிக்கை ஏற்படவில்லை. நான் நினைத்தது மிகவும் சரி என்று போகப் போகத் தெரிய வந்தது.

அவசர அவசரமாக நாங்கள் பேசிக் கொண்டோம். "உனக்காக ஒரு படகு ஏற்பாடு செய்து தருகிறேன். நாலு பேர் பிடிக்கும். கொஞ்சம் நெருக்கினால் ஐந்து பேர் கூடக் கொள்ளும். ஒரு பீப்பாய் தண்ணீர், உணவுப் பொருள்கள், காப்பி, புகையிலை, மூன்று துடுப்புக்கள், நாலு கோணிகள் பாய்மரம் கட்டித் தைத்துக் கொள்வதற்காக ஊசி, ஒரு திசைகாட்டும் காம்பஸ், ஒரு கோடாரி, ஒரு கத்தி, ஐந்து புட்டி உள்ளூர்ச் சாராயம் - இவ்வளவுக்குமாகச் சேர்த்து மொத்தம் 2500 பிராங்க்குகள் தரவேண்டும். அமாவாசைக்கு மூன்று நாள் இருக்கிறது. நீ சம்மதம் என்று சொன்னால் நாலு நாளில் நான் படகுடன் தயாராகி விடுவேன். ஒரு வார காலம் தினம் இராத்திரி பதினொரு மணியிலிருந்து மூன்று மணிவரை ஆற்றங்கரையில் படகுடன் காத்துக் கொண்டிருப்பேன். மூன்று மணிக்கு மேல் காத்திருக்கமாட்டேன். ஆஸ்பத்திரிச் சுவருக்குக் கீழ்க் கோடியில் படகு இருக்கும்."

நான் அவனை நம்பவில்லை. இருந்தாலும் சரி என்று சம்மதித்தேன்.

"பணம்?" என்றான் ஜீஸஸ்.

"ஸீரா மூலம் கொடுத்தனுப்புகிறேன்," என்றேன்.

மூன்று மணிக்கு அட்டென்டெண்ட் வசம் ஸீராவுக்குப் பணம் கொடுத்தனுப்பினேன். இரண்டாயிரத்தைந்நூறு பிராங்க்குகள்! கால்கானி புண்ணியத்தில் இவ்வளவு தொகையைப் பணயம் வைக்க முடிந்திருக்கிறது. திட்டம் நிறைவேறுமா?" அவ்வளவு பணத்தையும் இவன் சாராயத்தில் ஒழிக்காமலிருக்கக் கடவுள்தான் அருளவேண்டும்" என்று நினைத்துக் கொண்டேன்.

என் புதுத் தோழனான ஜோன்ஸ் அளவுக்கு மீறி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான். தன்னிடத்திலும், என்னிடத்திலும், திட்டத்திலும் அவனுக்கு அசையாத நம்பிக்கை. ஒரே ஒரு கவலைதான் அவனுக்கு - அரபுக்காரன் தவறாமல் ரோந்து வருகிறானென்றாலும், ஒவ்வொரு முறையும் வார்டுக்குள் வருவது கிடையாது. அப்படியே வந்தாலும் சீக்கிரமாகவே வந்துவிட்டுத் திரும்பிவிடுவான். அவன் நள்ளிரவில் வந்தால்தான் எங்களுக்கு நல்லது. இன்னொன்று: படகிலே மூன்றாவது ஆளுக்கு யாரைப் பிடிப்பது? பியாகி என்ற கார்ஸிகாக்காரன் இருந்தான். 1929 ஆம் வருடம் முதல் இந்தக் கடல் கடந்த சிறையில் இருந்து வந்தான். சமீபத்தில் ஓர் ஆளைக் கொலை

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

செய்துவிட்டானென்று இந்த ஆஸ்பத்திரி வார்டில் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். தப்பியோடி கொலம்பியா நாட்டை அடைந்து விடுவதென்று எங்கள் திட்டம்.

மூன்றாவதாக, யாரைச் சேர்த்துக்கொள்வது என்பது பற்றி நானும், ஜோன்ஸும் ஆலோசனை செய்துகொண்டிருந்த போது -

பதினெட்டு வயதுப் பையனொருவன் எங்களை நோக்கி வந்தான். அழகான பையன். அசல் பெண்ணைப் போல இருந்தான்.

மாசுரெட் என்பது அவன் பெயர். ஒரு டாக்ஸி டிரைவரைக் கொலை செய்ததற்காக மரண தண்டனை பெற்றவன். ஆனால் பதினேழு வயதுதான் ஆகியிருந்ததால், மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து இங்கே அனுப்பியிருந்தார்கள். டாக்ஸி டிரைவரைக் கொலை செய்ததாக இவனும், இன்னொரு பதினாறு வயதுப் பையனும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்கள். கூண்டிலே நிறுத்தப்பட்ட போது, ஒவ்வொருவனும் மற்றவன்தான் கொலையைச் செய்தவன் என்று பழி போடவில்லை. மாறாக, நான்தான் கொலை செய்ததாக ஒவ்வொருவனும் சொன்னான்! ஆனால் டாக்ஸி டிரைவரின் உடம்பில் ஒரே ஒரு தோட்டாதான் இருந்தது. வழக்கின்போது இப்படி இவர்கள் நடந்து கொண்ட விதத்தினால் எல்லாக் கைதிகளுக்கும் இவர்களிடம் தனி மதிப்பு.

மாசுரெட் பார்வைக்கு மட்டும் இளம் பெண்ணைப் போல இல்லை. குரலும் பெண் குரல்தான். வத்திப்பெட்டி இருக்கிறதா என்று எங்களிடம் வந்து கேட்டான். கொடுத்தோம். அத்துடன் மட்டுமன்றி, நான் அவனுக்கு நாலு சிகரெட்டுகளும், ஒரு வத்திப்பெட்டியும் பரிசாகக் கொடுத்தேன். அவன் எங்களை நாணத்துடன் நோக்கி, ஒரு மயக்குப் புன்னகையை வீசிவிட்டுச் சென்றான்.

உடனே ஜோன்ஸ், "பட்டு! பிழைத்தோம் நாம்! அந்த அரபுக் காவல்காரன் இனிமேல் எவ்வளவு தடவை வேண்டுமானாலும் இங்கே வருவான். அவன் எப்போது இங்கே வரவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அப்போது வருவான். நிச்சயம்!" என்றான்.

"எப்படிச் சொல்கிறாய்?"

"ரொம்பச் சுலபம். இந்தப் பையன் மாசுரெட் இருக்கிறானே அவனிடம் சொல்லி வைப்போம் - அரபுக்காரனுக்கு வலை விரிக்கும்படி. அரபுக்களுக்குப் பையன்கள் என்றால் மோகம். எல்லாருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே! அந்த அரபுக்காரனை மட்டும் இந்தப் பையன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டால், இராத்திரியில் இங்கே வரவழைக்கக் கஷ்டமே இராது. இந்தப் பையன் ரொம்ப வெட்கப்படுகிறவன் மாதிரி நடிக்க வேண்டும். யாராவது பார்த்துவிடுவார்கள் என்று பயப்படுவதாகச் செல்ல வேண்டும். பிறகு நமக்கு எப்போது வசதியோ அந்த நேரத்தில் வரும்படி சொல்லவேண்டும்."

"சரி, நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று சொல்லி விட்டு, மாசுரெட்டிடம் சென்றேன். என்னைப் பார்த்ததும் ஒரு வெற்றிப் புன்னகை பூத்தான் அவன். என்னைக் கவர்ந்துவிட்டதாக நினைத்தான் போலிருக்கிறது. நான் சுற்றி வளைக்காமல், "நீ நினைத்திருப்பது தப்பு. லெட்ரீனுக்கு வா, சொல்கிறேன்" என்றேன். வந்தான்.

"நான் இப்போது சொல்லப் போவதை நீ யாரிடமாவது சொன்னாயோ, உன்னைக் கொலை செய்து விடுவேன். கேள், பணம் தருகிறேன். நீ வந்து இன்னின்ன வேலையை இன்னின்னபடி செய்வாயா? எவ்வளவு வேண்டும்? பணமாக வேண்டுமா, அல்லது எங்களுடன் தப்பி வருகிறாயா?" என்றேன்.

"உங்களுடன் வருகிறேன்" என்றான்.

"ஓகே," கை குலுக்கிக் கொண்டோம். அவன் சென்றான். நானும் ஜோன்ஸிடம் சிறிது பேசிக் கொண்டிருந்த பின் தூங்கச் சென்றேன். அன்று இரவு எட்டு மணி இருக்கும். மாசுரெட் ஜன்னலருகே போய் உட்கார்ந்து கொண்டான். அரபுக்காரனை அவன் கூப்பிடத் தேவையிருக்கவில்லை. அவன் தானாகவே வந்து விட்டான். இருவரும் எப்போது சந்திக்கலாம் என்பதைப் பற்றிக் கிசுகிசுவென்று பேசிக் கொண்டார்கள்.

மறுநாள் இரவு பதினொரு மணிக்கு வரும்படி - நாங்கள் சொல்லியிருந்த பிரகாரம் - அரபுக்காரனிடம் மாசுரெட் சொல்லிவிட்டான்.


குறிப்பிட்ட நேரமும் வந்தது? அரபுக்காரன் உள்ளே வந்தான். அந்தப் பையனின் கட்டிலை நெருங்கி, அவன் காலை இழுத்து எழுப்பினான். பிறகு இருவருமாய் லெட்ரினுக்குச் சென்றார்கள். கால் மணி கழித்து வந்தார்கள். அரபு திரும்பிச் சென்றான். மாசுரெட் எங்களிடம் ஏதும் பேசாமல் படுத்துக் கொண்டான்.

அடுத்த நாளும் இதே போல்தான். ஆனால் பன்னிரெண்டு மணிக்கு வரச் சொன்னோம். வந்தான். இனி, அந்தப் பையன் எப்போது வரச் சொல்கிறானோ அந்த நேரத்துக்கு அரபுக்காரன் வருவது நிச்சயம் என்றாகிவிட்டது.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இன்று** இப்பெண்களின் அவலமான நிலைமை எப்படிப்பட்டதென்று அவர்களுக்கு மட்டுமே கண்கூடு ஆகும். தொழிலில் மட்டுமல்ல, குடும்பத்திலும் கொத்தடிமைகள் போல மலையகப் பெண்கள் நடத்தப்படுகின்றனர். பெண் என்பவள் "அனிச்சம்" பூவைப்போன்று மென்மையானவள். முரட்டு சுபாவமற்ற இரக்க குணமுடையவள். வாழ்க்கையில் எல்லா நிலைமைகளிலுமுள்ள சுமைகளையும் தானாக தனியாகத் தாங்குபவள். அதற்காகவே தன்னை அர்ப்பணிக்கும் பொறுமை உள்ளம் படைத்தவள் என்பதைப் போன்ற பல நற்குணங்களை உடையவளாக வாழ்வதால், ஆரணங்குகளை ஆதிக்கச் சின்னமாக ஆண்கள் கருதுகின்றனர். இதுவே இவர்களது பலவீனம் எனக் காட்டி அடிப்



படை உரிமைகள் பறிக்கப்படுகிறது. இன்று இவர்களின் வாழ்க்கை வட்டமானது வெள்ளத்தோடு இழுபட்டுப் போகும் ஆண் ஆதிக்கத்தால் கட்டப்பட்டு கலை, கலாசாரம், கருத்தியல், சித்தாந்தம், சம்பிரதாயம் போன்ற கட்டுக்கோப்புக்குள் அமிழ்த்தி, பலியிடும் வெள்ளாடு போல நசுக்கப் படுகிறார்கள். இவ்வாறு இன்று தொழிலாள சமுதாயத்தில் வாழும் பெண்கள் அடிப்படை மனித உரிமைகளை இழந்து அடையாளம் காணமுடியாத அளவில் அடக்கு முறையினால் நிலைகுலைந்து அடிமையைப்போல வாழ்கின்றனர்.

இவர்களின் இந் நிலைக்கான அடிப்படைக் காரணம்தான் என்ன? இவர்களது அறியாமையோ அல்லது அமைப்பு முறையோ என்று மேலோட்டமாகக் கூற முடியாது. அதற்கு மாறாக பிழையான சமுதாய கட்டமைப்பும், ஆண் ஆதிக்க கருத்தியல் கோட்பாடும், அரசியலோடு இணைந்த பலம் படைத்தவர்களாக அல்லது பணம் படைத்தவர்களாக மாற வேண்டும் என்ற மமதை எண்ணம் கொண்டவர்களின் திருவிளையாடல்களும் இடைக் காலத்தில் அறியாமை வயப்பட்ட தலைவர்களின் மூலமாக வந்த பெண்களைக் குறித்த கேவலமான கருத்துக்களும், இதற்குரிய காரணங்கள் ஆகும். இதற்கு வரலாறு உறுதியாகச் சான்று பகர்கின்றது. இப் பெண்களின் சூழ்நிலை. ஆவலால் தேடப்பட்டதாக அல்லாமல் அவள் அதற்குள்ளே பிறந்து வளர்வதனால், இதுவே தனக்கு பாதுகாப்பையும் வசிப்பிடத்தையும் தருகின்றது என்ற ஒரு கோட்பாட்டுக்குள் அவள் தள்ளப்பட்டிருக்கும்போது, அவளால் என்ன செய்ய முடியும் என்பது கேள்விக் குறி. இவ்வுள்ளார்ந்த மறை பொருளிலிருந்து தேயிலைத் தோட்டப் பெண்களுக்கு விடுதலை கிடைக்க முடியுமா? என்ற பரந்த கேள்விக்கு இந்த ஆய்வுக் கட்டுரை ஒரு சில விடைகளை மாத்திரம் வெளிக் கொண்டு வருகிறது.

*முதலாவது அத்தியாயத்தில், தேயிலைத் தோட்டப் பெண்கள் எவ்விதம் கொண்டுவரப்பட்டனர். தென் இந்தியாவில் காணப்பட்ட அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியில் எப்படியாகக் குறைந்த பட்ச அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டார்கள் என்பதனை விரிவான கருத்துக்களுடன் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் குறிப்பிடப்படுகின்றது.

* இரண்டாவது அத்தியாயத்தில் "தொழிலாளர்களான பெண்களின் பௌதிக வாழ்க்கைத் தரப்பண்புகள் இன்று எப்படியாக காணப்படுகின்றது" என்பதனை பல நூல்களின் மூலமாகவும் கிடைத்த பெருமூச்சுக்கள் நிறைந்த சோகவாழ்க்கையை சித்தரிக்கின்றது.

*மூன்றாவது அத்தியாயத்தில், முதலிரு அத்தியாயங்களில் மேற்கொண்ட ஆய்வின் பின்னணியைக் கொண்டு இன்றைய அரசியல், பொருளாதார, சமய கலாசார சூழலில் வாழும் அண்ணளவான அறுநூறாயிர தேயிலைத் தோட்டப் பெண்களின விடியலுக்கு விவிலியத்தின் மூலம் விமோசனத்திற்கான விடை என்ன? என்பதற்கு, பெண் இறையியல் பெண் விடுதலை இறையியல் என்பவைகளின் உதவியோடும் பெண் உரிமை, பெண் விமோசன விடுதலை இயக்கங்கள், நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட கருத்துக்களைக் கொண்டு, தேயிலைத் தோட்டப் பெண்களின் இறையியல் என்னவாக அமைகிறது! என்பதனை எடுத் துக்காட்ட முனைகிறது. இன்று கிறிஸ்தவ மதமும் திருச்சபையும் அதனை சார்ந்தவர்களும், சார்பற்ற பல்லின மொழிக்குட்பட்டவர்களும், இப்பெண்களுக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பொறுப்புகள் தொடுக்க வேண்டிய சவால்கள் இவ்வத்தியாயத்தில் கூறுகின்றது.

* நாடு நலம் பெறவும்: நாட்டின் வருமானம் அதிகரித்து நாட்டு மக்கள் இன்பம் பெறவும், கொடும் வெயிலையும், கடும் மழையையும் பாராது நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் தேயிலைத் தோட்டப் பெண்ணை "பெண்ணாக வாழ விடுங்கள்" என்று கூக்குரலிடும் அவல நிலையினை இம் மூன்று அத்தியாயங்களும் விளக்குகின்றன.

மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நிலைமைகள் குற்றமல்லதா?
அல்லது அடிமையாய்க் கிடக்கும் மக்கள் குற்றவாளிகளா? என்ற
ஆனால் இதிலே அடிமைத்தனத்தை அங்கீகரிக்கின்ற முறைகள் இன, மத, மொழி அடிப்படையில் பாகுபாட்டினை வளர்க்கும் சமுதாய கட்டமைப்புக்கள் அனைத்தும் அநீதியானவைகள் என்றும், பாவங்கள் என்றும் எடுத்துரைக்கின்றது. சில மனிதர்களின் கீழ்த்தர எண்ணங்களால் மக்களின் நிலையும் கீழ்த்தரமாகின்றது. இந்நிலை மாற்றம் பெற வேண்டும்.

அறிவுக் கொண்ட மனித வுயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மைக் கொண்டுயர்
தேவர்களாவதற்கே.

பாரதியார்-

## ஸ்ரீ முகன்

ஆறறிவு படைத்த மனித உயிர்களை அடிமையாக்க நினைப்பவர்கள் அனைவரும் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க முடியும். ஆனால் அடிமைத்தனத்தை மாற்றியமைக்கும் பணியில் தொண்டாற்றுதல் என்பது மனித நிலையை விட்டு உயர்ந்து தெய்வநிலையை எட்டிவிட முடியும் என பாரதியார் பாடியுள்ளார். இவ்வாறு எம்மை உந்தித்தள்ளும் ஒரு நெம்பு கோலாகவே விவிலியம் காணப்படுகிறது. அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை மானிட விடுதலை பற்றியே அழுத்தமாக அறிவுறுத்துகின்றது. இதனாலேயே இறைவன் அல்லது இயேசு என்பதின் அர்த்தம் விடுதலை, நீதி, நியாயம், சமாதானம் எனும் அர்த்தங்களை தன்னகத்தே வைத்திருக்கின்றது. அக்கால யூத, ரோம, கிரேக்க பின்னணியில் பெண்களின் நிலையை எவ்விதம் கண்ணோக்கினார் என்பதையும் காணலாம்.

இத் தேயிலைத் தோட்ட சமூகத்தில் வாழும் பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று மனித நேயத்துடன் வாழ வைப்பதற்கு, சிந்தித்து செயல்பட வேண்டிய பொறுப்பு, மனிதர்கள் ஒவ்வொருவரிலும் தங்கியுள்ளது.

*(துளிர்க்கும்)*

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



முக்கியமான மைல் கல். சொந்தமாக ஸ்டுடியோ தனக்குத் தேவை என்ற எண்ணத்தில் ஹொலிவூட்டில் 5 ஏக்கர் நிலத்தை வாங்கினார். இது பல ஆண்டுகள் வெற்றியோடு நடந்து கொண்டிருந்தது. அவருடைய வாழ்க்கை முடியும் வரை சில படங்களைத் தவிர மற்ற எல்லாப் படங்களையும் இங்குதான் எடுத்தார்.

ஹொலிவூட்டில் மிகவும் பிரபலமான சாலைகளில் ஒன்றான 'ஸன்ஸெட் பொலிவார்டு' (Sunset Boulevard) வில்தான் அவருடைய ஸ்டுடியோ இருந்தது. தன்னுடைய தாய் நாடான இங்கிலாந்தில் கட்டப்படும் வகையில் பழைமையான முறையில் பல குடில்களை அமைத்தார் இந்த ஸ்டுடியோவில். அதன் அருகிலேயே ஒரு பெரிய பங்களாவைக் கட்டினார். அதில் பல ஆண்டுகள் ஸிட்னி தங்கினார்.

சாப்ளினின் வியாபாரத்தைக் கவனித்து வந்தவன் ஸிட்னி. சாப்ளின்,



கடைசியில் கையெழுத்தை மட்டும் தான் போடுவார். அதில் காணப்பட்ட வரலாறு காணாத இவர்கள் கனவிலும் எதிர்பாராத லட்சக்கணக்கான டாலர் தொகைகளைக் கண்ட ஸிட்னி குதித்துக் கூத்தாடினார். ஆனால் சாப்ளின் முகத்தில் சலனமே இல்லை. ஏனென்று அண்ணன் கேட்ட பொழுது, "இவையெல்லாம் காகிதத்தில் இருக்கும் தொகைகள். அவைகள் கைக்கு வரவேண்டும் என்றால் அத்தனை படங்களையும் எடுக்க வேண்டும். அதற்குத் தேவை உழைப்பு. அதைச் செய்ய வேண்டியவர்கள் நீயும், நானும். அந்த உழைப்பின் விளைவாகக் காசு கையில் வரும்பொழுது நானும் குதிக்கிறேன்!" தம்பியின் பேச்சுக்குள்ளே அடங்கியிருக்கும் அர்த்தத்தைக் கண்டு பிரமித்தான் ஸிட்னி. இது சாப்ளினின் அறிவின் கூர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

சாப்ளின் வாழ்க்கை முழுவதிலுமே பல விஷயங்களை எதிர்த்துப் போராடியவர். ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் மற்றவர்களைப் போல வளைந்து வருவது அவருக்குப் பிடிக்காது. வட்டத்திற்கு வெளியே வந்தால் என்ன? யாரோ பல ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு வட்டத்தை போட்டுச் சென்றுவிட்டான் என்றால், அதன்படிதான் வாழ வேண்டுமா என்ன? சட்டம், சாஸ்திரம், பழக்கம், வழக்கம், நடைமுறை என்பவை எல்லாம் மனிதன் வகுத்தது தானே? அதை மனிதனால் உடைக்க முடியாதா என்ன? இந்த வழியில் தன் எண்ணங்களை உலாவ விட்டார் சாப்ளின். உலகில் வெற்றி கண்டவர்களின் வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், அவர்கள் எல்லோருமே அந்த வட்டத்தை உடைத்துவிட்டு வெளியே வந்தவர்கள் தான். அதுதான் அவர்கள் வெற்றிக்கு அடிப்படையும் கூட. இதைத் தான் பிரபல அமெரிக்க கவிஞன் 'ராபர்ட் ஃபிராஸ்ட்' (Robert Frost) ஒரு கவிதையில் மிகவும் அழகாகச் சொன்னார்: "காட்டில் நின்றேன். பிரிந்து செல்லும் இரண்டு பாதைகள் என் கண்ணில் பட்டன. யாரும் போகாத பாதையில் நான் நடந்தேன்! அப்படி நடந்ததுதான் என்னைப் பிரபல கவிஞர் ஆக்கியது." அந்த வழி நடந்தவர் தான் சாப்ளின்.

அக்கம் பக்கத்துக்காரர்கள் உற்றார் உறவினர், என்ன நினைப்பார்களோ என்று அவர் கவலைப்பட்டதே இல்லை. அவர் நினைத்ததைச் செய்து முடிப்பவர்.

ஒரு குறிப்பிட்ட நாளன்று ஸ்டுடியோவில் ஒரு காட்சியைப் படமாக்குவதற்காக நல்ல எண்ணங்கள் அவர் மனத்திரையில் பளிச்சிடவில்லையென்றால், படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு வீட்டிற்குச் சென்று விடுவார். செலவைப் பற்றி கவலைப்படமாட்டார். ஸிட்னி சில நேரங்களில் பணமும், நேரமும் வீணாவதைப் பற்றி வாதம் செய்வான். அதற்கு சாப்ளின் சொன்ன பதில், "பணம் வீணாகிறதே என்று ஏதாவது குப்பையை எடுக்க முடியுமா என்ன? அது அடி முட்டாள்தனம்!"

தன்னுடைய சொந்த நிறுவனத்தில், சொந்த ஸ்டுடியோவில் அவர் உருவாக்கிய முதல் படம் 'ஏ டாக்ஸ் லைஃப்' (A Dog's Life) இந்தப் படத்தில் தான் அவருடைய மேதாவித்தனம் முழுமை பெற்று மேலும் வளரத் தொடங்கியது. அவர் அமெரிக்காவிற்கு வந்து திரைப்படத்துறையில் இறங்கி நான்கு ஆண்டுகள் மட்டும்தான் ஆகியிருந்தன. அந்தக் குறுகிய கால கட்டத்தில் பணமும் புகழும் அவரை நாடி - தேடி ஓடிவந்தன. அதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.



அவையெல்லாம் உழைப்பின் விளைவுகள் தான் என்று எண்ணினார். ஆனால் அந்த நான்கு ஆண்டுகள் அவர் கற்றுக்கொண்ட விஷயங்கள் பல. திரைப்படக் கலையின் வளைவு நெளிவுகள்... திரைக்கதை அமைப்பின் இரகசியங்கள்... கேமரா என்ற ஒரு இயந்திரத்தைக் கலை உணர்வு வசமாக்குவது.. ஒவ்வொரு நகைச்சுவைக் காட்சியிலும் ஒரு உள் அர்த்தத்தை வைப்பது... படம் பார்க்க வந்தவன் சிரிப்பது மட்டுமல்லாமல் அவனைச் சிந்திக்க வைப்பது... இப்படிப்பட்ட விஷயங்களில் அவர் பெரும் அளவில் தேர்ச்சி பெற்று வளர்ந்தார். எண்பது, தொண்ணூறு ஆண்டுகளுக்குப் பிறகும் சாப்ளினின் ஊமைத் திரைப்பட படைப்புகள் அன்று போல் இன்றும் மக்களின் மனதை உருக்கிறது என்றால், அது அவருடைய மேதாவித்தனத்திற்கு ஒரு பலமான எடுத்துக்காட்டு. அந்தக் காலகட்டத்தில் திரைப்பட உலகில் பலர் படம் எடுத்தார்கள், படங்களில் நடித்தார்கள், இயங்கினார்கள். பணத்தையும் குவித்தார்கள். ஆனால் அவர்களில் நூற்றுக்கு, தொண்ணூற்று



ஒன்பது பேர் முழுமையாக மறக்கப்பட்டு விட்டார்கள். மறக்கப்படாமல் மக்கள் மனதில் நிறைந்து, நிமிர்ந்து, நிலைத்து நிற்பவர் சாப்ளின் ஒருவர்தான். இது உலக திரைப்பட வரலாற்றிலே ஒரு முக்கியமான விஷயம்.

'ஏ டாக்ஸ் லைஃப்' ஏழையின் வாழ்க்கையைப் பல கோணங்களில் எடுத்துக்காட்டியது. 'நாய் பட்டப்பாடு' என்று ஒரு பழமொழி உண்டு. அந்த நாயோடு இவர் மனிதன் பட்ட பாட்டையும் காட்டினார். ஏழையின் வாழ்க்கை சில நேரங்களில் நாயின் வாழ்க்கையை விட கேவலமாக அமைவது உண்டு. அதுதான் சாப்ளினின் மனதிலும் இருந்தது இந்தப் படத்தை எடுக்கும் பொழுது.

படத்தின் ஆரம்பத்தில் சாப்ளின் ஒரு வெட்டவெளி இடத்தில் தூங்கிக் கொண்டு இருக்கிறார். அவரைச் சுற்றி ஒரு உடைந்து போன வேலி. அதன் ஓட்டையிலிருந்து குளிர்காற்று வீசுகிறது.

***(தொடரும்)***

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 27

## ஆசை நாயகியாய் அரசியான ஷோஷி ராணி

**உலகில்** தொன்று தொட்டு இன்று வரை ஜாதி, பேதம் இல்லாத ஒரே நாடு ஜப்பான் ஆகும். மன்னர் பரம்பரை ஒருபக்கம், மக்கள் மறுபுறம் என ஆக இரண்டே இரண்டு பிரிவுகள் மட்டுமே அங்கு உண்டு. ஜப்பானிய மக்களும் கடவுளுக்கு அடுத்தபடியாக மன்னரில் அதிக விசுவாசம் வைத்து நடப்பதனால் எந்த ஒரு காலகட்டத்திலும் ஆட்சிகவிழ்ப்போ அல்லது சதிப்புரட்சி என்ற பேச்சிற்கோ அங்கு இடமில்லை. ஏன் இரண்டாம் உலகப்போர் இடம்பெற்று ஜப்பான் தோல்வியடைந்தபோது கூட ஜப்பான் மன்னருக்கு எமது தோல்விச் செய்தியை எப்படிச்சொல்வது? அல்லது எமது மன்னருக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியாமற் போய்விட்டதே என்று பல இராணுவ தளபதிகள் தமது வயிற்றினை தமக்குத் தாமே வாளினால் கிழித்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்கள். ஜப்பானியரின் ராஜ விசுவாசம் அப்படிப்பட்டது.

ஆனால் ஒன்று மட்டும் விதிவிலக்காக நடைபெறும். ஜப்பானிய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை மணம் முடிப்பதைப் பெரும் பேறாகவே ஜப்பானிய மக்கள் கருதுகின்றார்கள். ஜப்பானின் தற்போதைய முடிக்குரிய இளவரசர் கூட கல்வியறிவுமிக்க சாதாரணமான ஓர் குடிமகளையே மணந்து கொண்டமை இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

இனி ஜப்பானிய வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமானதோர் காலகட்டத்தில் நிகழ்ந்த விடயங்களை நோக்குவோம். நாம் தமிழில் நமது வரலாற்று மன்னர்களைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் என விழிப்பது போல, ஜப்பானிய வரலாற்று மன்னர் பரம்பரையினரை பியூஜிவோரா என அழைத்தார்கள்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் உத்தியோகபூர்வமாக அரச பரம்பரை என அறியப்படும் வரை பியூஜிவோரா குடும்பத்தவர்களே ஆட்சிப்பொறுப்பினை நடாத்தினார்கள். அக்காலத்தில் மிகச் செல்வாக்குப் படைத்தவர்களும் பெரும் செல்வந்தர்களாக விளங்கியவர்களும் பியூஜிவோராக்கள்தான். இவர்களே கால ஓட்டத்தில் ஜப்பானிய அரச வம்சத்தினராக மாறியதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்திலே குறிப்பிட்டது போல தற்போதைய மன்னர் ஆட்சியினைப் போன்றே அன்றும் பியூஜிவோரா பரம்பரை ஆட்சி முறைமையினை போற்றிப்பாதுகாக்கும் வழக்கம் தொன்று தொட்டே ஜப்பானில் வேரூன்றி இருந்தது. ஆட்சிபுரியும் பியூஜிவோராக்களைக் கவிழ்த்து விட்டு அரியணை ஏறும் முயற்சியினை அக்கால ஜப்பானிய மக்கள் ஒருபோதுமே மேற்கொண்டதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக தங்கள் மகளை பியூஜிவோரா மன்னருக்கு மணம் செய்து கொடுத்து விடுவார்கள். அதன்பின் அந்த தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்ததும் மன்னரை முடி துறக்கும் படி வேண்டு கோள் விடுத்தபின் பிறந்த குழந்தைக்கு முடி சூட்டி விடுவார்கள்.

அக்கால மன்னர்களுக்குப் பதவி ஆசையோ அல்லது ஆட்சிபுரியும் பேராசையோ இருந்ததில்லை. மேலும் ஆட்சிப்பொறுப்பு என்பது மிகவும் சலிப்பூட்டும் பணி என்பதனால் மன்னர்களும் உடனடியாகவே முடி துறந்து விடுவார்கள். மொத்தத்தில் ஆட்சி மாற்றம் என்பது மிகவும் நாகரீகமாகவே நடந்து வந்தது.

கி.பி. 853ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 1068ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மொத்தமாக 15 மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில், ஒரு மன்னர் தான் முன்னாள் மன்னர்களின் தகப்பன் முறையாகவும் நான்கு மன்னர்களின் தாத்தாவாகவும் விளங்கியிருக்கின்றார். இந்த வகையில் 1086ஆம் ஆண்டு அப்போதைய ஜப்பானிய மன்னர் ஷிரோக்காவா முடிதுறந்தார். ஏனெனில் சாதாரணக் குடும்பப் பெண் ஒருவரை மணந்த அவர், அந்தப்பெண் மூலம் ஆண்குழந்தை ஒன்றிற்குத் தந்தையானார். அந்த ஒரு வயதான மகன் ஹோரிக்கா ஜப்பானிய மன்னராக முடிசூட்டப்பட்டான். ஹோரிக்காவிற்கு நிர்வாக வயது வரும் வரையில் தற்காலிகமாக ஆட்சிப்பொறுப்பில் இருந்த ஷிரோக்காவா மன்னர் அவன் உரிய வயது வந்ததும் முற்றாக நிர்வாகத்தில் இருந்து விலகினார்.



தனது தந்தையைப் பின்பற்றி தனது 23ஆவது வயதில் 1108ஆம் ஆண்டில் சாதாரண ஜப்பானிய பெண் ஒருத்தியை மணம் முடித்தார். இதன் பலனாக அடுத்த வருடமே 1109ஆம் ஆண்டில் அந்த தம்பதியினருக்கு ஒரு மகன் பிறந்தான். முடிக்குரிய இளவரசனான அவனுக்கு டோபா என பெயரிட்டு வளர்த்தார்கள்.

ஏனைய ஜப்பானிய அரச தொடர்பு குடும்பங்களைப் போல ஹோரிக்காவின் மனைவி வீட்டார் அவரைப் பதவி துறக்கும்படி கூறவில்லை. எனவே தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாக தனது 28ஆவது வயதில் கடும் நோய்வாய்ப்பட்ட அவர் மரணமடைந்தார்.

ஹோரிக்கா மன்னரின் மரணத்தை அடுத்து நான்கே வயதான இளவரசன் டோபா அடுத்த ஜப்பானிய மன்னராக முடிசூட்டப்பட்டான். தனது 15ஆவது வயது நடக்கையில் அரண்மனையில் வசித்த தனது தாத்தாவின் ஆசைநாயகியான 17 வயதே நிரம்பிய ஷோஷியை திருமணம் செய்தார். இதில் ஆச்சரியம் என்னவென்றால், 15 வயதான டோபா மன்னர் 17 வயதான ஷோஷியைத் திருமணம் செய்யும் போது, அவள் டோபாவின் தாத்தா ஷிரோக்காவாவின் மூலம் கர்ப்பமாக இருந்தாள். ஆயினும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தது. இதன்பின் அந்தக்கர்ப்பத்தின் மூலம் பிறந்தவர்தான் சுட்டோகு. பிற்காலத்தில் ஜப்பானில் தனியான ஒரு தற்காப்புக் கலையாகிய சுடோகுவின் தந்தையே இந்த சுட்டோகு மன்னர் என வரலாறு கூறுகின்றது.


***(இரகசியங்கள் தொடரும்...)***

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## புலிகளுக்கெதிராக இந்தியா 'ஒப்பரேசன் பவான்' இராணுவ நடவடிக்கை

திலீபனின் மரணத்தையொட்டிக் குழப்பங்களிலும் வன்செயல்களிலும் ஈடுபட வேண்டாமென்று வலியுறுத்திய புலிகள், உத்தேச வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தின் தலைமை நிர்வாகியாக பத்மநாதனின் பெயரைத் தெரிவு செய்ய ஜனாதிபதி ஜெயவர்த்தன மறுத்ததையடுத்து, மீண்டும் யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளை உக்கிரமாக மேற்கொண்டனர். வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகத்துக்கான யோசனை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலேயே முன்வைக்கப்பட்டிருந்தது. பிரபாகரனும் தீக்ஷித்தும் செப்டெம்பர் 28ஆம் திகதி கடைசியாக யாழ்ப்பாணத்தில் சந்தித்து உரையாடியபோது 48 மணித்தியாலங்களுக்குள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதென்று இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால் இடைக்கால நிர்வாகியொருவரைத் தெரிவு செய்வதற்கு மூன்று பெயர்களைச் சிபார்சு செய்த பிரபாகரன், அதிலொருவரான சி.வி.கே.சிவஞானத்தின் பெயரை ஜனாதிபதி தெரிவு செய்து 48 மணித்தியாலங்களுக்குள், புலிகள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தினர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராகவும் இந்தியப் படைக்கெதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இந்தக் குழப்பங்களையும் இடைக்காலத் தலைமை நிர்வாகி தொடர்பான இழுபறி நிலையையும் கையாளும் வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக உயர்ஸ்தானிகர் தீக்ஷித் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி புதுடில்லிக்கு விரைந்தார்.




தமிழ் நாட்டிலிருந்து பாக்குநீரிணையூடாக ஆயுதங்கள் கடத்தி வந்த புலிகளின் இயந்திரப் படகொன்றினை அக்டோபர் மாதம் மூன்றாம் திகதி இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர். பருத்தித்துறைக் கடலில் இந்தப் படகு சிக்கியது. இந்தப் படகிலிருந்த குமரப்பா, புலேந்திரன் போன்ற இரண்டாம் நிலைப் புலித் தளபதிகள் உட்படப் பதினேழு பேரையும் கடற்படையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களைப் பலாலி இராணுவத் தளத்துக்குக் கொண்டு வந்த படையினர், அவர்களைக் காவலில் வைத்தனர். அப்போது பலாலி இராணுவத் தளத்தில் இலங்கைப் படைகளும் இந்தியப் படைகளும் நிலைகொண்டிருந்தன. புலிகள் யுத்தத்துக்குத் தயாராகிறார்களென்று இலங்கை அரசு கொண்டிருந்த சந்தேகத்தை, இந்த ஆயுதக் கடத்தல் விவகாரம் ஊர்ஜிதம் செய்தது.



இந்திய இராணுவத் தளபதி கிருஷ்ணசாமி சுந்தர்ஜி

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பதால் இவர்களை விடுவிக்க வேண்டுமென்று பிரபாகரன் வலியுறுத்தினார். அவர்களை மீட்டுத் தருமாறு இந்தியாவிடம் பிரபாகரன் கோரிக்கை விடுத்தார். இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளுக்கு முரணாகப் புலிகள் ஆயுதங்கள் கடத்தியிருக்கிறார்களென்பதால் அவர்களை விடுவிக்க முடியாதென்று வாதிட்டார் அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத்முதலி. அத்துடன் ஒப்பந்தம் அமுலிலுள்ள வடக்கு - கிழக்கு நிலப்பரப்புக்கு வெளியே கடற்பரப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டதால், அவர்களை விடுவிக்க வேண்டிய தேவையெதுவுமில்லை என்றும் கூறினார். கைது செய்யப்பட்டவர்களை விசாரணைக்கெனக் கொழும்புக்குக் கொண்டுவருமாறு வற்புறுத்திய லலித் அதுலத் முதலி, அதற்கென விமானமொன்றினையும் பலாலி விமானத் தளத்துக்கு அனுப்பி வைத்தார்.

*(அரசியல் தொடர்)*

1987 ஏப்ரலில் ஹபரணையிலும் கித்துலொட்டுவலும் 129 பஸ் பயணிகளைக் கொன்ற புலிகளின் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் புலேந்திரன். அது மட்டுமல்ல, பல சிங்களக் கிராமங்களில் நடத்தப்பட்ட மனித வேட்டைகளுக்கும் புலேந்திரனே பொறுப்பென்பது, ஏற்கனவே இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலாகும். எனவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் நிகழ்ந்த படுகொலைகள் தொடர்பாகப் புலேந்திரன் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்றும் லலித் அதுலத்முதலி வற்புறுத்தினார்.

அப்போது புதுடில்லியில் தங்கியிருந்த இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்துக்கு, புலிகளின் ஆயுதப் படகு பிடிபட்ட விடயம் பற்றிய தகவல் அனுப்பப்பட்டது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தகவல் எட்டியதும், உடனடியாகவே கொழும்புக்கு விரைந்து, கொந்தளிப்பு நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு தீக்ஷித்தைப் பணித்தார் ராஜீவ் காந்தி. தீக்ஷித் கொழும்பு வருவதற்கு முன்னதாகவே அப்போதிருந்த இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர், கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசைக் கேட்டிருந்தார். அன்று மாலையே கொழும்பு திரும்பிய தீக்ஷித், அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த இந்தியப் படைத் தளபதி ஜெனரல் ஹர்கிறற்சிங்குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கைது செய்யப்பட்டவர்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொண்டார். புலி இயக்க உறுப்பினர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்லாமல் தடுப்பதற்கான சகல இராணுவ ரீதியான செயற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். தேவையேற்பட்டால், நிலைமை சீராகும்வரை பலாலி விமான தளத்தை இந்தியப் படைகளின் பூரணக் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறும் தீக்ஷித் கூறினார். ஆனால், ஜெனரல் ஹர்கிறற் சிங், இராணுவக் கட்டுப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பேர்வழி. அவர், இராணுவத்தோடு சம்பந்தப்படாத அதிகாரிகள் தெரிவிக்கும் உத்தரவையோ அல்லது யோசனையையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தனக்குத் தனது இராணுவ மேலதிகாரிகளிடமிருந்து வரும் உத்தரவை மட்டுமே நிறைவேற்ற முடியுமென்று கூறி மறுத்துவிட்டார். "நீங்கள் வேண்டுமானால் உங்கள் அறிவுரையை அல்லது பணிப்புரையை இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்புங்கள். அவர்கள் இந்திய பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிப்பார்கள். பாதுகாப்பமைச்சு, தென்னிந்தியாவிலுள்ள இந்தியப் படையின் கட்டளைத் தளபதிக்கு அறிவிக்கும். அங்கிருந்து வரும் அறிவுறுத்தலின்படி மட்டுமே என்னால் செயற்பட முடியும்" என்று ஹர்கிறற் சிங் முகத்திலடித்தாற் போலக் கூறிவிட்டார். உரிய முறைப்படி தகவல்களை அனுப்பி, அது பலாலியிலுள்ள இந்தியப் படைக் கட்டளைத் தளபதியைச் சென்றடைய நேரம் பிடிக்கும். அதற்குள்ளாகவே புலி இயக்க முக்கியஸ்தர்களைக் கொழும்புக்குக் கூட்டி வந்துவிடுவார்கள் என்பதே தீக்ஷித்தின் நிலைப்பாடாக இருந்தது. என்றாலும் உரிய அறிவுறுத்தலைப் புதுடில்லியிலுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துவிட்டு, மூன்றாம் திகதி மாலையே கொழும்புக்கு விரைந்து, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து ஒரு மணி நேரமாகப் பேசினார் தீக்ஷித்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

புலேந்திரனையும் அவரது சகாக்களையும் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டாமென்றும், அவர்களை இந்தியப் படையினரின் காவலில் வைக்குமாறும் தீக்ஷித், ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார். தற்போது நிலவும் கொந்தளிப்பு நிலைமை தணிந்த பின்னர், இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளை மீறிப் புலிகள் ஆயுதங்களைக் கடத்தினார்களென்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாகப் பின்னர் பார்க்கலாமென்றும் தீக்ஷித் கூறினார். ஜெயவர்த்தனாவும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார். புலி இயக்க உறுப்பினர்களை இந்தியப் படையின் காவலில் எடுக்குமாறு அங்குள்ள இந்தியத் தளபதிக்கு அறிவிக்குமாறும் ஜெயவர்த்தனா தீக்ஷித்திடம் சொன்னார். ஆனால், புதுடில்லியிலிருந்து தீக்ஷித் கொழும்புக்கு விரைந்து வந்து, தனது முயற்சிகளைத் தடுப்பாரென்பதை முன்கூட்டியே உணர்ந்துகொண்ட அமைச்சர் லலித் அதுலத் முதலி, அக்டோபர் நான்காம் திகதி காலையே விமானமொன்றைக் கொழும்பிலிருந்து பலாலிக்கு அனுப்பி வைத்தார். வலுக்கட்டாயமாகவாவது, புலேந்திரனையும் ஏனைய 16 பேரையும் விமானத்திலேற்றி அனுப்புமாறு பலாலியிலுள்ள இலங்கை விமானப் படையின் தளபதி, பிரிகேடியர் ஜெயரட்னவுக்கு வானொலிச் செய்தி அனுப்பினார் அமைச்சர் அதுலத்முதலி.

இதற்கிடையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலி இயக்கத்தினருக்கு உணவும் மருந்து வகைகளும் கொடுக்க அனுமதி வழங்குமாறு இந்தியப் படை, இலங்கைப் படையினரைக் கேட்டுக் கொண்டது. தயக்கத்துடன் இலங்கைப் படைத் தரப்பு சம்மதமளித்தது. ஐந்தாம் திகதி மாத்தையாவும் அன்ரன் பாலசிங்கமும் அவர்களைப் பார்க்க வந்தனர். கூடவே 17 பேருக்கும் உணவுப் பார்சல்களையும் கொண்டு வந்தனர். உணவுப் பார்சல்களுக்குள் சயனைட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. உணவையுண்ட பதினேழு பேரில் பன்னிரண்டு பேர் மரணமானார்கள். ஐவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உயிர் தப்பினர். புலேந்திரன், குமரப்பா, அப்துல்லா, ரகு, நளன், ஆனந்தகுமார், மிரேஷ், அன்பழகன், ரெஜினோல்ட், பழனி, ஹரன், தவக்குமார் ஆகிய பன்னிரண்டு பேருமே உயிர் துறந்தவர்களாவர். இதனையடுத்துப் புலிகள் தமது காவலிலிருந்த எட்டுப் பொலிஸ்காரர்களைச் சுட்டுக் கொன்று, யாழ்.பஸ் நிலையத்தில் சடலங்களைக் காட்சிக்கு வைத்தனர். புலிகளின் தற்கொலை இந்திய அரசுக்குத் தலையிடியாக அமைந்தது. நடந்த விடயங்களை தீக்ஷித் உயர்மட்டத்தினருக்கு விளக்கியதையடுத்து, ஜெனரல் ஹர்கிரற்சிங், அக்டோபர் இறுதியில் கட்டளைத் தளபதிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். லெப்டினன்ட் ஜெனரல் அமர்ஜித் சிங் கல்கற் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டார். அப்போது இந்தியப் படைகளின் தளபதியாகவிருந்த கிருஷ்ண சாமி சுந்தர்ஜி அக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி கள நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இதற்கிடையில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசியல் பேச்சுவார்த்தைகளிலிருந்து தான் விலகுவதாகப் பிரபாகரன் அறிவித்தார். யாழ்ப்பாண நகரத்திலிருந்து தமது முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஆறு இந்தியப் படைச் சிப்பாய்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். ஆறாம் திகதி வாக்கில் இச் சம்பவம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியதும் இந்தியத் தளபதி கே.சுந்தர்ஜி இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிட்டார். 'ஒப்பரேசன் பவான்' என்ற புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை அக்டோபர் ஆறாம் திகதி ஆரம்பமானது.

(தொடர்ந்து வடியும்....)




எலும்புக்கூட்டை கொண்டுவரும்படி கோவிந்தனிடம் ஜயந்தன் கூறுகிறார்.

காலையில் குமார் பிரபாகரன் வீடு சென்ற போது அம்மா பிரபாகரனின் போக்கு சரியில்லை என்கிறார். கள்ளுக்கடை பக்கம் போன குமார் குட்டப்பனை சந்திக்கிறார். அவன் விசாரித்து தகவல் தருவதாக சொல்கிறான். குமார் வீடு திரும்புகிறார்.

**மாலை** நேரத்துக்குப் பிறகு குட்டப்பன் இல்லத்துக்கு வந்தான்.

குமாரும், ஸ்ரீதேவியும் வராந்தாவில் உட்கார்ந்திருந்தனர்.

மனத்தை மயக்கும் அழகியான ஸ்ரீதேவியைப் பார்த்ததும் குட்டப்பன் மலைத்தே போனான். அது மட்டுமன்றி எங்கேயோ பார்த்த முகமாகவும் அவனுக்குத் தோன்றியது.

"இவங்க யார் திருமேனி? எனக்குத் தெரிஞ்ச முகமாகவும் தெரியுது!" - குட்டப்பன் கேட்டான்.

"நீங்க பார்த்திருக்க வழியே இல்லை. என்னோட சம்சாரம் இது. வடக்குப் பக்கம் ரொம்பத் தொலைவில இருக்கிறது இவங்க வீடு". - குமார் கூறினார்.

"அப்படியா! நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்ட சேதியே எங்களுக்கெல்லாம் தெரியாதே". - குட்டப்பன், ஸ்ரீதேவியின் மீது வைத்த கண்ணை எடுக்காமலேயே பேசினான்.



"நாங்க ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. இவங்க என்கூட காலேஜில லெக்சாரரா வேலை செய்யிறாங்க." -குமார் புன்னகைத்தவாறே ஸ்ரீதேவியைப் பார்த்துக் கூறினார்.

**எழுதுவது**
**சிவன்**

அவள் தலைகுனிந்தபடியே அமர்ந்திருந்தாள்.

"உண்மையைச் சொல்றதுக்கென்ன? இவங்களை மாதிரியே ஒரு பொண்ணு இந்த ஊர்ல இருந்தது. எனக்கு நல்லாவே தெரியும். ஆனா, அவங்க செத்துப் போயிட்டாங்க. கொலை பண்ணிட்டதாகவும் பேசிக்கிறாங்க." குட்டப்பன் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தான்.

"நானும் அதைக் கேள்விப்பட்டிருக்கேன். ஒருத்தரை மாதிரியே உலகத்துல ஏழு பேர் இருக்கிறதாச் சொல்றாங்க. அதனால இந்த உருவ ஒற்றுமை சாத்தியம் தான்.

"இதெல்லாம் யாருக்குத் தெரியும்? பிரபாகரனைப் பத்திச் சொல்ல வந்த, விஷயமே மாறிப் போச்சு."

என்ன...எங்கேயாவது அவனைப் பார்க்க முடிஞ்சதா என்ன? - குமார் விசாரித்தார்.

"ராத்திரி நேரத்துல அவனைப் பார்த்ததா சாக்கோ சொன்னான். ஆனா, ஒரு வார்த்தை கூடப் பேசலையாம்!"

"எங்க பார்த்தாராம்?"

"சந்து நாயரோட தேங்கா கோடவுன்லேருந்து வெளியே வரும் போது பார்த்தானாம்."

"அப்படீன்னா அவன், அவங்க மாமா பிடியில வசமா மாட்டிக்கிட்டான்னு அர்த்தம். இந்த நிலைமையில என்னைப் பார்க்குற தர்மசங்கடம் வேண்டாம்னு ஒளிஞ்சு நடக்கிறானோ என்னவோ? குமார் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஒருவேளை அப்படியும் இருக்கலாம்!" குட்டப்பன் முற்றத்திலிருந்த துளசி மாடத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்தான். அப்போதும் அவனது பார்வை ஸ்ரீதேவியின் மீதே பதிந்திருந்தது.

ஸ்ரீதேவியைக் கொலை செய்த நபர்களுள் அவனும் ஒருவன் என்கிற விஷயம் திரும்பத் திரும்ப நினைவிலேயே சுழன்று கொண்டிருந்தது. இருப்பினும் தனக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீதேவியைப் பார்த்த போது அவனுள் பயம் தோன்றாமல் இல்லை.

"மேற்கொண்டு என்ன செய்யலாம்?" - குமார் கேட்டார்.

குட்டப்பன் பதிலளிக்கவில்லை.

பிரபாகரனை எப்படியும் கண்டுபிடிச்சே ஆகணும். நாம. சந்து நாயரோட தேங்காய் கோடவுன் பக்கம் போய்த் தேடிப் பார்க்கலாமா?" குமார் கேட்டார்.

"அதுக்கென்ன...தாராளமாகப் போகலாம். நானும் உங்ககூட வர்றேனே!" - குட்டப்பன் ஒப்புக் கொண்டான்.

"நானும் வர்றேனே!" - ஸ்ரீதேவி மெதுவான குரலில் பேசினாள்.

"என்னது! நீங்களும் தேங்கா கோடவுனுக்கு வர்றீங்களா, அதுவும் ராத்திரி நேரத்துல?" குட்டப்பன் சிரித்தான்.

"நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்." என்ற ஸ்ரீதேவி எழுந்து உள்ளே போனாள்.

குமாரும் குட்டப்பனும் சேர்ந்து சந்து நாயரின் தேங்காய் கோடவுனை நோக்கி நடந்தனர்.

இரவு மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

தோப்புக்குள் நுழைந்தவுடனேயே தேங்காய் கோடவுன் பக்கம் வெளிச்சம் தெரிந்தது.

"உள்ளே யாரோ இருக்கிறாப் போலத் தெரிகிறது" - குட்டப்பன் ரகசியமான குரலில் பேசினான்.

"சத்தம் எழுப்பாம நாம நடந்து போய் முடிஞ்சா யார் இருக்குறாங்க, என்ன பேசிக்குறாங்கன்னு கேட்கணும்!" குமார் கூறினார்.

இருவரும் எச்சரிக்கையுடன் தேங்காய் கோடவுனை நெருங்கினர்.

பலகைச் சுவர்களின் இடைவெளி வழியாக உள்ளே பார்த்தனர்.

சந்து நாயரும், ஜயந்தனும் தட்டுப்பட்டனர்.

பிரபாகரனைக் காணவில்லை.

"அவன் போய் இந்தத் தடவை கண்டிப்பாகக் கொண்டுவந்து விடுவான். அதுல எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை." - சந்து நாயரின் குரல்.

"உருவமும் பிரபாகரனோடதானதால யாரும் சந்தேகப்படவும் மாட்டாங்க" - ஜயந்தன் கையில் வைத்திருந்த கிளாஸைக் காலி செய்து விட்டு, உதட்டைத் துடைத்தபடி கூறினார்.

"இங்க வந்துட்டா என்ன காரணத்தாலும் தாமதிக்கக் கூடாது. உடனே எரிச்சுடணும்! சந்து நாயர் உறுதியான குரலில் கூறினார்.

அவர்கள் எதைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள் என்று குமாருக்குப் புரியவில்லை.

அவர்கள் எலும்புக் கூட்டைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்தது. ஆனால், எந்த எலும்புக் கூட்டைப் பற்றி என்பது விளங்கவில்லை. மேலும் பிரபாகரன் தனக்கு எதிராகச் செயல்படுவான் என்பதையும் அவரால் நம்ப முடியவில்லை.

பிரபாகரன் ஒருவேளை தனது மாமாவுடன் சேர்ந்து கொண்டாலும், தனக்கு எதிராகச் செயல்பட மாட்டான் என்றே நம்பினார். இருப்பினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக பிரபாகரனின் வீட்டை நோக்கி நடந்தனர். அம்மாவிடம் பேசிப் பார்த்தால் ஏதாவது விவரம் கிடைக்கலாம்.

பிரபாகரனது வீட்டில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அம்மா இன்னும் தூங்கவில்லை என்பது விளங்கியது. குட்டப்பனும் குமாரும் தெரு வாசற்படியை நெருங்கும் போது, அம்மா விளக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனார்.

உடனே குரல் கொடுத்தபடி குமார் வேகமாக நடந்தார். குட்டப்பனும் தொடர்ந்தான்.

*(வாசனை வீசும்....)*

மனதுக்கு நிம்மதி

# அன்புக்கு யார் அடிமை?

குடும்பம், மனைவி, மக்கள் என்பதன் அருமையெல்லாம் நம்மில் பலருக்குத் தெரியாது. எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடிக்கும் குணம் பல குடும்பங்களைச் சுக்குநூறாக்கிக் கொண்டிருக்கிறது. இதோ, இந்தக் கற்பனைக் கதையைப் பாருங்கள்.

அவர்கள் இருவரும் வயதானவர்கள். நாற்பது வருடத் தாம்பத்தியம் நடத்தியவர்கள். மிகப்பெரிய செல்வந்தனாக வேண்டும் என்று கனவில் மிதந்தவர் அவர். ஆனால், ஆசை நிறைவேறாமலேயே மரணப்படுக்கையில் விழுந்தார் அவர்.

அந்தக் கடைசி காலத்திலாவது மனைவியின் அன்பை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், உறவினர் ஒருவர் சொன்னார்... உன் மனைவி எத்தனை அன்பானவள் தெரியுமா? கல்யாணம் ஆன புதிதில், நீ உன் அலுவலகத்தில் பணத்தைக் கையாடல் செய்து வேலையை இழந்தாய். அப்போது 'உன் அப்பாவும் அம்மாவுடம் கூட நீ எனக்குப் பிள்ளையே கிடையாது' என்று சொல்லி, உன்னைப் பிரிந்து போனார்கள். ஆனால், உன் மனைவி மட்டும் உன்னுடன் இருந்தாள்.

பிறகு பிஸினஸ் செய்யப்போகிறேன் என்று பல லட்ச ரூபாயை வங்கிக் கடனாக வாங்கி ஒரு ஷோரூம் ஆரம்பித்தாய். அதில் பெரிய நஷ்டம் வந்து கடன்காரனாகிக் கடைசியில் அந்த பிஸினஸும் கைவிட்டுப் போனது. உன்னுடன் நெருக்கமாயிருந்த நண்பர்கள் கூட அந்த நேரத்தில் விலகிப் போனார்கள். அப்போதும் உன் மனைவி உன்னுடன் இருந்தாள்.

பிறகு கெட்ட சகவாசங்கள், தீய பழக்கங்கள் வந்துசேர, ஒழுக்கம்கெட்ட வாழ்க்கை வாழ்ந்து வியாதியஸ்தனானாய். அப்போது நீ பெற்ற பிள்ளைகளே, உன்னை உதறிவிட்டுப் போனார்கள். ஆனால், அப்போதும் உன்னுடன் இருந்தது உன் மனைவி மட்டும்தான். இதிலிருந்து உனக்கு என்ன புரிகிறது? என்று



அந்தக் கணவனை நோக்கிக் கேட்டார் உறவினர்.

அதற்குக் கணவர் சொன்னார் : "எனக்குக் கெட்டது நடந்த ஒவ்வொரு நேரத்திலும் இவள் என் பக்கத்தில் இருந்திருக்கிறாள். இவள் துரதிர்ஷ்டத்தால் தான் நான் இப்படிக் கஷ்டப்பட்டிருக்கிறேன்..."

இன்னொரு வகை தம்பதிகளும் இருக்கிறார்கள்.

கார் வாங்கவேண்டும். அபார்ட்மெண்ட் வாங்கவேண்டும். உத்தியோகத்தில் பதவி உயர்வு பெறவேண்டும் என்று சதா அலைந்துகொண்டே இருப்பார்கள். இந்த அலைச்சல் காரணமாக, கணவன் - மனைவி இரண்டு பேருக்கும் வீட்டில் பேசிக்கொள்ளக்கூட நேரம் கிடைக்காது.

அப்படியே பேசினாலும் உன் பி.எ.'. ப்-இல் எத்தனை பணம் இருக்கிறது? உனக்கு பாங்க்கில் எவ்வளவு கடன் கொடுப்பார்கள்? என்று ஏதோ கம்பெனி ஆடிட்டர்கள் மாதிரிதான் பேசிகொள்வார்கள்.

அன்பு, அந்நியோன்யம், குழந்தைகள் - இதற்கெல்லாம் எப்போது நேரம் ஒதுக்கப்போகிறீர்கள்? என்று கேட்டால்....கார், அபார்ட்மெண்ட், பதவி உயர்வு எல்லாம் வாங்கிய பிறகு என்று சொல்வார்கள்.

வெற்றியையும் செல்வத்தையும் வாழ்க்கையில் தேட வேண்டியதுதான். தப்பு என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால், எதை விலையாகக் கொடுத்து இதையெல்லாம் வாங்கப் போகிறோம் என்பதை நாம் கணக்கிட வேண்டியது அவசியம் இல்லையா?

மும்பைவாசிகள் பற்றி ஒரு கிண்டல் உண்டு. அதாவது, பணிக் காலத்தில் தங்களின் ஆரோக்கியம் எல்லாவற்றையும் விலையாகக் கொடுத்து, ஐம்பது வயது வரை அவர்கள் பணம் சம்பாதிப்பார்கள். அதன்பிறகு இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறுவதற்காக, சம்பாதித்த பணத்தையெல்லாம் செலவழிப்பார்களாம்.

அது ஒரு கிராமம்...அங்கே ஒரு வீடு. அந்த வீட்டுக்கு ஒரு நாள் மூன்று பெரியவர்கள் வந்தார்கள். நீண்ட நேரம் பயணம் செய்த களைப்பு அவர்களிடம் தெரிந்தது.

இவர்களைப் பார்த்த அந்த வீட்டுப் பெண்மணி, 'உள்ளே வாருங்கள்...என் கணவர் வந்துவிடுவார்... உணவருந்தலாம்...'என்று அழைத்தாள்.

ஆண்மக்கள் இல்லாத வீட்டில் நாங்கள் உணவருந்த மாட்டோம். அதனால் உன் கணவன் வீடு திரும்பும் வரை, இங்கேயே காத்திருக்கிறோம்...என்று அவர்கள் திண்ணையிலேயே இளைப்பாற ஆரம்பித்தார்கள்.

வயல்வேலைக்குப் போயிருந்த கணவன் மாலையில் வீடு திரும்பினான். உடனே அவன் மனைவி, திண்ணையில் உறங்கிக்கொண்டிருந்த பெரியவர்களிடம் சென்று, என் கணவர் வந்துவிட்டார். இப்போது எங்கள் வீட்டுக்குள் வர உங்களுக்குத் தடையில்லையே? என்று கேட்க, அவர்கள், தடையில்லை...ஆனால்; ஒரு நிபந்தனை. எங்களில் ஒருவர் மட்டுமே உங்கள் வீட்டுக்கு வர முடியும் என்றனர்.

அந்தப் பெண்மணி காரணம் புரியாமல் விழிக்க...அவர்களில் மிகவும் வயது முதிர்ந்த பெரியவர், என் பெயர் அன்பு. இவன் பெயர் வெற்றி. அவன் பெயர் செல்வம். எங்களில் ஒருவரைத்தான் வீட்டுக்குள் அழைக்க முடியும். அதனால் யாரை அழைப்பது என்று நீயே தேர்ந்தெடுத்துக்கொள்...என்று சொல்ல, வந்திருப்பவர்கள் வழிப்போக்கர்கள் அல்ல. செல்வம், வெற்றி, அன்பு என்ற மூன்றுக்கும் அதிபதியாக இருக்கும் தேவர்கள்! என்பது அந்தப் பெண்மணிக்குப் புரிந்தது.

பூரிப்போடு வீட்டுக்குள் ஓடிய பெண்மணி, விஷயத்தைக் கணவனிடம் சொன்னாள். கணவனுக்குப் பரவசமும் பதற்றமும் தொற்றிக் கொண்டன. வாழ்க்கையில் வெற்றிதான் முக்கியம். அதனால் அவரை நம் வீட்டுக்குள் அழைக்கலாம் என்று யோசனை சொன்னான்.

அதற்கு இவள், வெற்றி வந்தால் மட்டும் என்ன பயன்? செல்வம்தானே முக்கியம். அதனால் செல்வத்தை அழைத்து வரலாம் என்று பரபரத்தாள்.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட அவர்களின் மருமகள் சொன்னாள்...வெற்றியையும் செல்வத்தையும்விட அன்பு இருந்தால்தான் கணவன், மனைவி, குழந்தை, மாமா, அத்தை என்று நாமெல்லோரும் சந்தோஷமாக ஒற்றுமையாக இருக்க முடியும். அதனால் அன்புதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை...என்று சொல்ல, அந்த யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

உடனே அந்த வீட்டின் தலைவி வீட்டுக்கு வெளியே சென்று, உங்களில் அன்பு யாரோ, அவர் உள்ளே வரலாம்..என்று சொல்ல, அன்பு என்ற பெரியவர் வீட்டின் உள்ளே சென்றார். அன்பைத் தொடர்ந்து வெற்றி, செல்வம் என்ற மற்ற இரண்டு பெரியவர்களும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். இதைப் பார்த்த அந்தப் பெண்மணிக்கு ஆச்சரியம்!

பிறகு அவர்கள் சொன்னார்கள் - "நீங்கள் வெற்றியையோ செல்வத்தையோ அழைத்திருந்தால், மற்ற இருவரும் வீட்டின் வெளியிலேயே தங்கிவிட்டிருப்போம். ஆனால், அன்பை நீங்கள் அழைத்ததால்தான், நாங்கள் இருவரும் உங்கள் வீட்டுக்குள் வந்தோம். காரணம், அன்பு எங்கு சென்றாலும் அதைப் பின்பற்றி, அதன் பின்னாலேயே செல்ல வேண்டும் என்பதுதான் ஆண்டவன் எங்களுக்கு இட்ட கட்டளை!"

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 186

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| ■ | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | ■ |
| 31 | ■ | 33 | 34 | ■ | 36 |

### இடமிருந்து வலம்

1.இலங்கையிலுள்ள வானொலிச் சேவையொன்று (குழம்பியுள்ளது)
7.காலம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது)
14.வரவுக்கேற்ப இது அமைவது சிறப்பு. (குழம்பியுள்ளது).
23.விகுதியொன்று. இருள் என்றும் பொருள்படும்.
25.நிலம் என்றும் கூறலாம் (திரும்பியுள்ளது).
28.வேதனம் என்பதன் ஒத்த கருத்து.
33.பாம்பினங்களில் ஒன்று.
36.பெரிய என்று பொருள்படும்.

### மேலிருந்து கீழ்

1. வீதி என்றும் கூறலாம்.
2. விளைவு என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
3. சீர் அல்லது பேறு என்று கூறலாம் (குழம்பியுள்ளது)
4. கஞ்சி என்று பொருள்படும்.
6. உலோபியின் எதிர்ப்பதம்.
19. அண்மையில் வெளியான திரைப்படம்.
23. ஆணும், பெண்ணுமற்ற பிறப்பு.
28. வீட்டின் பாகமொன்று .

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 19.09.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-186
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 184க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

பி. ராமச்சந்திரன், C/O ரஞ்சனி, A-421 பனாவத்த வீதி, கராகொட, எட்டியாந்தோட்ட.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. நா. நேசநாதன், 23/31, சித்திவினாயகர் வீதி, அமிர்தகளி, மட்டக்களப்பு.
2. பிரணவி பிரகலாதன், 276, மூர்வீதி, மன்னார்.
3. எஸ். சஜி கீர்தனா, 105 கல்லூரி வீதி, திருகோணமலை.
4. ஆர். வனிதா, 58 கிறீன் லேன், கொழும்பு - 13.
5. என். ஹமீட், 48 ஜெயந்தி மாவத்தை, அனுராதபுரம்.
6. இரா. தினுஷா, இல 265 மெயின் வீதி, கொட்டகலை.
7. எம். எச். எம். ஜவ்பர், 145. கல்பொக்கை வீதி, வெலிகம.
8. யூ. என். இஸ்ஸதீன், 352/7 முள்ளிப்பொத்தான, கந்தளாய்.
9. ஜே. ஜே. ஷிஹானி, 22/1 காலவத்த, கட்டுகஸ்தோட்டை.
10. எஸ். எம். ஷக்கரியா, அல்-மினாபுரம், தில்லையடி, புத்தளம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 184 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரீ 1 | தி 2 | ம 3 | ன் 4 | ற 5 | ம் 6 |
| யா 7 | வி 8 | தி 9 | ■ | டு 11 | கா 12 |
| ■ | ■ | ற 15 | த் 16 | கு 17 | தி 18 |
| ரீ 19 | ■ | ■ | ரு 22 | ■ | ஷோ 24 |
| ஆ 25 | ணை 26 | ■ | தை 28 | கோ 29 | ■ |
| தை 31 | அ 32 | த் 33 | ■ | ழை 35 | வா 36 |

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

## மௌனத்திடம் கோபித்து விடு!

சோலைக்குள் நீ சென்றால் பூக்கள் எல்லாம் தங்கமாக மாறிடும்.

காலைச் சூரியன் உன்னைக் கண்டால் இனி பகல், இரவு உலகுக்குக் கிடையாது.

தென்றல் நீ இருக்கின்ற திசைபார்த்தே வீசுகிறது, உன்னைச் சுவாசிப்பதற்காக!

கவரிங் நகைக்கடைக்கு நீ சென்றாய், எல்லா ஆபரணங்களும் தங்கமாகின.

பொருள் வாங்க நீ கடைக்குச் சென்றாய், கடையையே தரவா? என்றான் வியாபாரி.

உன்னை எனக்குள் புகழ்ந்தேன் நான்.

உன் அழகை என் மனம் தொட்டதிலிருந்து என் இதயம் வசந்தகாலமானது.

இப்பொழுதெல்லாம் இரவுகளை நான் அதிகம் காதலிக்கிறேன், நீ என்னிடம் வந்து செல்லுகிறாய் என்பதால்!

நீ பக்கத்துத் தெருப் பேரழகி.

உனது தெருவில் பெருங் குழியே விழுந்து விட்டது, என் காலடிச் சுவடுகளால்!

உன் கூந்தலில் எத்தனை முடிப் பூக்கள் என்ற எண்ணிக்கை கூறவா?

உன் இமை இதழ்கள் எத்தனை தரம் துடிக்கின்றன என்று சொல்லவா?

உன்னைக் கண்ட குயில்கள் குக்கூ கூறுவதற்குப் பதிலாக, 'ஐ லவ் யூ' சொல்லும்.

பார்வையால் மட்டும் நீ என்னை அச்சடித்தால் போதுமா?

என் வார்த்தைகளைப் பூக்களிடம் காண்பித்தபோது உன்னிடம் காண்பிக்குமாறு அவை கூறின.

உன் கண்களால் என்னை அணைப்பாயா?

உன் வார்த்தைகளால் என்னை அழைப்பாயா?

என்னைச் நீ சேமித்து விடு உன் இதயத்தில்!

உன் மௌனத்திடம் கோபித்துவிடு!

இன்று உன் தாமரைக் கையில் ஒரு குழந்தைப் பூ மலர்ந்திருந்தது. உன் இதழ்கள் குழந்தையில் முத்தம் எழுதிக் கொண்டிருக்க, உன் விழிகள் என்னைத் தூண்டிக் கொண்டிருந்ததே!

அந்த முத்தங்கள் என்னுடையவைகளா?

உன்னிடமிருந்து நான் திருடிய ஒற்றை ரூபா நாணயம் தொலைந்தபோது ஒரு சமுத்திரம் என் விழிகளில் உண்டானதே!

ஒரு வருடமாக ஒரு மல்லிகை மலர் வாடாமல் இருக்கிறது,

அது உன் கூந்தலில் இருந்து உதிர்ந்ததால்!

உன்னை நினைத்து அதற்கு முத்தம் வைக்கும் போது அது மீண்டும் மீண்டும் மலர்கிறதே!

நான் அரிசி வாங்கி வந்து உன் வீட்டுக்கு முன்னால் கொட்டிவீட்டு, ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கிக் கொண்டிருந்தேன் நீ வருவாயென்று!

"அரிசியை இப்படியா கொட்டிவீடுவாங்க...?" என்றாய் நீ வந்து.

நீயும் சேர்ந்து அரிசி பொறுக்கி நிரப்பினாய் என் பையில். ஆனால் நிரம்பியது பையல்ல; என் உள்ளம்.

"நீ பொறுக்குவது அரிசியல்ல... என் மனசு..." என்றேன் நான்.

"ஆசையைப் பாரு...ஆசையை...இனி நீங்க அரிசியை...வீட்டுக்கு முன்னாடி போடாமல் பானையில் போடுங்க..." என்றாய்.

"உன் விரல் தொட்ட அரிசி இனி இனிக்கும்...அதனால் காப்பி கலக்கலாம்..." என்று உன்னை விழிகளால் இழுத்தேன்.

"நீங்க என் மனசோடு கலந்ததை விடவா...இனிக்கப்போகிறது!?" என்றாய் நீ.

வார்த்தைகளால் நீ என்னைத் தாஜ்மஹாலாக்கினாய். நான் அரிசிக்கு ஆயிரம் முறை நன்றி சொன்னேன்.

# இவ்வாரச் சிறு கதைகள்

# காத்திருக்கும் கன்னி...

**கமலா** வீட்டு வேலையை முடித்துக் கொண்டு ஆபிஸிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். அந்த வேளையில் கிஸ்ணா வந்தான். வேலை முடிந்து வெளியில் வந்த கமலா கிஸ்ணாவைப் பார்த்தாள். “என்ன கிஸ்ணா ஆபிஸுக்குப் போகவில்லையா? இல்லை கமலா, உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்” என்று நின்ற இடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். “சரி வா கொஞ்ச தூரம் போவோம்” என்றாள்.

இருவரும் நீண்ட தூரம் சென்றார்கள். “என்ன கிஸ்ணா என்னைப் பார்க்க வந்தேனென்று சொன்னாய் விஷயத்தைச் சொல்லேன். கமலா வந்து... என்ன என்றா...எப்படி உனக்கிட்ட சொல்வதென்று தெரியாமல் இருக்கு அது” என்று தயங்கினான். கமலா போவதற்கான பஸ் வந்து விட்டது கமலா பஸ்ஸில் ஏறி விட்டாள். கிஸ்ணாவும் அந்த பஸ்ஸில் ஏறினான். அவனும் அப் பஸ்ஸில் ஏறி ஓரிடத்தில் இறங்கி விட்டான். கமலா தன்னுடைய ஆபிஸுக்குச் சென்றாள். தன் இருக்கையில் அமர்ந்தவாறு காலையில் வந்த கிஸ்ணாவைப் பற்றி யோசித்தாள். கிஸ்ணா, கமலா படித்த பாடசாலையில் தான் படித்தான். ஆனால் அவன் கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவன். யாருடனும் பேச மாட்டான். தானும் தன்னுடைய படிப்புமாய் இருப்பான். அவன் கமலாவின் பாடசாலைக்கு இடையில் வந்து சேர்ந்தவன். அப்போது கமலா தரம் 10இல் படித்துக் கொண்டிருந்தாள்; அவளுடைய வகுப்பிலே கிஸ்ணாவும் வந்து சேர்ந்தான்.

நாட்கள் உருண்டோடியது. அதன் பின் கமலாவும் கிஸ்ணாவும் நண்பர்கள் ஆனார்கள். அப்படியே இருவரும் தங்களுடைய கவனத்தைப் படிப்பிலே செலுத்தினார்கள். பின் உயர்தரக் கல்வியில் இருவரும் சித்தியடைந்தார்கள்.

கமலாவின் தாய் தந்தையர் கமலாவை வேறு பாடசாலையில் சேர்ப்பதாக முடிவு பண்ணினார்கள். ஆனால் கமலாவுக்கு வேறு பாடசாலைக்குச் செல்வது கொஞ்சம் கூட விருப்பமில்லை. கிஸ்ணாவைப் பிரியவும் விருப்பமில்லாமல் இருந்தாள். ஆனால் அவளுடைய பெற்றோர் அவளை விடவில்லை, வேறு பாடசாலையில் சேர்த்து விட்டார்கள்.



–முருகையா சிவராதினி,
கோளாவில் - 01.

கமலாவுக்கு அப் பாடசாலையில் தெரியாத புது முகங்கள். அதனால் அவளுக்குக் கொஞ்சம் தயக்கமாய் இருந்தது. நாளடைவில் அவளுக்கு எல்லோருடனும் பழக்கம் ஏற்பட்டது. அவளும் அங்கு குதூகலமாய் நாட்களைக் கழித்தாள். கமலா கொஞ்சம் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். அதனால் வேறு பாடசாலையில் சென்று படித்தாள். அப்படியிருந்தும் கிஸ்ணாவுடன் கடிதம் மூலம் தொடர்பு வைத்திருந்தாள்.

கிஸ்ணா வசதி குறைந்தவன், அதனால் அப்பாடசாலையிலே படித்தான். அப்படியிருந்தும் படிப்பில் கெட்டிக்காரனாய் இருந்தான். கிஸ்ணா அப்பாடசாலையிலே படிப்பை முடித்து, மேல் படிப்பு படிக்க வசதி இல்லாத காரணத்தால் தனது படிப்புக்கு ஏற்ற வேலை ஒன்றைத் தேடினான். அவனுக்கு சாதகமாய் வேலையும் கிடைத்தது.

கமலா தனது மேல் படிப்பைத் தொடர்ந்து 3 வருடங்கள் படித்தாள். அதன் பின் நான் இனி படிக்கவில்லை வேலை செய்யப்போகிறேன் என்று தனது பெற்றோரிடம் சொன்னாள். அதற்கு அவளுடைய பெற்றோர் சம்மதிக்கவில்லை. மேலே படிக்குமாறு கமலாவிடம் கூறினார்கள். ஆனால் கமலா தனது பிடிவாதத்தை விடாமல், தான் வேலைக்குச் செல்லத்தான் போகிறேன் என்று கூறி, விட்டு தனது சிறிய தாயார் வீட்டுக்குச சென்று விட்டாள். அங்கிருந்து வேலையொன்றைத் தேடினாள்.

அந்த வேளையில் தான் தனது நண்பனான கிஸ்ணாவைச் சந்தித்தாள். இருவரும் சந்தோஷமடைந்தார்கள். வெகு நாட்களாகப் பிரிந்திருந்த நண்பர்கள் இருவரும் அன்று சேர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின் தொடர்ந்து அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள். கிஸ்ணா தான் ஒரு கம்பனியில் வேலை செய்கிறேன். ஆனால் எனது குடும்பத்தின் சூழ்நிலைக்குத் தரும் சம்பளம் போதாது, வேறு வேலை செய்யப்போகிறேன் என்று கமலாவிடம் சொன்னான்.

கமலாவுக்கும் ஒரு ஆபிஸில் வேலை கிடைத்தது. இருவரும் வேறு வேறு ஆபிஸில் வேலை செய்தார்கள். அந்த வேளையில் தான் கிஸ்ணா கமலாவைத் தேடி வந்தான். எதற்காக வந்திருப்பான், என்ன சொல்ல நினைத்திருப்பான் என்று நினைத்தாள். நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

கமலா தன்னை சுதாகரித்துக் கொண்டு தன் இருக்கையில் இருந்து எழுந்து வெளியே வந்தாள் ஆபிஸைவிட்டு.

அங்கு மறுபடியும் கிஸ்ணாவைப் பார்த்தாள். கமலாவும், கிஸ்ணாவும் பேசிக்கொண்டே சென்றனர். அப்போது கமலா கிஸ்ணாவைப் பார்த்துக் கேட்டாள், என்ன கிஸ்ணா காலையிலே வந்து என்னிடம் ஏதோ பேசனும் என்று சொன்னாய் சொல்லன் என்று.

கமலா அது வந்து...என்னன்றா எனது தங்கை அமுதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாக்கப்பட்டுள்ளது. அவ மாப்பிள்ளை வீட்டார் கொஞ்சம் வசதியானவர்கள். அதனால் சீதனம் அதிகமாய் கேட்கிறார்கள். அந்தளவு பணம் எங்களிடம் இல்லை. ஓரளவு தான் என்னிடம் இருக்கிறது. கொஞ்சம் பணம் தேவை. அதனால் தான் உன்னிடம் கேட்கலாம் என்று வந்தேன் என்று சொன்னான். அதற்கு கமலா கூறினாள் இவ்வளவுதானா பிரச்சினை, இதைக் காலையிலே என்னிடம் சொல்லியிருக்கலாமே என்று சொன்னாள். அதற்கு கிஸ்ணா மிகவும் நன்றி கமலா என்று சொன்னான். இதுக்கெல்லாம் எதற்கு இவ்வளவு பெரிய வார்த்தை. நாளைக்கு ஆபிஸில் என்னை வந்து பாருங்கள் என்று கமலா கிஸ்ணாவிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

கிஸ்ணா தனது சகோதரிக்கு நடக்கப் போகும் கல்யாணத்தை நினைத்து மகிழ்ச்சி கடலில் மூழ்கினான். அவன் அதையே நினைத்து நடந்து கொண்டிருந்தான். ஆனால் கமலாவோ என்றோ ஒருநாள் கிருஷ்ணா தன்னைத் துணையாக ஏற்றுக் கொள்ள விரும்புவதாக கூறுவான் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள்.

*(யாவும் கற்பனை)*

---

# சந்தேகம்!

**அன்று** ஒரு ஞாயிற்றுக்கிழமை. கம்பனி விடுமுறை நாள். அதிகாலையில் எழுந்திருந்த பிரதாப், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு முன் ஹாலில் அமர்ந்திருந்து இலங்கைக்கும், தென்னாபிரிக்காவுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் மெட்சைத் தொலைக்காட்சியில் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஹோலின் பெல்லை வெளியில் யாரோ அழுத்துவது அவன் காதுகளுக்குக் கேட்டது. கதவருகே எழுந்து சென்று மெதுவாக கதவினைத் திறந்தான் பிரதாப். சிற்பக் கூடத்தில் புதிதாக செதுக்கிய அழகிய சிற்பம் போன்ற இளம் நங்கை ஒருத்தி இமைச் சிறகுகள் படபடவென அடிக்கும் வண்ணம் பொட்டிட்ட வட்ட நிலவாய் நின்று கொண்டிருந்தாள். அவள் அணிந்து வந்திருந்த மஞ்சள் நிறச் சல்வாரும், முகத்துக்கு அவள் அணிந்திருந்த கறுப்பு நிற மூக்குக் கண்ணாடியும் அவளது அழகை மேலும் மெருகூட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

“இ...இது மிஸ்டர் பிரதாப் வீடுதானே?” என்று பவ்யமாக அவள் விசாரித்தாள். “ஆ...ஆமா” என்றான் பிரதாப். “அவர் இருக்கிறாரா என்று அவள் கேட்க, பிரதாப்பிற்கு சிரிப்பு வந்துவிட்டது. ஒருவாறு சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னான். “பிரதாப் நான் தான்” என்று. ஓ...மை காட். என்னால நம்பவே முடியல்லை. நீங்கதான் பிரதாப் என்று. உள்ளே வரலாமா? என்று அவள் கேட்க, “ஓ யெஸ் தாராளமாக வாங்க” என்று அவளை மிக அன்போடு வரவழைத்து முன் ஹோலில் அவளை அமரச் செய்தான் பிரதாப்.

“என் பேரு ப்ரியா. ஒங்க பக்கத்து ஊருல குடியிருக்கிறேன். எனக்கு கதை, கவிதைன்னா ரொம்பவும் பிடிக்கும். உங்க கதை, கவிதைகளை பத்திரிகையில் நிறையவே படிச்சிருக்கிறேன். அதனால ஒங்களை நேரிலேயே பார்க்கணும் போல இருந்திச்சு. புறப்பட்டு வந்துட்டேன். கொஞ்ச நாட்களாக உங்க கதைகள் எதையும் பத்திரிகையில் காணோம்? ஏன் எழுதுறதை நிறுத்திட்டீங்க...? என்ன காரணம்? என்று அவள் ஒன்றன் பின் ஒன்றாக கேள்விகளைத் தொடுக்கவும், பிரதாப்பின் மனைவி மதுஷா அங்கு வரவும் நேரம் சரியாக இருந்தது.

“வீட்டுக்கு யாராவது வந்தால் போதுமே பொண்டாட்டி - குழந்தை இருக்கிறதை மறந்து விடுவீங்களே?” என்று முணு முணுத்தபடி கையில் இருந்த ஒரு வயதும் நிரம்பாத குழந்தையைப் பிரதாப்பின் கைகளுக்குள் வெறுப்பாக திணித்து விட்டுச் சென்றாள் அவனது மனைவி மதுஷா. ‘ச்சே என்ன பொம்புள இவள். இந்த நேரம் பார்த்து இப்படியா நடந்துக்கணும்” என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான் பிரதாப். பிரதாப்பின் நல்ல மனசுக்கு நல்லாவே வந்து வாய்த்திருக்கிறாள். இவளுடன் எப்படிதான் பிரதாப் காலத்தைக் கழிக்கிறானோ? என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டாள் ப்ரியா. இப்போது பிரதாப் கதை எழுதுவதை நிறுத்திக் கொண்டதற்கான காரணம் ப்ரியாவுக்கு நன்றாகவே புரிந்தது.

“பிரதாப் குழந்தைக்கு என்ன பெயர் வைத்து இருக்கிறீங்க?” என்றவள், அவனது கையில் இருந்த குழந்தையை வாஞ்சையுடன் வாரி தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் ப்ரியா. குழந்தை வீரிட்டு அழுதது. என்னங்க குழந்தைக்கு என்னாச்சு. ஏன் அழுறான். நீங்க என்ன பண்ணுறீங்க? சமையல் அறையில் நின்று கொண்டு கணீர் என்று குரல் கொடுத்தாள் மனைவி மதுஷா. அதில் கர்ண கடூரம் தெரிந்தது. இதற்கப்புறமும் அங்கிருக்க விரும்பாத ப்ரியா, பிரதாப்பிடம் இருந்து வேதனையுடன் விடை பெற்றுச் சென்றாள்.



–வின்சன்,
சத்துருக்கொண்டான்.

“மது ஒனக்கு இப்போ என்னாச்சு. ஏன் ஒரு நாளும் இல்லாமல் இன்று மாத்திரம் இப்படி என்னை எடுத்தெறிந்து பேசுறே” என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான் பிரதாப். “இதோ பாருங்க. ஒங்களை நான் இப்படியெல்லாம் கோவமாக பேசியிருக்கா விட்டால் அவள் போய் இருக்கவே மாட்டாள். இந்தக் காலத்துல எவரையுமே நம்ப முடியாது. நீங்க எனக்கு மட்டும்தான் சொந்தம். ஒங்களை மற்றவங்க பங்கு போட்டுக்கொள்ள நான் விடமாட்டேன். அவள் சிரிச்சு சிரிச்சு ஒங்களோடு பேசினதைப் பார்க்க எனக்கு ரொம்பவும் பயமாக இருந்திச்சு. என்கிட்டேயிருந்து ஒங்களை அவள் பிரிச்சிடுவாளோ என்று நெனைச்சுத்தான் நான் உங்களோடு அப்படி கோவப்படுறமாதிரி நடந்துக்கிட்டேன். அதற்காக என்னை மன்னிச்சிடுங்க, என்றவள் அவனது கரங்களைத் தனது கரங்களுடன் ஒன்றாகச் சேர்த்து கோர்த்துக் கொண்டாள். தனது மனைவிக்கு தன் மேல் இப்படி ஒரு ‘சந்தேகம்’ வந்ததைப் பிரதாப்பினால் நம்பவே முடியாமல் இருந்தது.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**எதை** எப்படிச் செய்தாலும் அன்பு என்னும் ஆயுதங்கொண்டு செயற்பட்டால் அச் செயலானது வெற்றி பெறும் என்பதில் எவ்வித ஐயமும் வேண்டியதில்லை என்பதை எத்தனையோ பெருமக்கள் செய்து காட்டி இருக்கிறார்கள். குறிப்பாக உலக உத்தமர் என்ற பெயர் எடுத்தவர் காந்திஜீ. அவரது சிறுபராயந் தொடக்கம் இறுதிவரை தனது வாழ்க்கையில் தவறாது கையாண்ட அறம், உள்ளத்தால் பொய்யாதிருத்தல் ஆகியவைதான் அவரை மகானாக்கியது என்பதை எத்தனையோ அறிஞர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய ஓர் பெரும் ஞானி கூடக் கோபப்பட்ட நேரங்களுண்டு. என்றால், ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் அதிலும் ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்யும். அந்தச் சிறப்புத்தான் என்ன? என்று கேட்போமானால் அவருடைய கோபமானது நீடித்து எவரையும் பழி தீர்க்கும் நோக்கமானதாக இருக்கவில்லை. மற்றவர் விடும் தவறைச் சுட்டுவதாகவே இருந்தது அதுதான் அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தி நின்றது. அதனாலேயே அவர் உத்தமராக்கப்பட்டார். மகாத்மா என்றழைக்கப்பட்டார். மனிதனின் பழிதீர்க்கும் உணர்வு என்று களையப்படுகிறதோ அன்று அவன் மகாத்மா ஆவதற்கான அடித்தளத்தை இடுகிறான் என்பது தெளிவு.

**"குணமென்னும் குன்றேறி நின்றார் 'வெகுளி'**
**கணமேனுங் காத்தல் அரிது** குறள் : 29

அறத்தையே நோக்காகக் கொண்டவர்களின் கோபமானது கணப்பொழுதேனும் நிலைத்து நிற்பதில்லை. குணக்குன்று என்னும் பதத்திற்குப் பொருத்தமானவர்கள் இவர்களே.

# அன்புக் கரங்களில் அடங்கிய பாவை!

**வி**க்கிரமனின் முகத்தை நேராகப் பார்ப்பதற்குத் துணிவில்லாத மரகதவல்லியின் கண்கள் நிலத்தை நோக்கியபோது, பளிங்கு பதிக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்தில் அவன் முகம் மட்டுமல்ல, அவனது முழு உருவமுமே தெரிந்தது. அவள் திடுக்கிட்டாள். 'என்னயிது?' நிலத்தைக் கூடப் பார்க்க முடியாததோர் நிலையில் அவள் தடுமாறினாள். உள்ளத்தில் நிறைந்திருக்கும் அந்த எழில் உருவத்தை நேராகப் பார்த்து மகிழ்வதற்கு துணிச்சலோ, நிலைமை வருமென்று தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டேன் என்று அவள் நினைத்த பொழுது, அவள் மனதில் திடீரென்றொரு புயல் உருவானது. அதை உணர்ந்த மரகதவல்லி, "உங்கள் தூக்கத்தைக் கெடுத்துவிட்டதற்கு மன்னியுங்கள்" என்றவள், தன் இருப்பிடம் செல்வதற்குத் திரும்பியபொழுது விக்கிரமனின் இரும்புக் கரம் அவள் கையைப் பற்றி அவளைத் தன் மார்போடு அணைத்தது.



சந்தர்ப்பமோ கிடைக்காத போதெல்லாம் அதற்காக ஏங்கித் தவித்தவள் இன்று அவனை நேராகப் பார்க்காமலேயே பளிங்குத் தரையில் வீழ்கின்ற பிம்பத்தில் அவன் தோற்றத்தைக் கண்டதும் தன்னையே மறந்து அவனது நிழல் தோற்றத்தையே கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள் மரகதவல்லி. நிலத்தையே பார்த்துக்கொண்டிருந்த மரகதவல்லியின் மௌனத்தைத்

## தருவது கற்பகன்

தொடர்ந்தும் அனுமதிக்க விக்கிரமன் விரும்பவில்லை.

"ஏது தூக்கத்தில் நடக்கும் பழக்கம் கூட இருக்கிறதா?" என்று விக்கிரமன் கேட்டதும், தூக்கத்திலிருந்து விழித்தவள் போல் திடுக்கிட்டு நிமிர்ந்த மரகதவல்லி, "அப்படி ஒன்றும் இல்லை" என்றதும், "அப்படி இல்லையென்றால், நடு நிசியில் ஏது இந்தப் பக்கம்?" என்றான் விக்கிரமன்.

இப்படிக் கேட்டதும் மரகதவல்லியின் முகத்தில் செம்மை மறையத் தொடங்கியது. எத்தனை ஆசையோடு இவரைக் காணவந்த என்னை எப்படியெல்லாம் கேள்விகேட்டு அவமானப்படுத்துகிறாரே! இப்படியொரு

"போதும் உங்கள் சாகசங்கள். கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் ஆண்களின் தொன்றுதொட்ட தோரணைகள் என்பது சரியாகிவிட்டது" என்றாள் மரகதவல்லி. "அனுபவம் பேசுகின்றதோ?" என்றான் விக்கிரமன். அவள் ஏதும் பேசவில்லை. மௌனித்து நின்ற அவள் கண்களிலிருந்து விக்கிரமனின் கையில் விழுந்ததோர் துளி தணலாகச் சுட்டது. விக்கிரமன் திடுக்கிட்டு கையைப் பார்த்தான். அவன் தீப்பொறியென்று நினைத்தது நீர்த்துளி என்று கண்டபோதுதான், அது வெறும் நீர்த்துளியல்ல, மரகதவல்லியின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த்துளி என்று அறிந்ததும் அவன் கலக்கம் மேலும் உயர்ந்தது. அப்போதுதான் அவன் மரகதவல்லியிடம் கேட்ட கேள்வி, அவளுக்கு எவ்வளவு பெரிய தாக்கத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை உணர முடிந்தது. வேடிக்கையாக அவன் கேட்ட கேள்வி இப்படி வினையாகி விடுமென்று அவன் எதிர்பார்க்கவில்லைத்தான். ஆயினும் நிலைமை இப்படியாகிவிட்டதே என்று கலங்கினான்.

அந்தக் கலக்கத்திலும் அவன் தெளிவு பெற வெகு நேரம் பிடிக்கவில்லை. "மரகதவல்லி! நீ மாசற்ற மரகதம் என்பதை நான் அறியாமலில்லை. ஏதோ விளையாட்டாகக் கூறியது உன் மனதை இப்படிப் புண்படுத்துமென்று நான் நினைக்கவில்லை. உன்னிடம் அதற்காக ஆயிரந் தடவைகள் மன்னிப்புக் கேட்டாலும், நான் அமைதியடைய முடியாது. இதுவரையில் எந்தவொரு ஆண்மகனின் நிழல் கூட உன்மேல் பட வாய்ப்பிருந்ததில்லை என்பது கூட நான் அறிவேன். என்னை மன்னிப்பாயா?" என்று கூறும்போது, அவன் நா தழுதழுத்ததைக் கண்டதும், "இளவரசே! என்ன இதெல்லாம். சிறுபிள்ளைபோல் கலங்குகிறீர்களே?" என்றவள் முகத்தில் புன்முறுவல் தோன்றியபோது, விக்கிரமன் அவள் முகத்தை ஏறிட்டான். அந்த முகத்தில் குளிர்மை படர்ந்து, கூம்பியிருந்த தாமரை மொட்டு மலர்வது போல், அவள் செவ்விதழ்களினிடையே முத்துக்கள் ஒளிர்வதைக் கண்ட விக்கிரமன், "மரகதம்" என்றவாறு அவளை இறுக அணைத்துக் கொண்டான். எவ்வளவு நேரம்தான் அப்படியே நின்றார்களோ, அது அவர்களுக்கே தெரியாது. அந்த இதமான அணைப்பில் நாழிகையானதே தெரியவில்லை.

மரகதவல்லி மெதுவாக நிமிர்ந்து விக்கிரமனின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் இருந்த தாபம் அவன் உள்ளத்தில் ஏதோ செய்தது. மெதுவாகக் குனிந்து அவள் உச்சியில் முத்தமிட்டான். அவள் உடலெல்லாம் சிலிர்த்தது. அவளை அறியாமலே அவள் கண்கள் மூடின. அது உறக்கமா? அவன் தோளில் சாய்ந்தாள் மரகதவல்லி.

அது தூக்க மயக்கமா? இல்லை? விக்கிரமன் விழித்துக் கொண்டான். மரகதவல்லி அவன் மார்பிலிருந்து மெதுவாக விடுபட்டு கண்களைத் திறந்தாள். "இளவரசே!..." என்று முடிப்பதற்குள் "அது நேற்றுவரை. இன்னும் விடிவதற்கு சில நாழிகைதானே இருக்கிறது. அதனால் இன்று நான்...?" எனக்குச் சொந்தமானவர்" என்று மரகதவல்லி கூறியதும், "மரகதம்! இந்த ஜென்மத்தில் என்னைவிடப் பாக்கியசாலி இந்த உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது" என்றான் விக்கிரமன். அது கேட்டதும் "என்னை விடவா?" என்று அவன் தோள்களைப் பற்றித் தன்பக்கம் இழுத்தாள் மரகதவல்லி.

*"பட்டினியேன் கூற்றென்பதனை இனியறிந்தேன் பெண்டகையால் பேரமர்க் கட்டு"*

அதிகாரம் – 109.
குறள் – 1083.

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியாவுக்கு இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் எண்ணமெல்லாம் இல்லையா?**
-ச.பொன்னுத்துரை, லிங்கநகர்-

கூத்தாடிகள் போய் சந்திக்கக் காத்திருக்க முடியும் என்றால், சிந்தியாவுக்கு ஏன் முடியாது என்று நீங்கள் சிந்திப்பது புரிகிறது. நமக்குக் காத்திருப்பது சரிவராது. மன்மோகன் சிங் விரும்பி அழைக்கும் போது சந்தித்தால் போதும்.

✉ **தற்போது நடந்து கொண்டிருக்கும் மோதல்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்பு என்ன?**
-ப.ஏகாம்பரம், சொய்ஸா பிளட்ஸ்-

பலவற்றைச் சொல்லலாம். குறிப்பாக, புலிகளைப் பங்கரை விட்டு வெளியில் இழுத்து அவர்கள் இது நாள் வரை காட்டிக் கொண்டிருந்த மாயையை உடைத்து அவர்களது பலம், பலவீனத்தை வெளி உலகுக்குக் காட்டியதே பெரிய பங்களிப்புத்தானே.

✉ **விடுதலைப் போராட்டத்தின் தற்போதைய முக்கியமான காலகட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் மூச்சுக் காட்டாமல் இருக்கிறாரே!**
-எம்.மாரிமுத்து, மாத்தளை-

ஆலோசகர் என்று பேர்தான். அவரது ஆலோசனையை தலைமை தொடக்கம் கீழ் மட்டம் வரைக்கும் யாரும் கேட்பதில்லை என்ற ஆதங்கம் ஒரு பக்கம், மறுபக்கம் லண்டனில் பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதால் இப்போதைக்கு லண்டன் பிரஜையாக இருப்பதுதான் புத்திசாலித்தனம் என்றுதான் பதுங்குகிறாராம்.

✉ **இப்போதெல்லாம் பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாய் போட்டால் கேவலமாகப் பார்க்கிறார்கள். ஒரு ரூபா என்றால் கேவலமா? இதுக்கு என்ன செய்யலாம்?**
-எச்.சுகந்தி,வத்தளை-

விலைவாசி உயர்ந்து விட்டதை அவர்களும் வெளிப்படுத்துகிறார்கள். உங்களுக்கு இன்னொரு விஷயம், மேலதிகமாகத் தெரிந்து கொள்ளுங்கள். உலகிலுள்ள அநேகமான கோடீஸ்வரர்கள் ஒரு டொலர் சம்பளம் தான் பெறுகிறார்கள்.

கூகுள் இணைய நிறுவனங்கள் செர்கே பிரின் (Sergey Brin) லாரி பேஜ் (Larry Page) இருவரும் ஒரு வருடத்துக்குச் சம்பளமாகப் பெறுவது ஒரு டொலர் தான். ஆனால், சென்ற ஆண்டு கூகுள் நிறுவனம் ஆறு மில்லியன் டொலர்களுக்கு மேல் சம்பாதித்துள்ளதாம். தனது பணியாளர்களுக்கு போனஸாக வாரி வழங்குகிறது கூகுள் நிறுவனம். அந்த நிறுவனத்தில் பல பங்குகளைக் கொண்டிருக்கும் மேற்படி இருவரும் மெகா கோடிகளில் ஜொலித்தார்களாம்.

இவர்களைத் தொடர்ந்து யாஹூ நிறுவனத்தின் தலைவர் டெர்ரி செமல் (Terry Semel) தனக்கும் ஒரு டொலர் சம்பளம் போதும் என்று அறிவித்துவிட்டார்.

✉ **கியூபாவின் மாவீரன் பிடல் காஸ்ட்ரோ உடல் நலமடைந்து விட்டார் என்ற செய்தி எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. உமக்கு?**
-பி.ராமமூர்த்தி, பொலனறுவை-

எனக்கும்தான். ஆனால் 638 தடவைகள் அவரை கொல்லத்திட்டமிட்டு முட்டாள் தனமாகத் தோற்றுப்போன அமெரிக்காவுக்குக் கவலையாக இருக்கும்.

✉ **முன்னர் இருந்த போர் நிறுத்த ஒப்பந்தம் மீண்டும் அமுலுக்கு வரும் வாய்ப்பு இருக்கிறதா?**
-ஜெ.மகேஸ், பொகவந்தலாவ-

மாவிலாறு, சம்பூர், முகமாலை, குளியப்பிரதேசம் இந்த இடங்களெல்லாம் திரும்பவும் புலிகளின் ஆளுமைக்குள் வருவது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினம்.

✉ **வாகரை கதிரவெளிப்பகுதியில் அல்லற்படும் 43 ஆயிரம் தமிழ் அகதிகளையும் யாரும் கவனிக்காமலிருக்கிறார்களா?**
- கிருஷ்ணமூர்த்தி, மட்டக்களப்பு-

அவர்கள் அரச கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருப்பதால் உதவிகளை வழங்குவதில் பல சிரமங்கள் உள்ளன. அவர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கு புலிகள் அனுமதித்தால் நல்லது.

✉ **சிந்தியா எனக்கு சினிமாவில் நடிக்கவேண்டும் என்று தீராத ஆசை. நான் என்ன செய்யவேண்டும்?**
எஸ்.பிரேம்குமார் - கண்டி.


அந்தத் துறையில் ஆர்வமாக இருப்பதும் தவறில்லை. ஆனால் அதன் அடிப்படையை சரியாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இதோ நீங்கள் சினிமாவைப் பற்றித் தெரிந்து கொள்ள W.W.W.WorldOfry.Com இணையத்தளமுடாகத் தேடுங்களேன். பிரயோசனமாக இருக்கும்.

✉ **இந்த வருடத்துக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதுக்கு மஹேல, முரளி இவர்களின் பெயர்களும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன வாய்ப்பு எப்படி இருக்குது?.**
-எம்.எச்.முபாறக், மருதானை-

இதுவரையான தகவல்களின்படி இந்திய அணித் தலைவர் ராவிட்டுக்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆசியருக்குக் கிடைத்தால் மகிழ்ச்சிதானே...

✉ **சிந்தியா ஜோக் சொல்லி நாளாகிறதே?**
-பஸ்மினா, பேருவளை-

ஆமால்ல...



திருமணத்தின் போது

"படித்துச் சிரித்த ஜோக் ஒன்று"

ஒருவர்:- ... காதலி... பொண்டாட்டினு வாழ்க்கை எப்படிப் போகுது...

மற்றவர்:- அட ஏம்பா... இல்லாததையும், பொல்லாததையும் கேட்டு வயித்தெரிச்சலைக் கொளப்புற"

ஓ... கேவா...

✉ **"சில்லுனு ஒரு காதல்" சிந்தியாவின் பிளஸ் பிளஸில் விமர்சியுங்களேன்?!**
-எஸ்.சங்கீதா,மட்டக்குளி-

சூரியா - ஜோதிகா நிஜக் காதல்+ ஏ.ஆர்.ரஹ்மான்+வடிவேலு = பார்க்கலாம், போர்வை தேவையில்லை.

✉ **மலையகத்துக்கு அமைச்சர்கள் அதிகரித்த அளவுக்கு அபிவிருத்தி அதிகரித்ததாகத் தெரியவில்லையே?!**
-எம்.ஆறுமுகம்,ஹட்டன்-

ஆங்கிலத்தில் சொல்வார்கள் "To Many Cooks Spoil the Soup" என்பார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் கூட நஞ்சு தானுங்களே...

✉ **அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் தொடர்ந்து கொல்லப்படுகிறார்களே?**
-கே.தர்ஷினி, வவுனியா-

மூதூரில் நடந்த சம்பவத்துக்குப் படையினர் மீது குற்றம் சுமத்தியது கண்காணிப்புக்குழு. கண்காணிப்புக்குழுவை அரசு கண்டித்தது. படையினர் மீது பழி விழட்டும் என்று புலிகளும் செய்திருக்கலாம். துப்பாக்கி ஏந்தி இருக்கக்கூடிய அனைவரும் சந்தேகத்துக்குரியவர்கள்தான்.

✉ **தொலைபேசி, தொல்லைபேசி இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**
-எம்.ரமஷ்ரூப், தெமட்டகொடை-

இலவசமான உள்வரும் நேரத்துக்குள் விஷயத்தை சுருக்கமாகப் பேசினால் தொலைபேசி, அதையும் தாண்டி அர்த்தமில்லாமல் நீட்டி முழக்கினால் தொல்லைபேசி என்று நினைக்கிறேன்.

✉ **முட்டாள்களின் உலகம் எப்படி இருக்கும் சிந்தியா? புளூட்டோவை இனிச் சேர்க்கவேண்டாம்.**
-பா.சிவகுமார், பம்பலப்பிட்டி-

மனிதர்கள் வாழும் இன்னொரு உலகம் பற்றி எனக்குத் தெரியாது என்பதால் இப்போதைக்கு நமது பூமியைப் போல் இருக்கும் என்று தான் சொல்லலாம். தெரிந்ததைத்தான் சொல்லலாம்.

## சமநிலையை...

*04 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

தற்போது முன்னர் இருந்த எல்லைகளுக்குப் படையினர் பின்வாங்க வேண்டுமென்பது புலிகளின் புதிய கோரிக்கை. பிடித்த இடங்களிலிருந்து ஓர் அங்குலம் கூட விட்டுக் கொடுக்க மாட்டோமென்று கூறும் அரச தரப்பு, ஏ-9 பாதையைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. சம்பூர் மோதலின் தொடர்ச்சி, அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமநிலையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளதென்பது உண்மைதான். முகமாலையில் முன்னேறியிருக்கும் படையினர், மேலும் சில பகுதிகளைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கக் கூடிய சாத்தியங்களே அதிகளவில் தென்படுகின்றன. இருந்தாலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த யுத்தத்தில், எதனையும் நிச்சயமாகக் கூற முடியாது. புலிகளிடம் யாழ்ப்பாணத்தை இழந்த படைத்தரப்பு 1996ஆம் ஆண்டு அதனை மீண்டும் கைப்பற்றிக் கொண்டது. யாழ்ப்பாணத்தை இழந்த பின்னர்தான் புலிகள் ஆணையிறவு, கிளிநொச்சியைக் கைப்பற்றினர். மண்ணுக்காக இரு தரப்பும் நடத்தும் யுத்தத்தில் பெருமளவு மக்களே மடிகின்றனர். பெருமளவு அல்லல்களைச் சந்திக்கின்றனரென்பதைப் புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எவ்வளவுதான் மனித உரிமைகள், யுத்த தர்மம், யுத்தக் கைதிகளை மனிதாபிமானமாக நடத்துதல் போன்ற சர்வதேச ஒப்பந்தங்கள் குறித்து கூரைக்கு மேலேறி நின்று எவர் கொக்கரித்தாலும், யதார்த்தத்தில் அவையெல்லாம் மீறப்படுகின்றன என்பதே உண்மையாகும். பயங்கரவாத எதிர்ப்புப் போராட்டத்தின் பிதாமகனாகவும் மனித உரிமைக்காக வக்களலத்து வாங்குவதாகவும் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா, குவாண்டனாமோ சிறைச்சாலையில் கைதிகளைச் சித்திரவதைப்படுத்திய சம்பவங்கள் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன. ஈராக்கில் அமெரிக்காவின் பெண் இராணுவ அதிகாரிகளே, ஆண் கைதிகளை நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்து தமது வக்கிர புத்தியை அம்மணமாகக் காட்டிய சம்பவங்களும் அரங்கேறியிருக்கின்றன. பிரிட்டனில் நிகழ்ந்த ரயில் பாதைக் குண்டு வெடிப்புகளில் அப்பாவியான மெக்சிகோவைச் சேர்ந்த மின் திருத்துநர் ஒருவர் கேட்டுக் கேள்வியில்லாமல் பயங்கரவாதியென்ற போர்வையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இன்றைய யுத்தச் சூழ்நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் ஏன் கொழும்பிலும் கூட அத்துமீறல்கள் தாராளமாகவே இடம்பெறுகின்றன. கடந்த மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 153 பேர் காணாமல் போயிருக்கின்றார்களென்று யாழ். மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்துள்ளது. யுத்தம் ஆரம்பித்த பின்னர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் பதினேழு பேர் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டிருக்கின்றனர். இவர்களில் பதினைந்து பேர் தமிழர்கள். பெரும்பாலும் நிதி நிறுவனங்களோடு சம்பந்தப்பட்டவர்கள். புலிகள் ஆரம்பித்த யுத்தமும் படையினரின் பதில் யுத்தமும் இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களை அடிப்படை வசதிகளின்றித் தத்தளிக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. கிழக்கில் மட்டும் இருபதாயிரம் மாணவர்கள் கல்வியைக் கைவிட்டிருக்கிறார்கள். வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி வளர்த்த செல்வங்களுக்கு 'வாய்க்கரிசி' போடக் கூட முடியாத நிலையில் பெற்றோர்கள் வாழ்வோடு போராடுகிறார்கள். தமிழ்பேசும் மக்கள் இந்த அவலங்களைச் சந்திப்பதற்கு அடிப்படைக் காரணம், புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தது தான். தமிழீழத்துக்காகத் தமிழ் மக்கள் அழுது வடியவில்லை. அவர்களின் அழுகுரல்கள், சாக் கூச்சல்கள் இனியும் புலிகளின் காதுகளுக்கு எட்டத் தவறுமென்றால், புலிகள் சமநிலையிலிருந்து சரிந்து வீழ்வது மட்டுமல்ல, அவர்களின் இறுதி யுத்தமாக முடியுமென்பதுதான் உண்மை.

# இறகு பந்து போட்டி

**3-ஆவது** மாநில அளவிலான இறகு பந்து போட்டி நாமக்கல் கொண்டிசெட்டிபட்டி உள்விளையாட்டு அரங்கில் நடந்தது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் நடிகை ஷாலினி - அனீஸ் கவுஸ்சர் ஜோடி, சென்னையைச் சேர்ந்த அம்ரின் முபாரக் - அர்ச்சனா தேவி ஜோடியை எதிர்கொண்டு ஆடியது.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே நடிகை ஷாலினி ஜோடியின் கை ஓங்கியிருந்தது. இந்த ஜோடி 15-12 ஏன்ற புள்ளிக் கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றியது. தொடர்ந்து சிறப்பாக ஆடிய ஷாலினி ஜோடி 2-வது செட்டையும் அதே புள்ளிக் கணக்கில் கைப்பற்றியது. இதில் ஷாலினி ஜோடி 15-12, 15-12 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

## தேநீர் கோப்பை...

*06 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

ஐந்து முடக்கு தேநீர்தான் ஊற்றமுடியும். அதுகூட எப்போதும் இல்லை. யாருடனாவது வீட்டில் இருந்து தேநீர்க் குடிக்க விரும்புகின்ற போதுதான்.

நான் தேநீர்ப் பிரியன் இல்லை என்பதற்காக தனக்கும் தேநீர் வேண்டாம் என்று என் மனைவியும் தேநீர் குடிக்கும் பழக்கத்தை நிறுத்திக் கொண்ட அந்த மனசு வேறு யாருக்கு வரும்?. அதேபோல் எங்கும் போய் விட்டால் அவர்களின் மனதை நோகடிக்கக் கூடாது என்பதற்காக தேநீர் குடிக்கும் என்னவளின் மனிதாபிமானம், இப்படி என் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் ஜீவனாக என் மனைவி இருப்பது எனக்கு இறைவன் தந்த வரம் அவ்வளவுதான் சொல்வேன்.

தேநீர்க் கோப்பைகளை தேநீர்க் கடைகளில் ஒவ்வொருவரும் பிரயோகிப்பதைப் பார்த்து எனக்குள்ளாகவே சிரித்துக் கொள்வேன். சாதாரணமாக ஒருவர் வலது கையால் தேநீர்க் கோப்பையைப் பிடித்துக் குடிப்பது வழக்கம். அப்படித்தான் குடிப்பார்கள் என்பதற்காக இன்னொருவர் இடது கையால் தேநீர் கோப்பையைப் பிடித்து தூக்கிக் குடிப்பர். வாய் வைத்துக் குடிக்கும் பகுதி வலது பக்கமும் இடது பக்கமுமாக மாறிவரும். சிலர் இந்த இரண்டு பக்கமும் யாரும் குடித்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு கைப்பிடி பக்கத்துக்கு எதிர்ப்பக்கமாக அதாவது வலதுமில்லாமல், இடதுமில்லாமல் நடுப்பக்கமாக வாய்வைத்துக் குடிப்பார். இன்னும் சிலர் இந்த மூன்று முறையையும் தவிர்த்து கைப் பிடிக்கு பக்கமாகவே வாய் வைத்து மிகுந்த சிரமத்தோடு தேநீர்க் குடிப்பார்.

இப்படி தேநீர்க் குடிப்பதில் என்ன திருப்தி இருக்க முடியும். கடைக்காரர்கள் தேநீரை ஊற்றுவதற்கு முன்னர் தேநீர்க் கோப்பைகளை சுடு தண்ணீரில் கழுவ வேண்டும். ஒவ்வொரு தேநீர்க் கோப்பையோடும் கை துடைக்கும் பேப்பர் (ரிசு) தர வேண்டும். பணம் கொடுத்து தேநீர்க் குடிக்கவரும் ஒருவரை அருவருப்பில்லாமல் தேநீர்க் குடிக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

தேநீர்க் கோப்பைகளை இலையான் மொய்க்கும்படி வைத்திருக்கக் கூடாது. வீட்டுக்கு வரும் விருந்தாளிக்கு முதல் பறிமாற்றம் தேநீர் என்பதால், தேநீர் வழங்கல் மிகச் சுத்தமாகவும், விருப்பத்துக்குக்குரியதாகவும் இருப்பது நல்லது.

தேநீர்க் கோப்பைகளுக்கு குளிர் பிடித்து நடுங்குவதுமுண்டு. அந்த விநாடிகள் விசித்திரமானவை. சூடான தேநீரை ஊற்றியிருக்கும் தேநீர்க் கோப்பைக்கு எப்படி குளிர் நடுக்கம் ஏற்படும் என்று திரும்பிப்பார்க்க வேண்டாம். வரும் அவ்வளவுதான். பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டார் சுற்றியிருக்க, பெரியவர் ஒருவர் சொல்வார் 'சரியப்பா பொண்ணைப் பார்க்க வேணுமாம். கையில தேத்தண்ணியைக் கொடுத்து அனுப்புங்கப்பா' என்று சொன்னாலும் அதுவரை மனசுக்குள் நடுங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கைகளில் தேநீர்க் கோப்பைகள் அடுக்கிய 'ட்ரே' கொடுக்கப்படும். அதை ஏந்திக் கொண்டு ஒவ்வொரு அடியையும் பக்குவமாக வைத்து பெண் வரும் போதே தேநீர்க் கோப்பைகள் நடுங்க ஆயத்தமாகும். அப்போது அந்தப் பெரியவர் சொல்வார், "என்னம்மா தலையக் குனிந்து கொண்டே வார...கவனம் இப்புடியே வந்து ஆக்கள் மேல தேத்தண்ணிய ஊத்தப் போற கொஞ்சம் நிமிர்ந்து பார்த்துக்க, மாப்பிள்ளைக்கே முதலில குடுத்துட்டு அப்புறமா மத்தவங்களுக்குக் குடு. என்பார்.

அப்போதுதான் தேநீர்க்கோப்பை நடுங்கும் பெண்ணுக்கு. அந்தப் பெரியவரைக் கட்டி வைத்து நாலு சாத்து சாத்தினால் பரவாயில்லை என்ற எண்ணம் தோன்றும். பெண் பார்க்கப்போய் மனைவியின் கையால் முதலில் தேநீர் வேண்டிக் குடித்த கணவன்களுக்குத் தெரியும் தேநீர்க் கோப்பைகளுக்கு குளிர் பிடிக்கும் மாயா ஜாலம்.

அதே நேரத்தில் தேநீர்க்கோப்பையை வாங்கிக் கொண்டே மருமகளை ஒரு துலாவு துலாவிப் பார்க்கும் மாமியார்கள் அந்த சில நொடிப்பொழுதில் மாமியார் வெளிப்படுத்தும் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நிமிர்வதற்குள் மாப்பிள்ளையையும் ஒரு மின்னல் நேரத்துக்குள் பார்த்து விட வேண்டும், மணப் பெண்ணின் அத்தனை அவசரமும் அந்த நொடிப் பொழுதில் அதுதான் சுகம்.

முதல் தடவை வரும் மாப்பிள்ளையே அந்தப் பெண்ணை திருமணம் முடித்துக் கொள்ள வேண்டும். அதுதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இரண்டாவதாக வரும் மாப்பிள்ளைக்கு வழங்கப்படும் தேநீர்க் கோப்பைக்கு அந்த நடுக்கம் பிடிப்பதில்லை. எல்லாப் பெண்ணின் முதல் வேண்டுதலே அதுதான். முதல் மாப்பிள்ளையே தன்னைப் பிடித்திருப்பதாகச் சொல்ல வேணும். அதைத்தான் தேநீர்க்கோப்பைகள் எழுப்பும் மெல்லிய ஓசை வெளிப்படுத்துகிறது. தேநீர்க் கோப்பையின் மொழி எத்தனை ஆண்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லது தெரியப்போகிறது.

பெண்களே இப்போதெல்லாம் தேநீர்க்கோப்பைகள் பேசி யாருக்கும் புரியாது. நீங்களே உதடு பிரித்துப் பேசுங்கள். உங்கள் மௌனங்களைத் தேநீர்க் கோப்பைகளைத் தவிர யாருக்கும் மொழி பெயர்க்கத் தெரியாது...

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## முன்முனைப் போட்டிகள்!

**3 நாடுகள்** கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலியா -மேற்கிந்திய அணிகள் மோதுகின்றன. இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் -மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான 3 நாடுகள் கிரிக்கெட் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கி 24ஆம் திகதி வரை மலேசியாவில் நடக்கிறது. தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியா --மேற்கிந்திய அணிகள் மோதின. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரண்டு முறை மோதும். லீக் ஆட்டங்களின் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டியில் மீண்டும் பலப்பரீட்சை நடத்தும். இறுதி ஆட்டம் வருகிற 24ஆம் திகதி கோலாலம்பூரில் நடக்கிறது.


**3 நாடுகள் போட்டிக்கான அட்டவணை விபரம் வருமாறு:**

செப்.12: ஆஸ்திரேலியா - மேற்கிந்தியா
செப்.14: இந்தியா - மேற்கிந்தியா
செப்.16: ஆஸ்திரேலியா - இந்தியா
செப்.18: ஆஸ்திரேலியா - மேற்கிந்தியா
செப்.20: இந்தியா - மேற்கிந்தியா
செப்.22: ஆஸ்திரேலியா - இந்தியா
செப்.24: இறுதிப்போட்டி.

## விடைபெறுகிறார் நவரத்திலோவா!

**பெண்கள் டென்னீஸில் மிக நீண்ட காலம் ஆதிக்கம் செலுத்தி வந்த மார்ட்டினா நவரத்திலோவா அமெரிக்க ஓபன் கலப்பு இரட்டையரில் சாம்பியன் பட்டம் வென்ற கையுடன் விடைபெற்றார். 49 வயதான இவர், 59 கிராண்ட்ஸ்லம் பட்டங்கள் வென்று சாதனை படைத்துள்ளார்.**

**1956ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் திகதி பிரிக்கப்படாத செக்கோஸ்லோவாக்கிய நாட்டில் பிறந்த நவரத்திலோவா, டென்னீஸ் மீது கொண்ட காதலால் அமெரிக்காவில் குடியேறினார்.**




**1981ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியுரிமை பெற்றார். 331 வாரங்கள் உலகின் முதல் தர வீராங்கனையாகத் திகழ்ந்த நவரத்திலோவா, மொத்தம் 32 முறை கிராண்ட்ஸ்லம் ஒற்றையர் இறுதியில் விளையாடி 18 முறை சாம்பியன் ஆனார். 9 முறை விம்பிள்டன் சாம்பியனான இவர், 1982லிருந்து 1987வரை தொடர்ச்சியாக ஆறு முறை விம்பிள்டன் கிண்ணத்தை வென்று சாதனை படைத்தார்.**

**அமெரிக்க ஓபன் ஒற்றையர் பிரிவில் 1983,84,86,87ஆம் ஆண்டுகளில் பட்டம் வென்றார்.**

**3 அவுஸ்திரேலிய ஓபன் (1981,83,85) மற்றும் 2 பிரான்ஸ் ஓபன் (1982,1984) ஒற்றையர் பட்டங்களையும் கைப்பற்றியுள்ளார். டென்னீஸ் போட்டிகளைப் பொறுத்தவரை ஒற்றையர் பிரிவில் சிறப்பாக விளையாடுபவர்கள் இரட்டையர் பிரிவில் சோபிப்பதில்லை. இரண்டு பிரிவுகளிலும் அபாரமாக விளையாடிய ஒரே டென்னீஸ் நட்சத்திரம் நவரத்திலோவாகத்தான் இருப்பார்.**

**1987ஆம் ஆண்டு நடந்த விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் போட்டிகளில் ஸ்டெபி கிராபை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.**

**தனது 31 ஆண்டு கால டென்னீஸ் வாழ்க்கையில் கிராண்ட்ஸ்லம் இரட்டையர் பிரிவில் 31 பட்டங்களும் கலப்பு இரட்டையர் பிரிவில் 10 பட்டங்களும் கைப்பற்றி இருக்கிறார். 1984ஆம் ஆண்டு இவர் 4 கிராண்ட்ஸ்லம் இரட்டையர் பட்டங்களையும் தன்வசமாக்கினார்.**

**ஒற்றையர் பிரிவு போட்டிகளில் 167 பட்டங்கள் வென்றுள்ள ஒரே நபர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரர் ஆன இவர், 178 இரட்டையர் பட்டங்களும் வென்றுள்ளார். இவர் 1994ஆம் ஆண்டு விம்பிள்டனுடன் ஒற்றையர் பிரிவு போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். மீண்டும் 2000ஆம் ஆண்டில் தனது டென்னீஸ் வாழ்க்கையைத் துவக்கிய இவர் இரட்டையர் போட்டிகளில் விளையாடி வந்தார்.**

**மொத்தம் 1653 போட்டிகளில் விளையாடியுள்ள நவரத்திலோவா 1440 வெற்றிகளைப் பெற்றுள்ளார். தனது 345 ஆவது பட்டமான இந்த ஆண்டு அமெரிக்க ஓபன் கலப்பு இரட்டையர் பட்டத்துடன் டென்னீஸ் வாழ்க்கைக்கு விடைகொடுத்துள்ளார்.**

## எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 1

7,16,25 போன்ற திகதியில் பிறந்து, திகதி மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் கேது, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். ஏழு என்ற கேது இவர்களுக்கு நல்ல குணத்தையும், நல்ல அறிவையும் சிந்தனா சக்தியையும் கொடுத்து, உயர்ந்த மனிதராக உருவாக்கும். கவிதை, கதை, கலை, கலாசாரம் போன்றவற்றில் நாட்டம் உள்ளவர்களாக வாழ்வர். தன்னைச் சார்ந்தவர்களுக்கும், தனது குடும்பத்திற்கும், தனது நாட்டிற்கும் பெருமை தேடித் தரும் உயர்ந்த எண்ணங்கள் கொண்டவர்களாக வாழ்வர். இளமையிலே காதல் வயப்படக்கூடியவர்கள். தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமான நல்ல எண்ணில் பெயர் அமைந்துவிட்டால் நல்ல குடும்ப வாழ்க்கை நடத்திச் சிறப்பாக வாழ்வர். பெயர் பொருத்தமற்று அமைந்திருந்தால், குடும்ப வாழ்க்கையில் திருப்தி பெற முடியாது தவிப்பர். சிலர் காதல் திருமணமும், அப்படிச் செய்தபின் அதனால் குழப்பமும், பிரிவும் ஏற்பட்டு வேதனை அடைகின்றனர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்தவர்கள் எவ்விதப் பங்கமுமின்றிச் சிறப்பாக வாழ்வர்.

ஈவு, இரக்கம் கொண்ட இவர்கள் தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்குபவர்; பிறருக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு தனக்கு வந்ததாக எண்ணி வேதனைப்படுவர்; மத விஷயங்களில் மிகுந்த நாட்டம் உள்ளவர்களாகவும், அதைப்பற்றி ஆய்வு செய்பவர்களாயும் விளங்குவர். இதனால் பலர் இவர்களுக்கு வேதாந்தி என்று பெயர் சூட்டுவர். தனது மதத்தில் இவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பதால் மதக் கோட்பாடுகள் அனைத்தும் வாழ்க்கையின் வழிகாட்டி என்று பின்பற்றுவர். மகிழ்ச்சியான நேரங்களில் சகஜமாகப் பழகினாலும் தனிமையில் இருக்கும் போது தனது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை எண்ணி வருந்துவர்.

இன்னும் சிலர் குடும்ப வாழ்க்கை குழப்பமானதாக அமைந்து மனவேதனைப் படுவதையும் மறுமணம் செய்து கொள்வதையும்நான் கண்டிருக்கிறேன். ஆனால் பெயர் பொருத்தமானதாக நல்ல எண்ணில் அமைந்துவிட்டால் நல்ல குடும்ப வாழ்க்கை, நல்ல பண வசதி, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் ஆகியவற்றைப் பெற்று வாழ்கின்றனர். இன்னும் சிலர் எல்லாவிதத்திலும் சிறப்புற்று வாழ்ந்தாலும், தனக்கு உடல்நிலை சரியில்லையே, மன நிலை சரியில்லையே, குடும்ப வாழ்க்கை சரியில்லையே என்று தன்னந்தனியாக அழுதுகொண்டிருப்பர். எல்லோரிடமும் அன்பாகப் பழகும் இவர்கள், பிறருக்குத் தீங்கு செய்யும் காரியங்களில் இறங்க மனம் கூசுவர்.

பார்த்த உடனே இவர்கள் நல்லவர் என்று மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி பழகுவர். சில நேரங்களில் ஊமை போல் இருந்தாலும், பேசுகின்ற சந்தர்ப்பம் வரும்போது தனது கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுவர். வசீகரமான தோற்றம் உடையவர்கள்; எளிமையான ஆடை அணிந்தால் கூடக் கவர்ச்சியாகவும் தூய்மையாகவும் காட்சியளிப்பர். ஆடம்பரமான கவர்ச்சிப் பொருளில் இவர்கள் மனம் நாட்டம் கொள்ளும். கலை சம்பந்தமான அனைத்து விஷயங்களும் இவர்கள் மனத்திற்குப் பிடித்தவையே. பிறருக்காக தனது நேரத்தை ஒதுக்கி உதவி செய்ய முன்வருவர். புகழ்ச்சிக்கு மயங்காத இவர்களை மற்றவர்கள் புகழ்ந்து பேசினால், எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று தனக்குள்தானே தீர்மானித்துக் கொள்வர்.

உண்மையைத் தவிர போலிகளை வெறுப்பதால் மற்றவர்களிடம் அபிப்பிராய பேதம் உண்டாகிக் கொண்டே இருக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள், பலர் உத்தியோகத்திலும், சிலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றார்கள். இவர்களுக்குக் கஷ்டம் வரும்போது ஆண்டவனை எண்ணிக் கொண்டே அழுவர். இவர்களுக்குப் பொருத்தமான எண்ணில் வாழ்க்கைத் துணைவர் அமைந்து விட்டால் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் பொருத்தமில்லாத வாழ்க்கைத் துணைவர் வந்தால் இவர்களது குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாய் ஆகிவிடும்.

பெயர் பொருத்தமாக அமையப் பெற்றவர்கள் பெரும் பதவி வகிப்போர்களாகவும், சிறந்த டாக்டராகவும், இஞ்ஜினியராகவும், கலைத்துறையில் தேர்ச்சி பெற்றவராகவும், அரசியல்வாதியாகவும், வசதி படைத்த தொழில் அதிபர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களுக்குத் தனக்கு வரப்போகும் கெடுதல்களையும் நல்லவைகளையும் கனவின் மூலம் முன் கூட்டி அறிந்து கொள்ளும் ஆற்றல் இயற்கையில் இருக்கிறது. எப்பொழுதும் தனக்கு வரப்போகும் எதிர்கால வாழ்க்கையையும், கடந்த கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டு இருப்பர்.

உடம்பிற்கு ஒரு சிறிய வியாதி வந்தாலும் உடனே குழம்பிவிடுவர். பார்ப்பதற்குத் தைரியசாலி போல் தெரிந்தாலும் மனபலம் குறைந்தவர்களே என்று கூறலாம். இவர்களுக்கு வழிபாட்டால் தனக்கு வரப்போகும் கெடுதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் பெயர் பொருத்தமாக அமையாதவர்கள் பல்வேறு வழியில் மனவேதனைப்படுவதையும் நான் கண்டிருக்கிறேன். சிலருக்குக் குடும்பப் பிரச்சினையாக இருந்தாலும் பலருக்கு ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு வேதனை அடைவதை நான் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### *தொழில்*

இந்த ஆதிக்கக்காரர்களுக்கு ஆடம்பரம் சம்பந்தமான பகட்டுப் பொருள் அனைத்தும் சிறந்தவையே. துணிவகைகள், நெருப்பு சம்பந்தமானவை, உலோகம் சம்பந்தமானவை, வாகனம், கல் சம்பந்தமானவை, கமிஷன், ஏஜென்சீஸ் போன்வற்றால் முன்னேற்றம் அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் இவர்களது உழைப்பு மற்றவர்களுக்குப் பயன்பட்டுவிடும். அதோடு மேற்குறிப்பிட்ட தொழில்களினால் சிறந்த முன்னேற்றத்தைப் பெற முடியாது. பெயர் ஒழுங்காக அமைந்தவர்களுக்கு முன்னேற்றம் சிறப்பாக இருக்கும்.

### *நோய்*

இவர்களுக்கு மனவியாதி, தேவையற்ற குழப்பங்கள் காரணமாக வியாதி, பல் சம்பந்தமான வியாதி, வயிற்றுக் கோளாறு, பெயர் ஒழுங்காக அமையாதவர்களுக்கு ஆபரேஷன், இருதய வலி வந்துவிடும். பெயரை 42 வருமாறு அமைத்துக் கொண்டால் நோய் உள்ளவர்கள் தனது நோயிலிருந்து விடுபடலாம்.

### *பெயர் அமைக்கும் முறை*

கேது, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரனாகிய 6,15,24,33,42,51,60,69 போன்ற எண்களிலும் சூரிய ஆதிக்கமான 19,37,46,64 போன்ற எண்களிலும், பெயரை அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழலாம்.

### *பின்பற்ற வேண்டியவை*

யோகமான எண் - 6,2,1.
யோகமான திகதிகள் - 6,15,24,1,10,19,28,2,11,20,29.
யோகமான மோதிரக்கல் - மூன் ஸ்டோன், முத்து, வைடூரியம், தங்கபுஷ்பராகம், கனகபுஷ்பராகம்.
யோகமான நிறம் - பச்சை, மஞ்சள், நீலம், சந்தன நிறம்.
ஆகாத திகதிகள் - 9,18,27; 8,17,26.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.

*அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 2 பற்றிப் பார்ப்போம்.*

# சைமன் பொலீவார்
# (- 1783 - 1830 )

கொலம்பியா, வெனிசூலா, ஈக்குவடோர், பெரு, பொலீவியா ஆகிய ஐந்து தென் அமெரிக்க நாடுகளையும் ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்ததில் பெரும் பங்கு கொண்டதற்காகத் 'தென் அமெரிக்காவின் ஜார்ஜ் வாஷிங்டன்' என்று போற்றப்படுபவர் சைமன் பொலீவார். இவரைப் போல் ஒரு கண்டம் முழுவதன் வரலாற்றிலும் தலையாய பங்கேற்ற அரசியல் தலைவர் வேறு எவரும் இருக்க முடியாது.

வெனிசூலா நாட்டிலுள்ள கார்காஸ் நகரில் 1783ஆம் ஆண்டில் ஸ்பானிய மரபில் வந்த ஓர் உயர் குடியில் பொலீவார் பிறந்தார். இவர் தமது 9ஆம் வயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். இவரது இளமைப் பருவத்தில் பிரெஞ்சு மறுமலர்ச்சி இயக்கக் கொள்கைகளும், கோட்பாடுகளும் இவரைக் கவர்ந்தன. ஜான் லாக் ரூசோ, வால்ட்டேர், மாண்டேகு போன்ற தத்துவஞானிகள் நூல்களை இவர் கருத்தூன்றிப் படித்தார்.

இளைஞர் பொலீவார் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றார். ரோம் நகரில் 1805ஆம் ஆண்டில் அவன்டைன் குன்றின் உச்சியில் நின்று, "ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து எனது தந்தையர் நாட்டை விடுவிக்கும் வரையில் நான் ஓய்ந்திருக்க மாட்டேன்" என்ற தமது புகழ்பெற்ற சூளுரையைப் பொலீவார் எடுத்துக் கொண்டார்.

நெப்போலியன் போனபார்ட் 1808ஆம் ஆண்டில் ஸ்பெயின் மீது படையெடுத்தார். ஸ்பெயினை வென்ற பிறகு அவர் தம்முடைய சொந்தச் சகோதரனையே ஸ்பானிய அரசின் தலைவராக நியமித்தார். ஸ்பானிய அரச குடும்பத்தினரை அரசியல் அதிகாரத்திலிருந்து நெப்போலியன் நீக்கியதன் வாயிலாக, தென் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குத் தங்களுடைய அரசியல் சுதந்திரத்திற்காகப் போராட்டம் தொடங்குவதற்குப் பொன்னான வாய்ப்புக் கிடைத்தது.

ஸ்பானிய ஆட்சிக்கு எதிரான புரட்சி வெனிசூலாவில் 1810ஆம் ஆண்டில் தொடங்கியது. அந்தப் புரட்சியில் வெனிசூலாவின் ஸ்பானிய ஆளுநர், ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். 1811ஆம் ஆண்டில் முறையான சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. அதே ஆண்டில், புரட்சி இராணுவத்தில் பொலீவார் ஓர் அதிகாரியானார். ஆனால், அதற்கு அடுத்த ஆண்டிலேயே ஸ்பானியப் படையினர் வெனிசூலாவை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். புரட்சித் தலைவர் பிரன்சிஸ்கோ சிறையில் அடைக்கப்பட்டார். பொலீவார் நாட்டை விட்டு ஓடினார்.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பல போர்கள் நிகழ்ந்தன. அந்தப் போர்களில் புரட்சிப் படையினருக்குச் சில தற்காலிக வெற்றிகள் கிடைத்தன. அடுத்துப் பல படுதோல்விகளை அது தழுவியது.



## உலகை வியக்க வைத்தவர்கள்

எனினும், பொலீவார் சற்றும் மனந்தளரவில்லை. சுதந்திரப் போரில் ஒரு திருப்புமுனை 1819ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்போது பொலீவார் ஓர் சிறிய படை அணிக்குத் தலைமை தாங்கி ஆறுகளையும், சமவெளிகளையும், ஆண்டீஸ் மலையின் உயர்ந்த மலைக் கணவாய்களையும் கடந்து சென்று, கொலம்பியாவிலிருந்த ஸ்பானியப் படைகளைத் தாக்கினார். அங்கு 1819ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் நாளன்று நடந்த முக்கியமான 'போயாக்கா சண்டை'யில் இவர் வெற்றி பெற்றார். இந்த வெற்றி உண்மையிலேயே முக்கியத் திருப்பு முனையாக அமைந்தது. இதன்பின், 1821ஆம் ஆண்டில் வெனிசூலாவும், 1822ஆம் ஆண்டில் ஈக்குவேடாரும் ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப் பெற்றன.

இதற்கிடையில் ஆர்ஜென்டீனாவில் விடுதலைக்காகப் போராடி வந்த ஜோஸ்டி சான் சார்டின் என்ற விடுதலை வீரர் ஆர்ஜென்டீனாவையும் சிலியையும் ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, பெருவின் விடுதலைக்காகப் போராட்டம் தொடங்கியிருந்தார்.விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரும் 1822ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் ஈக்குவடோரிலுள்ள குவாயாக்குவில் என்னுமிடத்தில் சந்தித்தனர். எனினும், ஸ்பானிய ஆட்சிக்கு எதிரான தமது முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும், ஒத்துழைப்பதற்குமான ஒரு திட்டம் குறித்து அவர்களுக்கு உடன்பாடு ஏற்படவில்லை. ஓர் அதிகாரப் போராட்டத்தில் பொலீவாருடன் போட்டிபோட மார்ட்டின் விரும்பவில்லை. அத்தகைய போட்டி ஸ்பானியருக்கே உதவியாக இருக்கும் என்று மார்ட்டின் கருதினார். அதனால் மார்ட்டின் இராணுவத் தலைமைப் பதவியிலிருந்து விலகி, தென் அமெரிக்காவிலிருந்து முழுவதுமாக வெளியேறிவிட முடிவு செய்தார். பொலீவாரின் படைகள் 1828ஆம் ஆண்டில் இன்றைய பெரு நாட்டை முற்றிலுமாக விடுவித்தன. 1825ஆம் ஆண்டில் மேல் பெருவிலிருந்து (இன்றைய பொலீவியா) ஸ்பானிய படைகள் முறியடிக்கப்பட்டன.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

இளந்திரையரின்ர பேட்டியப் படிச்சுப்போட்டு நம்ம வாசகர்கள் காட்டிய ஆர்வம் ரொம்ப சந்தோசமாக இருக்குதுங்கோ. அதிலையும் மன்னாரிலிருந்து வாசகி ஜெனிற்றா எழுதியிருக்கிற அபிப்பிராயக் கடிதம் எனக்குப் பெருத்த சந்தோசமுங்கோ. நான் என்ன செய்ய முடியும். அவைக்கு பதில் சொல்ல வசதியாக கேள்வியைக் கேட்டு என்னாலை நடிக்க முடியாது.

இந்தா பாருங்கோ, ஒரு காலத்தில தொடர்புக்கே வராத தம்பி தமிழ்ச்செல்வன், இளந்திரரயரின்ர பேட்டியைப் பார்த்துப் போட்டு ரொம்ப கொதிப்பாகிப் போயிட்டார்.

"ஹலோ...யார். கா.பூ.வே?"

"ஆமா...கா.பூ. தான்...நீங்கள யாருன்னு சொல்லலையே..."

"நான் தமிழ்ச்செல்வன்."

" அடடா தம்பியே...சொல்லுங்கோ...ஒரு நாளும் இல்லாம நீங்களே கோல் எடுத்திருக்கியள்.

"எடுக்கக் கூடாதெண்டுதான் இருந்தனான். எடுக்கும்படியாகச் செய்துபோட்டியளே!

"சா...சா...அப்பிடியெல்லாம் அபாண்டமாகச் சொல்லக்கூடாது. நான் அப்புடி தம்பிக்கு மனசு நோகுற மாதி" என்ன செய்தனான்."

"இல்லையெண்டால், நான் இருக்கேக்க ஏன் இளந்திரையனிட்ட பேட்டி எடுத்தனீங்கள்.

"அது வந்து தம்பி...அவர்தானே உங்கட இராணுவப் பேச்சாளர். அதாலதான் அவரிட்டக் கேட்டனான்... ஏன் அதில ஏதும் பிரச்சினையே!"

"பிரச்சினைதான்...அவர் இராணுவப் பேச்சாளர் எண்டால், நான் மட்டும் என்ன மரக்கறியே வித்துக்கொண்டிருந்தனான்...நானும் இராணுவமாக இருந்துதான் பொலிரிக்ஸ்ஸுக்குள்ள வந்தனான்.

"அது சரிதான் தம்பி...உங்களிட்டை பொலிடிக்ஸ் எண்டால் கேட்கலாம்."

"இராணுவ ரீதியாகக் கேட்டுப் பாருங்கோவன். நான் பதில் சொல்லாட்டில் பிறகு சொல்லுங்கோவன்."

"சரி, தம்பி... 'கடலாலையோ, ஆகாயத்தாலையோ போக்குவரத்து நடந்தால் அதுக்கு நீங்கள் பொறுப்பு இல்லை" எண்டு மிரட்டியும் போக்குவரத்து நடந்திருக்கே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்?"

"இந்த இறைமையுள்ள நாட்டில எங்கட சொல்லுக்கு அவ்வளவுதான் மரியாதை எண்டதைத்தான் வெளிப்படுத்தியிருக்கு...இப்பவெல்லாம் யார் மதிக்கினம் எங்களை."

"என்ன தம்பி! ஏதோ விரக்தியில கதைக்குமாப் போலை கதைக்கிறீர்."

"விரக்தி ஒண்டுமில்ல. திருமலையில சம்பூர் எங்கட கையை விட்டுப் போனதாலை ஏதோ எல்லாம் குடி கெட்டுப் போனமாதிரிக் கதைக்கினம். அவை அப்பிடி கதைக்கிறதிலையும் நியாயம் இருக்குத்தான்."

"உங்கை சண்டை நடக்கேக்க உவர் முந்திரிக் கொட்டை இளந்திரையன் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார்...எங்கட போராளிகள் விடாயினம். கடும் சமர் புரிந்து கொண்டிருக்கினம். வலிந்த தாக்குதல் - விழுந்த தாக்குதல் எண்டெல்லாம் அகராதியில படிச்ச சொற்பதங்களைப் போட்டு அகராதித்தனமாகக் கதை விட்டுக் கொண்டிருந்தவர் கடைசியில சம்பூரில என்ன நடந்தது? அவன் ஆமிக்காரன் கண்மண் தெரியாமல் மல்டியைப் போட்டு ஒரு காட்டு காட்டிவிட்டான். எங்கட பொடியள் ஒரு தொகையானவை வீரச்சாவடைந்திட்டினம். அந்தத் தொகையை நான் சொல்லக் கூடாது. நீங்களே ஊகிச்சுக் கொள்ளுங்கோவன். அதிலையும் ஒரு விஷயம் - பெடியள் உப்பிடிச் சாகினம், உவர் இளந்திரையன் சொல்லுறார், அவையள் தங்கட இன்னுயிரைத் தந்திருக்கினமாம் எண்டு. உப்பிடி வசனங்களைப் போட்டு கதைக்கலாம் தெரியுமோ. நடந்தது என்ன? புலிகள் பலமிழந்திட்டினம். பயங்கரவாதத்துக்குத் தக்க பதிலடி கொடுக்கப்பட்டிருக்குது எண்ட கணக்கா அரசாங்கம் நினைக்குது. இப்ப கப்பலையும், விமானத்தையும் அனுப்பினம். எங்களாலை ஒண்டும் செய்ய முடியல்லை. ஒண்டச் சொல்ல வேணுமெண்டால் கடலிலையும் முன்னம் மாதிரி ஏலாது. அவன் நேவிக்காரன் இப்பவெல்லாம் தாறுமாறாக அடிக்கிறான் தெரியுமா. அப்ப உதுகளை விளங்கிக் கொள்ளாமல் இராணுவப் பேச்சாளர் எண்டதுக்காக மொக்குத்தனமாகக் கதைக்க முடியாது."

"போதும் தம்பி...கொஞ்சம் களைப்பாறுங்கோ...யாருடைய கோபத்தையோ உப்பிடிக் கொட்டிப் போட்டியள்...அதுகள் கிடக்கட்டும். அதென்ன கடைசியா நோர்வே தூதுவரை சந்திக்கும்போது, இனி சமாதானத்துக்கும் - பேச்சுக்கும் சந்தர்ப்பம் இல்லை எண்டும் சொல்லிப் போட்டியளோ."

"உண்மை தானே...இன்னும் எத்தனை நாளைக்குத்தான் உப்பிடி உத்தமமானவையளாக நடிக்க முடியும். நாங்களும் மனிசர்தானே...சம்பூரை பறி கொடுத்துப் போட்டு எந்த முகத்தோடை போய் பேசிறது. இராணுவப் பேச்சாளர்மாருக்கு பிரச்சினையில்லை. அவை இங்க காட்டுக்குள்ள பதுங்கிக் கொண்டு இருப்பினம். நானெல்லா போய் ஆக்களைச் சந்திக்க வேணும்.

இன்னொரு விஷயம் தெரியுமோ? நான் சிரிக்கிறதையே வச்சு உண்மையைக் கண்டு பிடிச்சுப் போடுறாங்கள் தெரியுமே."

"ஓ...நல்ல காலம், ஞாபகப்படுத்தினியள். எப்புடித் தம்பி உங்களாலை உப்பிடிச் சிரிக்க முடியுது."

"அதென்ன நான் சந்தோசமான மனசோடையே சிரிக்கிறன். இயலாமையாலதான். உங்களுக்குத் தெரியும் எண்டு நினைக்கிறன், ஒரு மனிசனுக்கு இயலாமையாலதான் கோபம் வரும். இல்லாட்டில் சிரிப்பு வரும். எனக்கும் கோபம் தான் வருகுது. ஆனால் கோபப்பட்டால் என்ர முகம் என்ன கோலத்தில போகும் எண்டு நினைச்சுக் கூடப் பார்க்க முடியுதில்லை. என்ர நிலைமையைப் புரிஞ்சுகொள்ளாமல், சில பேர் உப்பிடிக் கேள்வி கேட்கினம்.

"சரி, தம்பி...உங்கட வேதனையை நான் புரிஞ்சு கொள்ளுறன். உங்களுக்குத் தேவை ரெஸ்ட் எண்டதாலை நல்லா ரெஸ்ட் எடுங்கோ. நான் பிறகு ஒருக்கால் தொடர்பு கொள்ளுறன். சரியோ!!"

எண்டு வச்சிட்டேனுங்கோ...


**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்
(14.09.2006 தொடங்கி 20.09.2006 வரை)


## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை


சிங்கம் - சூரியன், வெள்ளி. கன்னி - புதன், செவ்வாய், கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. கர்க்கடகம் - சனி. சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்ப மேன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பயம், செலவு மிகுதி, நண்பர்கள் உதவி, மனக்குறையதிகம், வீண் மனஸ்தாபம், தூர இடப் பயணம், குடும்ப சுகம், உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.




**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, கௌரவம், குடும்பக் கலகம், உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷட நாள்:- வியாழன்.
அதிர்ஷட இலக்கம்:- 05.




**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மாற்றம், செலவு மிகுதி, வரவு குன்றும், பணியாளர் உபத்திரம், பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.




**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் பகை, செலவதிகம், காரியானுகூலம், மனப்பயம், புதிய முயற்சி, பெரியோர் சகாயம், குடும்ப மேன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலுள்ளவர்கள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.




**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பகை, பணியாளர் தொல்லை, மனக்குறையதிகம், பெரியோர் நட்பு, உயர்ந்த எண்ணம், குடும்பக் கஷ்டம், உத்தியோக மாற்றம், புதிய பதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.




**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, பணவரவு, உயர்ந்த நிலை, அந்நியர் உதவி, வெளியிட பிரயாணம், குடும்பச் சுகம், பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.




**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் உயர்ச்சி, பலவித பேறு, மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, பணக் கஷ்டம், உறவினர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம் :- 06.




**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, பணவரவு, பெரியோர் சகாயம், தேகசுகக் கஷ்டம், வைத்தியச் செலவு, குடும்பக் கவலை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 07.



**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பயம், பணக் கஷ்டம், கடன்படல், தூர இடப்பயணம், மனப்பயம், உறவினர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மாற்றம், பண விரயம், மனக்கவலை, வெளியிடப் பிரயாணம், குடும்ப நன்மை, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகத் தொல்லை, மனக்கஷ்டம், மாணவர் கல்விக் உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் சிறப்பு, பணவரவு, உயர்ந்தோர் நட்பு, பிரயாண சுகம், தேகசுக நன்மை, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் கவலை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் குழப்பம், மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)

தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத


இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம் www.nlb.lk

## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

றோய் பெலிசியன் - ஜெஸ்மி தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன். றொய்ஸ்ரன் தனது முதலாவது பிறந்த நாளை பிரான்ஸ், Villeneue St. Georges இல் உள்ள தனது இல்லத்தில் 17.09.2006 அன்று மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார்கள், சித்தப்பாமார்கள், மாமி அனுஷியா - மாமா அன்ரன் (ஜெர்மனி) மற்றும் மாமிமார்கள், மாமாமார்கள், மச்சான் அபினாஸ் மற்றும் மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறையருள் பெற்று, பல்கலையும் கற்று, சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : ஆர்.ஞானப்பிரகாசம் (அப்பப்பா).



றொய்ஸ்ரன் /12.09.2006



நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எரிபொருள் விலையேற்றம் மற்றும் பொருளாதர நெருக்கடி என்பன இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலும் ஒரு பிரச்சினைகளாக உள்ளன. இது பிரேசில் ரெயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த ஒரு காட்சியாகும்.

வேலை நிறுத்தம்


## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா மஹிதியா 15.09.2006 முஹமட் மஹதி

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை, மர்சூக் - ஆயிசா பேபி தம்பதியினரின் செல்வப் புதல்வர்களான பாத்திமா மஹிதியா, முஹமட் மஹதி இருவரும் தமது முதலாவது பிறந்த நாளை 15.09.2006 அன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு வாப்பா, உம்மா, சகோதரிகளான சஸ்னா, சவ்னா, பெரிய உம்மா, வாப்பப்பாமார், வாப்பம்மாமார், மூத்தப்பா, மூத்தம்மா, மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல் : வாப்பா, உம்மா



அடி

தற்காப்புக் கலை என்பது இப்போது உயிரைப் பணயம் வைத்து கற்றுக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

கற்களை, கொங்கிறீட்களை, ஐஸ்கட்டிகளைக் கையாலும் நெற்றியாலும் அடித்தும், முட்டியும் உடைப்பது வழமைதான். ஆனால் இங்கே சீனாவில் குவான்ஷூ பகுதியில் குங்ஃபூ கலையில் செங் கல்லை தலையில் அடுக்கி விட்டு இன்னொருவர் சுத்தியலால் அடிக்கும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது



அழகு

பூங்கொத்தோடு இரு பூங்கொடிகளாக இருக்கும் இவர்கள் போலந்தில் நடைபெற இருக்கும் லெபனான் அழகியும், இந்தியாவின் அழகி நடாஷா சுரியும் லெபனானில் நடந்த அழிவுகளுக்கு மத்தியிலும் அழகிப் போட்டியில் கலந்து கொள்ள லெபனான் ஆர்வம் கொண்டிருப்பது தனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்திருப்பதாகக் கூறுகிறார் லெபனான் அழகி.